# உதயன்




www.onlineuthayan.com

32: பக்கங்கள் | சுடர் 27 கதிர் 249 வள்ளுவர் ஆண்டு 2043 | ஆடி 17 புதன்கிழமை (01/08/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily | விலை ரூபா 25.00


# நெருங்குகிறது போராட்ட இலக்கு வாக்குகளை ஆயுதமாக்குங்கள்

## திருமலையில் சம்பந்தன் எம்.பி. அறைகூவல்

திருகோணமலை, ஓக.1

''ஏமாற்று அரசியல் நடத்துபவர்களுக்கு வாக்களிக்கப் போகிறீர்களா? அல்லது உரிமைக்காக அஹிம்சை வழியில் போராடுபவர்களுக்கு வாக்களிக்கப் போறீர்களா? நெருங்கி வந்து கொண்டிருக்கிறது எமது போராட்டத்தின் இலக்கு. அதற்காக தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை ஆயுதமாக்க வேண்டும்.''

– இவ்வாறு தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

திருகோணமலை, பத்தாம்குறிச்சியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வட மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தவேளை அரசு கிழக்குத் தேர்தலை நடத்துகின்றது.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு–

''முள்ளிவாய்க்காலுடன் தமிழரின் ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல, அஹிம்சைப் போராட்டமும் மௌனித்துவிட்டது என்று மஹிந்த அரசு கனவு கண்டது. ஆனால், முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் மற்

பார்க்க பக்கம் 4


**2** வலி. கிழக்கு பகுதியில் பெரும்பான்மை இன இளைஞரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் யுவதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**7** நெடுந்தீவு பகுதி மீனவர்களின் சுமார் ஐந்து லட்சம் பெறுமதியான வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டன.

**8** ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு கருணை மனுவை இந்திய ஜனாதிபதி பிரணாப் சாதகமாகப் பரிசீலிக்க வாய்ப்பு.

**15** பாடசாலையில் நடைபெற்ற பரீட்சைக்கு சென்ற மாணவி இதுவரை வீடுதிரும்பவில்லை என பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு


## ஆயுதக் கலாசாரமற்ற தேர்தல் கிழக்கில் நடத்தப்பட வேண்டும்

### அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, ஓக.1

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆயுத செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டு சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் - என்று அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் வலியுறுத்தியுள்ளன.

மேலும், இலங்கையில் சுதந்திரமான தேர்தல் ஒன்று நடத்தப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் இது தொடர்பில் தெரிவித்தபோது, ஆயுத கலாசாரம் அற்ற சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்று நடத்தப்படுவதை அமெரிக்கா விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான உயர்ஸ்தானிகர் பேர்னாட் சாவோஜ், இலங்கையில் சுதந்திரமான தேர்தல் ஒன்றை

பார்க்க பக்கம் 4

## பிரிட்டன் எம்.பிக்கள் நாளை யாழ். வருவர்

யாழ்ப்பாணம், ஓக. 1

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அடங்கிய குழுவினர் நாளை வியாழக்கிழமை நண்பகல் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலமைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களைச் சந்திப்பதற்கும் என அவர்கள் யாழ். மாவட்டத்துக்கு வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர், அவர்களின் செயலாளர்கள் 8 பேர் என மொத்தம் 18 பேர் நாளை நண்பகல் 1.30 மணிக்கு யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## ஆளுந்தரப்பின் வன்முறைகளை பொலிஸார் தடுக்காதிருப்பது ஏன்?

### ஐ.தே.க. ஆவேசம்

கொழும்பு, ஓக.1

மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் இடம்பெறுகின்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தேர்தல்கள் திணைக்களம் பொலிஸ் திணைக்களத்திற்கு நூறு லட்சம் ரூபா கொடுத்துள்ளது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, நூறு லட்சம் ரூபாவை வாங்கிக் கொண்டும் தேர்தல் வன்முறைகளைப் பொலிஸார் ஏன் தடுத்து நிறுத்தாதுள்ளனர் எனவும் கேள்வி எழுப்பியது.

தேர்தல்கள் திணைக்களத்தின் உத்தரவை மீறி ஆளுந்தரப்பே தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் அதிகமாக ஈடுபட்டு வருகிறது. தேர்தல் சட்டதிட்டங்களை

பார்க்க பக்கம் 4

## தரம் குறைந்த எரிபொருள் குறித்து மீண்டும் முறைப்பாடு

கொழும்பு,ஓக 01

தரம் குறைந்த எரிபொருள் காரணமாக, 5 ரயில் என்ஜின்கள், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் உட்பட பல வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தரம் குறைந்த டீசல் காரணமாக 30 பஸ்கள் பழுதடைந்துள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர்

பார்க்க பக்கம் 4

## பிளேக் தலைமையில் குழு அவசரமாக இலங்கைக்கு

### கூட்டமைப்பு, மு.காவுடனும் சந்தித்துப் பேச்சு



கொழும்பு, ஓக் 1

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் தலைமையிலான உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவொன்று அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது. அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிளேக் குழுவினரின் இந்த அவசரப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

றொபேட் ஓ பிளேக்குடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் சிலரும் இந்த உயர்மட்டக் குழுவில் உள்ள

பார்க்க பக்கம் 4

## உயர் டிப்ளோமாதாரிகள் நீதிமன்றில் அடிப்படை மனிதஉரிமை மீறல் மனு

### பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்து

யாழ்ப்பாணம், ஓக. 1

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவடிப்ளோமாப் பட்டதாரிகள் 228 பேர் உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை மனிதஉரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

இலங்கை அரச நிர்வாக ஆள்சேர்ப்புக்காக ஜூன் மாதம் பட்டதாரிப் பயிலுநர் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதற்கு உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் கடந்த மாதம் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டபோது உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆயினும் ஏனைய

பார்க்க பக்கம் 4

## தமிழர் பகுதியில் புத்தர் சிலைகள்; இலங்கையில் மதச் சுதந்திர மீறல்

### அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்ரன்,ஓக.1

இலங்கையில் சமுதாய மீறல்கள் மற்றும் மத பாகுபாட்டுச் சம்பவங்கள் கடந்த 2011ஆம் ஆண்டு பதிவாகியுள்ளதென அமெரிக்கா தெரிவித்துள்ளது.அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மத சுதந்திரம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வருடம் கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது பௌத்தர்கள் தாக்குதல் நடத்தினர். இவ்வாறான சில சமூக மீறல்

பார்க்க பக்கம் 4

## எச்சரிக்கையை கைவிட்டது ஆஸி.

கான்பரா,ஓக. 1

இலங்கையின் வட பகுதிக்கான பயண எச்சரிக்கையை ஆஸ்திரேலிய வெளிவிவகார திணைக்களம் கைவிட்டுள்ளது. ஆஸ்திரேலியாவிலிருந்து தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் நாடுகடத்தப்பட்டு சில நாள்களின் பின் இந்தப் பயண எச்சரிக்கை கைவிடப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

# கொல்லப்பட்ட தமிழ் ஊடகர்கள் சகலரும் புலி உறுப்பினர்களே

## 'லங்காதீப' ஆசிரியர் ஆரியநந்த கூறுகிறார்

**தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது உறுப்பினர்களை தமிழ் ஊடகங்களில் பணியாற்ற அனுப்பினார்கள். அந்த உறுப்பினர்களே– தமிழ் ஊடகவியலாளர்களே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்**

யாழ்ப்பாணம், ஒக. 1

கடந்த காலங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் ஊடக வியலாளர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களே.

இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டுள்ளார் சிங்கள வாரப் பத்திரிகையான லங்காதீப பிரதம ஆசிரியர் ஆரியநந்த தும்ப விகாவத்த. வடமேல் மாகாண ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழனம குருநாகலிலுள்ள இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

இன்றைய சூழலில் போதைவஸ்து வியாபாரம் செய்பவர்கள் தாராளமாகப் பத்திரிகைகளைப் புதிதாக ஆரம்பித்து நடத்தி வருகின்றார்கள். இதே போலவே அன்றைய சூழலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது உறுப்பினர்களை தமிழ் ஊடகங்களில் பணியாற்ற அனுப்பினார்கள். அந்த உறுப்பினர்களே– தமிழ் ஊடகவியலாளர்களே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள் என்றார்.

வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ ஆர் பழல்ல இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வடமேல் மாகாண ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார்.

(த-16)

# பெரும்பான்மையின இளைஞரால் வலி.கிழக்கில் யுவதி வன்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக. 1

வலி.கிழக்குப் பிரதேசத்தில் யுவதி ஒருவர் பெரும்பான்மையின இளைஞர் ஒருவரால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பிரஸ்தாப யுவதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனைக் கேள்வியுற்று அங்கு திரண்ட ஊர் மக்கள் குறித்த இளைஞரைப் பிடித்து நன்கு கவனித்த பின்னர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

வலி.கிழக்குப் பிரதேசத்தில் லக்ஸபானா மின் விநியோக இணைப்பு வேலையில் ஈடுபட்டு வரும் மின்சார சபையின் பெரும்பான்மை இன இளைஞர் ஒருவர் வீதியால் சென்று கொண்டிருந்த இந்த யுவதியை இழுத்துச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

23 வயதான குறித்த யுவதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யுவதி நேற்று போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதான இளைஞர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்கின்றனர்.

(த-5)

# குருநாகலில் முஸ்லிம்களை மிரட்டுகிறார் பௌத்த பிக்கு

## தொழுகையில் ஈடுபட முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஒக. 1

குருநாகல் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் முஸ்லிம்கள் புனித நோன்பு காலத் தொழுகையில் ஈடுபடமுடியாதென அந்தப் பகுதியிலுள்ள பௌத்த பிக்கு ஒருவர் மிரட்டல் விடுத்து வருவதாக பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேலாக அந்தப் பகுதி மக்கள் அந்தப் பள்ளிவாசலில் தொழுகையை மேற்கொண்டு வருவதாகவும், இந்தப் பள்ளிவாசல் உரிய பதிவுகளுடன் காணப்படுவதாகவும் தெரிவித்த அந்தப் பகுதி மக்கள் பள்ளிவாசல் அமைக்கப்பட்டதன் பின்னர் அந்தக் கிராமத்தில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டதாகவும் இந்த விகாரையின் பௌத்த பிக்குவே தற்போது தம்மை மிரட்டி வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் மாவட்டதிலுள்ள ஹிரியஎல தேர்தல் தொகுதியிலுள்ள தெதுரு ஓயகம இங்குறுவத்த கிராமத்தில் மேற்படி பள்ளிவாசல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அச்சுறுத்தல் குறித்து பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாகவும் அதையும் மீறி அந்தப் பிக்கு பெரும்பாண்மை இனக் குழுக்களுடன் வந்து பள்ளிவாசல் நிர்வாகத்தை மிரட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-16)

# பொது மக்களின் ஒத்துழைப்புடன் உள்ளக வீதிகளுக்கு விளக்குகள்

பண்டத்தரிப்பு, ஒக. 1

வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் பிரதேச கிராமங்களின் உள் வீதிகளுக்கு வீதி விளக்குப் பொருத்தும் திட்டம் மக்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் பொருத்தப்படும் வீதி விளக்குகள், பிரதேச சபையின் நிதி மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றன. எனினும் இந்த விளக்குகள் மக்களின் வீட்டு மின் இணைப்புடன் சேர்ந்ததாகவே பொருத்தப்படுகின்றன. மின் விளக்கு எரிவதால் ஏற்படுகின்ற மின்சாரச் செலவை அந்தந்த வீட்டு உரிமையாளர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, பிரான்பற்று, மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாதகல் மேற்கு, நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, நவாலி தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் தலா 13 வீதி விளக்குகள் வீதம் 100 இற்கு மேற்பட்ட விளக்குகள் மக்களின் ஒத்துழைப்புடன் பொருத்தப்பட்டுள்ளன.

பிரதேச சபைக்குட்பட்ட ஏனைய கிராமங்களிலும் இந்தத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

(த-130)

# மன்னார் ஆயர் திருப்பியனுப்பப்பட்டமை சர்வமதத் தலைவர்களுக்கும் அவமானம்

## சிறைச்சாலை ஆணையாளருக்கு ஜயலத் கடிதம்

கொழும்பு,ஒக. 1

மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்க்க அனுமதி வழங்காமை இலங்கையில் அனைத்து சர்வ மதத் தலைவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட அவமானம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கொடிப்பிலிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஜூலை 27ஆம் திகதி மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையுடன் வவுனியா சிறைச்சாலையில் இருந்து மஹர சிறைக்கு மாற்றப்பட்ட கைதிகளைப் பார்க்கச் சென்றிருந்தோம்.

இந்தக் கைதிகளைச் சந்தித்து அவர்களுக்காக ஜெபம் செய்யவும், அவர்களை ஆசிர்வதிக்கவும் மன்னார் ஆயர் என்னிடம் தெரிவித்திருந்தார். குறித்த கைதிகளிடையே கத்தோலிக்கர்களும் இருந்தனர் எனத் தெரியவந்தது.

இவ்வாறு மஹர சிறைச்சாலைக்கு சென்றபோது அது குறித்து உங்களுக்கு அறியப்படுத்தினேன். உங்களது தனிப்பட்ட உதவியாளரான சுமுது பெரேரா நீங்கள் அதிக வேலைப்பளு என்றும், அதனால் தற்சமயம் உங்களால் உரையாட முடியாது எனவும் என்னிடம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கைதிகளைப் பார்வையிட எனக்கு முடிந்த போதிலும் மன்னார் ஆயருக்குப் பார்க்க அனுமதி வழங்கப்பட வில்லை என்றும் மஹர சிறை அதிகாரிகள் எங்களிடம் தெரிவித்தனர்.

இது குறித்துப் பின்னர் நான் உங்களிடம் கேட்ட போது மன்னார் ஆயர் இந்தக் கைதிகளைப் பார்ப்பதற்காக எழுத்து மூலமாக கோரிக்கை விடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தால் அனுமதி வழங்கியிருக்கலாம் என்றும் தெரிவித்தீர்கள்.

மன்னார் ஆயருக்கு இது குறித்து ஆலோசனை வழங்கவில்லை என்று நான் கூறினேன். மஹர சிறைச்சாலை அதிகாரிகள் தங்களுக்கு சிறைச்சாலைகள் தலைமையகத்திலிருந்து இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

சிறைச்சாலைகளில் சாதாரண கலாசாரமான மற்றும் சம்பிரதாயமானது எந்தவொரு கைதியையும் நாள் ஒன்றுக்கு மூவருக்கு அதிகமானோர் பார்க்க முடியாது. இதன்படியே மன்னார் ஆயரும், நானும் சென்றிருந்தோம்.

வவுனியா சிறையிலிருந்து மாற்றப்பட்ட கைதிகள் மன்னார் ஆயரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற ஆவலுடன் இருந்தனர்.

எனினும் மன்னார் ஆயருக்கு இக் கைதிகளைப் பார்க்க அனுமதி வழங்கப்படாமையானது குறித்த கைதிகள் சாதாரண கைதிகளை விடவும் வேறு விதமாக நோக்கப்படுகின்றனர் என்பது புலப்படுகிறது.

மன்னார் ஆயருக்குக் கைதிகளைப் பார்க்க அனுமதி மறுப்பதாக சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்து விடுக்கப்பட்ட பணிப்புரையின் காரணம் மற்றும் அது குறித்துத் தெளிவுபடுத்துமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். உங்களது நிலைப்பாடு அடங்கிய பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்-என்றுள்ளது. (த)



# காலக்கெடு முடிந்தது 'லிப்ற்' வரவேயில்லை

## போதனா வைத்தியசாலை நோயாளர் தொடர்ந்தும் அவலத்தில்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 01

யாழ். போதனா வைத்தியசாலையில் நான்கு மாடிக் கட்டடத் தொகுதிக்கான 'லிப்ற்' அமைத்து தருவதாக கூறிய இலங்கை மின்சார சபையினரின் இறுதிக் காலக்கெடுவும் நேற்றுடன் முடிவடைந்தது. ஒப்பந்தத்தின் ஒரு வருடம் கடந்தும் மாடிப் படி வழியாகவே நோயாளர்களைக் காவிச் செல்லும் அவலம் தொடர்கிறது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலையின் பணியாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருவருடத்துக்கு முன்னர் மின்சார சபை பெற்றுக் கொண்ட 81 லட்சம் ரூபா பணத்துக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை. விரைவில் பூட்டுவோம் என்ற பதில் மாத்திமே பல தடவைகள் தெரிவிக்கப்படுகின்றன. இதனால் நோயாளர்களும் ஊழியர்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி கடந்த வருடம் மே மாதம் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் இலங்கை மின்சார சபைக்கு 81 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்தது. கொடுத்ததுடன் 6 மாதங்களில் 'லிப்ற்' அமைப்பதாகக் கூறியே இலங்கை மின்சாரசபையினர் பணத்தைப் பெற்றுச் சென்றனர். 6 மாதங்கள் கடந்த பின்னர் கேட்டபோது மீண்டும் 6 மாதங்கள் தேவை என்று பதிலளித்துள்ளனர். மின்சார சபையினர் வெளிநாடு ஒன்றில் 'லிப்ற்' செய்யப்படுவதாக காரணம் கூறினர்

சுகாதார அமைச்சும் இது விடயத்தில் அக்கறையுடன் செயற்படவில்லை. - என்றார். (10-4)

## கண்ட கண்ட இடங்களில் மூடை மூடையாகக் கழிவுகள்

### வலி.தென் மேற்கு பிரதேச சபை கவனிக்குமா?

வலி தென்மேற்கு, ஓக.1

வலி. தென்மேற்கு பிரதேசத்தில் கட்டுப்பாடின்றிக் கண்ட கண்ட இடங்களில் மூடைமூடையாக திண்மக் கழிவுகள் போடப்படுகின்றன. இதனால சுற்றுச்சூழல் மாசடைவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுகின்றது. இந்த நிலையைக் கட்டுப்படுத்த பிரதேச சபை முன்வர வேண்டுமென்று பொதுமக்கள் கோரியுள்ளனர்.

வலி. தென் மேற்கு பிரதேசத்திலுள்ள வீடுகளில் சேரும் திண்மக்கழிவுகள் பட்டியல் இடப்பட்டவாறு குறிப்பிட்ட தினங்களில் பிரதேச சபையின் தொழிலாளர் களால் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பிரதேச சபையின் நடைமுறையைப் பின்பற்றாத மக்கள் தங்கள் வீடுகளில் சேரும் திண்மக் கழிவுகளை மூடைமூடையாக்க் கட்டி வீதிகளில் கண்ட கண்ட இடங்களில் வைக்கின்றார்கள். இவர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் சுகாதாரத்திற்கும் சுற்றுச்சுழலுக்கும் பங்கம் ஏற்படுவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுகிறது.

இந்த நிலையைத் தொடர விடாமல் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பிரதேச சபை மேற்கொள்ள வேண்டுமென்று மக்கள் கோரியுள்ளனர். . (த-115)

## மண்டலாய் பிள்ளையார் ஆலயம் 21 வருடங்களுக்குப் பின் திறப்பு

### பூசை வழிபாடுகள் ஆரம்பம்

வடமராட்சி, ஓக.1

வடமராட்சி கிழக்கில் உள்ள பிரசித்திபெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றான மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயம் 21 வருடகால இடைவெளிக்குப் பின்னர் நித்திய பூசைகளுக்காகவும் மக்கள் வழிபாட்டுக்காகவும் அண்மையில் திறந்து விடப்பட்டுள்ளது.

**கடந்த காலப் போரினைத் தொடர்ந்து இந்த ஆலயத்தைச் சூழ வாழ்ந்த கிராம மக்கள் இடம்பெயர்ந்ததுடன் ஆலயத்தையும் கைவிட வேண்டிய நிலை 1991ஆம் ஆண்டு ஏற்பட்டது.**

கடந்த காலப் போரினைத் தொடர்ந்து இந்த ஆலயத்தைச் சூழ வாழ்ந்த கிராம மக்கள் இடம்பெயர்ந்ததுடன் ஆலயத்தையும் கைவிட வேண்டிய நிலை 1991ஆம் ஆண்டு ஏற்பட்டது.

அந்த வேளை ஆலயத்தின் பரம்பரைப் பூசகர் ஆலயத்தில் இருந்த பிள்ளையார், முருகன் உள்ளிட்ட எழுந்தருளி விக்கிரகங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு பருத்தித்துறைக்கு இடம்பெயர்ந்தார். அந்த விக்கிரகங்கள் தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயிலில் வைக்கப்பட்டு அங்கு மண்டலாய்ப் பிள்ளையாரின் பெயரில் பூசைகள், ஆராதனைகள் நடத்தப்பட்டு வந்தன.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் எழுந்தருளி விக்கிரகங்கள் மாயக்கைப் பிள்ளையார் கோயிலில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு அயலில் உள்ள வத்தனைப் பிள்ளையார் கோயிலில் வைத்து பூசைகள், வழிபாடுகள், நேர்த்திகள் இன்றுவரை நிறைவேற்றப்பட்டுவருகின்றன.

தற்போது இந்த ஆலயம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்கு பூசைகள், வழிபாடுகளை நடத்தவும், தொடர்ந்து கும்பாபிஷேகம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கோவில் கைவிடப்பட்ட போதிலும் மூல விக்கிரகம் அப்படியே அங்குஇருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் கோவிலில் சிறு சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வத்தனைப் பிள்ளையார் கோயிலில் வைத்து பூசிக்கப்படும் எழுந்தருளி விக்கிரகங்களும் அங்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

மண்டலாய்ப் பிள்ளையார் கோயிலுடன் ஒட்டியுள்ள ஆழியவளைக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த ஆலயம் திறந்து விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-8)

## அராலிக்கு விரைவில் கேபிள் தொலைபேசி

அராலி பிரதேசத்துக்கான ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் தொலைபேசி இணைப்புகள் விரைவில் வழங்கப்படவுள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சந்தியில் இருந்து அராலி நாவலடி அம்மன் கோயில் வரை இந்த இணைப்புகள் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பிராந்திய முகாமையாளர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சகல பிரதேசங்களுக்கும் கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்ட நிலையில் அராலி பிரதேசத்துக்கான இணைப்பு நீண்ட காலமாக வழங்கப்படாது இருந்தது.

தற்போது யாழ். நகர் - வங்களாவடி சந்தி வரையான கேபிள் தொலைபேசி இணைப்புக்காக கம்பங்கள் நடப்படுகின்றன. விரைவில் கேபிள் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் அடுத்த வாரம் அராலி பிரதேசத்துக்கான இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-50)

## பழுதான 'அம்புலன்ஸ்' படகை திருத்தியமைக்க நடவடிக்கை

### நயினாதீவு நோயாளர் நலன் கருதி

யாழ்ப்பாணம், ஓக 1

பழுதடைந்துள்ள நயினாதீவு அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் படகைத் திருத்தியமைப்பதற்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ் குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையே அவசர நோயாளர்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டு வந்தது.

தற்போது பழுதடைந்துள்ள இந்தப் படகு காரைநகர் துறையில் நங்கூரம் இடப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ் படகை உடனடியாகத் திருத்தியமைத்து நயினாதீவு - குறிகாட்டுவான் இடையே நோயாளர் சேவையில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## பெரும் ஆளணிப் பற்றாக்குறையில் வலி.தென்மேற்குப் பிரதேச சபை

பண்டத்தரிப்பு, ஓக.1

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் 5பேர் ஓய்வு பெற்றுள்ளதாலும், 3 பேர் பட்டதாரிப் பயிலுநர் நியமனத்துக்கு மாற்றலாகிச் சென்றதாலும், 4 பேர் நீண்ட மருத்துவ விடுமுறையில் உள்ளதாலும் நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் தமது தேவைகளுக்காகப் பிரதேச சபைக்கு வரும் மக்கள் அவசிய தேவைகளை உடனுக்குடன் மேற்கொள்ள முடியாமல் இருப்பதைக் காணமுடிகின்றது. பலரது வேலைகளையும் சேர்த்துச் செய்யவேண்டியிருப்பதால் தற்போது கடமையாற்றும் பணியாளர்களும் அதிகரித்த வேலைப்பளுவினால் சிரமப்படுகின்றனர்.

இது தவிர சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதால் கழிவகற்றல் மற்றும் ஏனைய சுகாதாரச் செயற்பாடுகள் மேற்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சபையின் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது. இதில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மீண்டும் ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பி விரைவாக வெற்றிடங்கள் நிரப்பும் நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-130)

## தாயானார் 13 வயதுச் சிறுமி

### யாழ். குடாநாட்டில் அதிர்ச்சிச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். குடாநாட்டில் 13 வயதுச் சிறுமி ஒருத்தி தாயாகியுள்ளார். ''குழந்தை இறந்தே பிறந்தது'' என்று யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஜூலை மாதம் இரண்டாம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையின் 18ஆம் விடுதியில் வலி. மேற்கைச் சேர்ந்த ஒருத்தி சேர்க்கப்பட்டாள். அங்கு அவருக்குக் குழந்தை பிறந்தது.

குழந்தை இறந்தே பிறந்ததை அடுத்து அவர் 20ஆம் விடுதிக்கு மாற்றப்பட்டார். அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த சிறுமி 26ஆம் திகதி வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்.

சிறுமிக்குக் குழந்தை பிறந்ததை உறுதிப்படுத்திய யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா, இறந்து பிறந்த சிசுவின் உடல்கூற்றுப் பரிசோதனை நடத்தப்படாதமை குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவித்தார்.

சிசுவின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமை குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் கூறினார். சிறுமி ஒருத்தி குழந்தை பிரசவித்தமை தொடர்பில் தான் ஏதும் அறிந்திருக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

சிறுமி தாயானமைக்குப் பொறுப்பானவர் யார் என்பது பற்றிய விசாரணைகளோ, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அதே வேளை, பாதிக்கப்பட்ட சிறுமியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று உதயனுக்கு அறிய வந்தது. வைத்தியசாலையில் இருந்து தனது உறவினர் ஒருவருடனேயே சிறுமி வெளியேறிச் சென்றுள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறு பாதிக்கப்படும் சிறுமிகள் நன்னடத்தை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படுவதே வழமை. சிறுமி வைத்தியசாலையைவிட்டு வெளியேறும்வரை அவ்வாறு அவர் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டாரா என்றும் தகவல் இல்லை. (உ-5)

## கடை உடைத்து கைத்தொலை பேசிகள் திருட்டு

வலி.வடக்கு, ஓக.1

அச்சுவேலி நகரப் பகுதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் மூன்று லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கையடக்கத் தொலைபேசிகள் திருட்டுப் போயுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி இரவு கடையை உடைத்து இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடையின் உரிமையாளர் கடையை பூட்டிவிட்டுச் சென்று அடுத்தநாள் காலை திரும்பி வந்து பார்த்தபோது கடை உடைக்கப்பட்டு அங்கிருந்த 22 கையடக்கத் தொலைபேசிகள் திருட்டுப்போனமை தெரியவந்தது. (த-86)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் 40 அபிவிருத்தித் திட்டங்கள்

### 32 லட்சம் ரூபா ஒதுக்கீடு

தென்மராட்சி, ஓக.1

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தென்மராட்சி பிரதேசத்தில் 40 அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள இருப்பதாக யாழ். மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், உள்ளூராட்சி சபைகள் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள சுமார் 32 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## ஆயுதக் கலாசாரமற்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நடத்த ஐரோப்பிய ஒன்றியம் ஒத்துழைப்பு வழங்கும் என குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆயுத செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டு, முறையாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## டிப்ளோமாதாரிகள் ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மாவட்டங்களில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகளுக்கு, பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது.

மாவட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகள் தாம் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையிலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்க முற்பட்டபோது, இலங்கைப் பொதுச்சேவை ஆணைக்குழு மேற்படி விடயம் தொடர்பில் தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை இடைநிறுத்தியிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 228 உயர் தேசியக் கணக்கியல் மற்றும் முகாமைத்துவ டிப்ளோமாப் பட்டதாரிகள் உயர் நீதிமன்றில் நேற்று அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தனித்தனியே தாக்கல் செய்துள்ளனர்.

சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுக்களை நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இந்த வழக்கில் பிரதிவாதிகளாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலர், பொதுச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள், யாழ். அரச அதிபர், திறைசேரி பணிப்பாளர், சட்டமா அதிபர் உட்பட 14 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-5)

## மானிப்பாயில் நேற்று அதிகாலை கத்தி முனையில் கொள்ளை

மானிப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் 15 பவுண் நகை மற்றும் 150,000 ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணம் என்பன நேற்று செவ்வாய் அதிகாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் - மருதடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வீடொன்றிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் வசித்த பெற்றோரைப் பார்ப்பதற்கு மகன் வெளிநாட்டிலிருந்து வந்துள்ள நிலையில், அங்கு அவர் கொண்டு வந்திருந்த வெளிநாட்டுப் பணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. அதிகாலை 2 மணிக்கு வந்த இரு கொள்ளையர்கள் திடீரென வீட்டுக்குள் நுழைந்து மகனின் கைகளைப் பின்னால் இறுக்கிப் பிடித்தவாறு கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் அவரது கடவுச்சீட்டை அச்சுறுத்தி வாங்கியதுடன், சத்தமிட்டால் கடவுச்சீட்டைக் கிழித்து எறிந்து விடுவோம் என மிரட்டி 15 பவுண் நகை மற்றும் 150,000 ரூபா வெளிநாட்டு பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

**கடவுச்சீட்டைக் கிழித்து எறிந்து விடுவோம் என மிரட்டி 15 பவுண் நகை மற்றும் 150,000 ரூபா வெளிநாட்டுப் பணத்தைக் கொள்ளை.**

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொள்ளையிட்டுச் சென்ற இருவரும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உரையாடியதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-4)

## ஆளுந்தரப்பின் வன்முறைகளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மீறும் செயல்களை ஆளுந்தரப்பு உடனடியாக நிறுத்த வேண்டும். அத்துடன், நிவாரணம் என்ற போர்வையில் அது தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் முன்னெடுக்கக் கூடாது என ஐ.தே.க. பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தருணத்தில், ஆளுந்தரப்பே தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் அதிகமாக ஈடுபட்டு வருகிறது. விசேடமாகக் கேகாலை மாவட்டத்தில் தேர்தல் தொடர்பிலான விளம்பரப் பதாகைகள் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நாம் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். மூன்று மாகாண சபைத் தேர்தல் காலங்களிலும் இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தேர்தல் திணைக்களம் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்திற்கு நூறு இலட்சம் ரூபா கொடுத்துள்ளது. இந்த நூறு இலட்சம் ரூபாவை வாங்கிக்கொண்டும் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் நடவடிக்கைகளைப் பொலிஸார் ஏன் தடுக்காதுள்ளனர்?

வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களிலும் அரச அதிகாரிகள் இன்னமும் அரச வளங்களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். விசேடமாக அரச வாகனங்களை இன்னும் கையளிக்காது பயன்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பிலான தகவல்களை நாம் திரட்டி வருகின்றோம். அம்பாறை மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்புகளை அரசு வழங்குகின்றது. இந்தத் தொழில்வாய்ப்புகளை வழங்குவதனூடாக அது தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

வடமத்திய மாகாணத்திலுள்ள விவசாயிகள் வாழ்வியல் ரீதியில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இங்குள்ள மக்களுக்கு ஒரு இலட்சம் ரூபா மானியம் வழங்கவுள்ளதென அரசு கூறிக்கொண்டு வருகிறது. ஆனால் இதுவரையில் அந்த ஒரு இலட்சம் ரூபா மானியத் தொகையை அரசு வழங்கவில்லை.

இந்த விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கவேண்டும். ஆனால் இந்த மானியம் வழங்குவதனூடாக அரசு ஒருபோதும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடாது. தற்போது இதனூடாகத் தேர்தல் பிரசார நடவடிக்கையைத்தான் அது முன்னெடுத்து வருகிறது. இந்த மானியத்தை ஓகஸ்ட் மாத இறுதிக்குள் அரசு வழங்கவேண்டும்.

எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் எமது கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மிகவும் சிறப்பான முறையில் மூன்று மாகாணங்களிலும் முன்னெடுத்து வருகிறோம். இதன்போது கட்சியின் வேட்பாளர்கள், செயற்பாட்டாளர்கள், மக்கள் அனைவரையும் தேர்தல் தொடர்பில் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இதற்கு அடுத்த கட்டமாக வீட்டுக்கு வீடு சென்று மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுக்கவுள்ளோம். அத்துடன், பிரதேச மட்டத்திலான கூட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

கட்சித் தலைவர், பிரதித் தலைவர் பங்குகொள்ளும் மாவட்ட மட்டத்திலான கூட்டங்கள் இம்மாதம் 20 ஆம் திகதிமுதல் ஆரம்பமாகும் - என்றார்.

(த-சி)

## நெருங்குகிறது போராட்ட இலக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழர் இன்னும் தமிழ்த் தேசிய உணர்வுடன் இருக்கின்றனர் என்பதையும், தமது உரிமைகளை வென்றெடுக்க தமது ஏகப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் சேர்ந்து போராடத் தயார் என்பதையும் எமது மக்கள் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டினார்கள்.

இதன் பின்னர்தான் சர்வதேசம் தமிழரின் உரிமைப் போராட்டத்தை சரியாக விளங்கிக்கொண்டது. பேரினவாத அரசு தமிழ் மக்கள் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தொடர்பாகச் சர்வதேசம் விரிவாக ஆராய்ந்தது.

இதனையடுத்து ஜெனிவாவில் இலங்கை அரசுக்கெதிரான பிரேரணையை சர்வதேச நாடுகள் நிறைவேற்றின. இதனை நாம் வரவேற்றோம். எமது உரிமையை வென்றெடுக்க முதற்படி அமைத்துக் கொடுத்தமைக்குச் சர்வதேச நாடுகளுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்தோம்.

ஜெனிவாவில் பிரேரணை நிறைவேறியதையடுத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றச் சர்வதேசம் இலங்கை அரசுக்கு ஓராண்டு காலக்கெடுவை விதித்துள்ளது. அந்தக் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் தமிழ் மக்களை தமது பக்கம் திசைதிருப்பி சர்வதேசத்திடமிருந்து தப்பிக்கொள்வதற்காக அரசும், அதனுடன் சேர்ந்தியங்கும் குழுக்களும் பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாகத்தான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை அரசு எம்மீது திட்டமிட்டுத் திணித்துள்ளது. வடமாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்த வேளை அரசு கிழக்குத் தேர்தலை நடத்தவுள்ளது.

கிழக்குத் தேர்தலில் தாம் வெற்றி பெறுவோம் என்றும், இதனூடாக சர்வதேசத்திடம் தமிழ் மக்கள் கூட்டமைப்பை நிராகரித்துவிட்டனர், அவர்கள் தமது பக்கமே வரத் துடிக்கின்றனர் என்பதைக் காட்டலாம் என்றும் பகல் கனவு கண்டு அரசு தேர்தலை நடத்தவுள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக சில குழுக்களையும், அவர்களின் வாக்குகளை சிதறடிப்பதற்காக வேற சில குழுக்களையும் அரசு களமிறக்கி போட்டியிடவுள்ளது.

தமிழ் மக்களை தம்பக்கம் இழுப்பதற்காக தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பொய்யான வாக்குறுதிகளை அரசும், அதனுடன் சேர்ந்தியங்கும் குழுக்களும் வழங்கி வருகின்றன. அத்துடன் தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைகளையும் தற்போது அரசு செய்து வருகின்றது.

இந்த நிலையில் எமது மக்கள் தீர்க்கமானதொரு முடிவை கிழக்குத் தேர்தலில் எடுக்கவேண்டும். ஏமாற்று அரசியல் நடத்துபவர்களுக்கு வாக்களிக்கப் போறீர்களா? அல்லது உரிமைக்காக அஹிம்சை வழியில் போராடுபவர்களுக்கு வாக்களிக்கப் போகிறீர்களா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

அரசைப் போல பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் காலத்திலும் அரசியல் நடத்தவில்லை. கூட்டமைப்பு தமிழ் மக்களாகிய உங்கள் உரிமைக்காக அஹிம்சைவழியில் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றது. எமது இலக்கை அடையும் காலம் நெருங்கி வருகின்றது. இந்த நிலையில், தமிழ் மக்களாகிய நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்'' - என்றார்.

## தரங்குறைந்த ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஜி.கே. ஆரியரட்ண தெரிவித்தார். இதேவேளை, மத்துகம மற்றும் இரத்தினபுரி பகுதியில் குறுகிய தூர சேவைகளில் ஈடுபடும் 25 இற்கும் அதிகமான பஸ்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்துக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.

பஸ்கள் மற்றும் துறைமுகத்திலுள்ள பாரம்தூக்கி இயந்திரங்கள் பழுதடைந்தமை தொடர்பாக கடந்த சில தினங்களாக முறைப்பாடுகள் கிடைத்ததாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி. விதானகாமச்சி, தெரிவித்தார். (த)

## பிரிட்டன் எம்.பிக்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாழ். மாவட்டத்துக்கு வருகை தரும் இந்தக் குழுவினர் வடமாகாணப் பிரதம செயலாளரை முதலில் சந்தித்துக் கலந்துரையாடப்படவுள்ளனர். அதன் பின்னர் யாழ். மாவட்ட அரச அதிபர் இந்தக் குழுவினரை மக்கள் மீளக்குடியமர்ந்த அரியாலை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகங்களுக்கு அழைத்துச் செல்லவுள்ளார்.

தொடர்ந்து இவர்கள் வர்த்தக சங்கத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன், அன்றைய தினம் இரவு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவையும் சந்திப்பார்கள்.

நாளைமறுதினம் 3 ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சென்று பார்வையிடும் அவர்கள் யாழ். மாநகரையும் சுற்றிப் பார்வையிடவுள்ளனர். அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்துக்குச் செல்வர். (த-5)

## தமிழர் பகுதியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செயற்பாடுகளால் இலங்கையில் ஆங்காங்கே பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் சமீபத்திய ஆண்டில் நடைபெற்ற தாக்குதல்களைவிடக் கடந்த வருடம் குறைவான தாக்குதல்களே இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் அரசியல் யாப்பில் மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஏற்பாடுகள் உள்ளன. அரசு பொதுவாக மத சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கிறது. ஆனால் அதற்கு எடுத்துக் காட்டான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை. மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அரசின் செயற்பாடுகளில் முன்னேற்றம் அல்லது சரிவு காணப்படவில்லை.

மதச் சுதந்திரப் பிரச்சினைகள், தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் பற்றி அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அரசிடம் கவலை தெரிவித்ததோடு, தேவாலயங்கள் மற்றும் மத நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் வலியுறுத்தினர். மதச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இலங்கையில் பல சம்பவங்கள் இடம்பெற்றபோது அதற்குக் காரணம் வெளியிட்ட அரசு அதனைக் கட்டுப்படுத்த முன்வரவில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## எச்சரிக்கையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆஸ்திரேலியா முன்னர் இலங்கையின் வடபகுதிக்குப் போகவேண்டாம் என பயண எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதேசமயம் ஆபத்தான பகுதி என ஆஸ்திரேலியா அறிவித்த பகுதியில் வாழும் அடைக்கலம் கோரிய ஒரு தமிழரை கடந்த வாரம் திருப்பி அனுப்ப எடுத்த தீர்மானத்துடன் இந்த எச்சரிக்கை முரண்படுவதாகக் காணப்பட்டது. ஆனால் நேற்று முன்தினம் மாலை ஆஸ்திரேலியா வெளிவிவகாரத் திணைக்களம் இந்த எச்சரிக்கையைப் புதுப்பித்து வெளியிடுவதாக அறிவித்தது.

அரசியல் அடிப்படையிலான வன்முறையின் ஆபத்து உயரளவில் காணப்படுவதால் இலங்கையில் மிகுந்த கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என நாம் ஆலோசனை கூறுகின்றோம். இலங்கையின் வடமாகாணத்துக்குச் செல்ல வேண்டாம் என நாம் இப்போது ஆலோசனை கூறவில்லை என புதுப்பிக்கப்பட்ட எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

## பிளேக் தலைமையில் ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டங்குவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட்ட பலருடன் இந்தக் குழுவினர் சந்திப்புக்களை மேற்கொண்டு முக்கிய பேச்சுகளை நடத்துவர் எனத் தெரிகிறது.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையிலும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகள் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையிலும் அமெரிக்காவின் இந்த உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு வருகை தருகின்றமை குறித்து பரபரப்பாகப் பேசப்படுகிறது.

இந்தக் குழுவினர் வடக்குக்கும் பயணம் மேற்கொண்டு அங்கும் நிலைமைகளைப் பார்வையிடவுள்ளதுடன் மீளக் குடியமர்ந்த மக்களின் நிலையையும் நேரில் கண்டறிவர் எனத் தெரியவருகிறது. (த-சி)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை செல்வரத்தினம்

கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஸ்கெல்ரன் வீதி, கொழும்பு - 05 ஐ இருப்பிடமாகவும் இறுதியாக பிலிப்பைன்ஸ் மணிலாவில் வசித்தவருமாகிய சின்னத்துரை செல்வரத்தினம் (ஓய்வு நிலை ADB பிரம்மகுமாரிகளின் இராஜயோக நிலைய மிக மூத்த அங்கத்தவர்) 27.07.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் சின்னத்துரை - அரசம்மா தம்பதியரின் அருமைப்புதல்வனும், ஜெனனாதேவியின் அன்புக் கணவரும், சுமதி, சுதன், குகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குணரத்தினசிங்கம் (கொழும்பு) மற்றும் மயில்வாகனம் (UK), சறோஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிளெஸம், பரமேஸ்வரி, இராஜசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.07.2012) பிலிப்பைன்ஸ் மணிலாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரதநிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (c/2034)(6-7-8)

தகவல்:
சின்னத்துரை சண்முகரத்தினம்
(மைத்துனர்)

## மரண அறிவித்தல்

### முருகேசு நாகரத்தினம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகரத்திணம் நேற்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், புஸ்பராணி, ராஜினி, ரகுநாதன், சிவநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், பாலசிங்கம், செல்வம், நீற்ரா, புஸ்பாதேவி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் பாலச்சந்திரன், மகாலிங்கம், பரமேஸ்வரி மட்டக்களப்பைச் சேர்ந்த கணேசமூர்த்தி, மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரியும், பா.விஜியராணி, பா.பாலநாகம்மா, ஜே. பாலசரஸ்வதி, பா. தனபாலசிங்கம், பா. ஜெயபாலசிங்கம் (ஜெயந்தன்-ஜேர்மனி), ஜெ.பாலநந்தினி, த.அரவிந்தன், த.சஞ்சயன், பி.துவாரகா, த.இந்துஷன், விஜிதா, பிரதீபன், கிரிஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2012) புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. தவராசலிங்கம் (செல்வன்)
(நந்தினி பேக்கரி)

கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில் (21204)(6-7-8)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

வடமராட்சி, ஓக. 1

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகத் தெரிவில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைவராகவும், இ.த.குலசிங்கம் உபதலைவராகவும், கலாசார உத்தியோகத்தர் செ. செல்வ சுகுணா செயலாளராகவும் , மூத்த கலைஞர் எம். இருதயராஜா உபசெயலாளராகவும், ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் க. சின்னராசா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக இ.ஆழ்வார்பிள்ளை, ந.அனந்தராஜ், பி.கிருஷ்ணானந்தன், ச.சந்திரதாஸ், சி.கிருஷ்ணமூர்த்தி, இ.ரகுவரன், ச.சசிக்குமார் க.திருச்செல்வம், எஸ் .கோகுலவரதன் ஆகியோர் தெரிவானார்கள்.

## மீன் பிடிக்கச் சென்றவர் கடலில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

பாஷையூர் கடலில் மீன் பிடிக்கச் சென்ற வவுனியா வாசி மாரடைப்பினால் கடலில் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் வவுனியா சிதம்பரபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி ஸ்ரீறஞ்சன் (வயது-53) என்பவரே மரணமானவர் ஆவார்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து நண்பர்களுடன் மீன் பிடிக்கச் சென்ற போது மாரடைப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-4)

**காணி விற்பனைக்கு**

யாழ். சுன்னாகம் சபாபதிப்
பிள்ளை வீதியில் 4 1/2 பரப்பு கணி
கிணற்றுடன் விற்பனைக்குண்டு
பிரதான வீதியில் இருந்து 50m.
தொடர்புக்கு: 0777733460
(சி/1838)

## கண்ணீர் அஞ்சலி

### ஸ்ரீமதி வேதநாயகி அம்மா நகுலேஸ்வரக்குருக்கள்



கிரீமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி வேதநாயகி அம்மா அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நகுலேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

சு. பாஸ்கரன் சிற்பாலயம்,
பாஸ்கரன் ஸ்தபதி
கஜேந்திரன்

(21210)(8-14)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

இல.84, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்துக்கு ஒரு வருட காலத்துக்கு சுத்தப்படுத்தல் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

வியாபாரப் பெயர்கள் சட்டம் இல. 4/1990 இனால் ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 149) இன்படி பதிவு செய்த அல்லது வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றுடன் இணைக்கப்பட்டமைக்கான சான்றிதழ் (பகுதி 20) இன் பிரகாரம்) உள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களை 14.08.2012 நண்பகல் 12 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= ஐ நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் உறையின் மேல் மூலையில் ''சுத்தப்படுத்தல் சேவை வழங்குவதற்கான விலைமனு'' என அடையாளமிடப்பட்டு 15.08.2012 பி.ப 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல. 57 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலை மனுக்கள் 15.08.2012 அன்று பிற்பகல் 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்துக்கு சமுகமளிக்கலாம்.

சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்துக்குக் குறையாத சம்பளம் ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் சேவை வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு வழங்கப்படவேண்டும்.

பல்கலைக்கழக கொள்வனவுச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர். (சி/2038) (45.6.7)

# கண்ணீர் அஞ்சலி



## முருகேசு நாகரத்தினம்

எமது நந்தினி பேக்கரியின் ஸ்தாபகர் தவராசலிங்கம் (செல்வம் அண்ணை) அவர்களின் அன்பு மாமியார் திருமதி முருகேசு நாகரத்தினம் அவர்கள் நேற்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் எமது மதிப்புக்குரிய தவராசலிங்கம் (செல்வம் அண்ணை) மற்றும் அவரது குடும்பத்தினர் ஆகியோரது துயரத்தில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நந்தினி பேக்கரி,
கொக்குவில்.

கா.பாஸ்கரன்
குடும்பத்தினரும்
பணியாளர்களும்.

(21209 -15-14)

# பாராட்டி வாழ்த்து



## பவளவிழா நாயகர் 'ஆசிரியமணி'

## திரு.சரவணமுத்து விநாயகரத்தினம்

தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், எமது வழிகாட்டியும், பேராசானுமாகிய ஆசிரியமணி, தன்னலமற்ற தொண்டன், பவளவிழா நாயகர் திரு.ச.விநாயகரத்தினம் பயிற்றப்பட்ட ஆசிரியத் தகைமைபெற்று, சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம், அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகம், யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் என்பவற்றிலே நல்லாசிரியராயும், முழுநேரச் சைவசமய ஆசிரிய ஆலோசகராகவும் 1958.11.03 ஆம் திகதி முதல் 1997.07.31 ஆம் திகதி வரை திறம்பட சேவையாற்றி பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். தம் வாழ்நாளிலே பெருமைமிகு பவள விழாக் காணும் பேறுபெற்ற எமது நல்லாசான் மகிழ்ச்சியுடன் நலமாக நீடூழி வாழ வேண்டுமென ஆண்டவன் பாதம் பணிகின்றேன்.

எம் ஆசான் 1956-1957 ஆம் ஆண்டுகளிலே பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே பல்வேறு துறைகளிலும் பயிற்சிபெற்று பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரம் பெற்றுக்கொண்டார். இவரை மாணவர்களாகிய நாங்கள் 'விம் சேர்' என்று அழைப்போம். (விநாயகரத்தினம்-வி+ம்) கற்பித்தல் துறையில் அரும் பணிபுரிந்தவர் என்பதால் சுருக்கமாக அமைந்த அந்தப் பெயர் நல்ல பொருத்தமானதாகும்.

ஆசான் 'விம்மர்' 1958.11.03 தொடக்கம் 1963.06.30 வரை சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்திலே ஆசிரியராயிருந்தார். அந்தக் காலத்தில் தமது தகைமைகளையும், துறைசார் வித்துவப் புலமையையும் கூடவே வளர்த்துக் கொண்டார். சுருக்கெழுத்து, தட்டச்சுப் போதனைகளை மாணவர்களுக்கு இலவசமாகவே கற்பித்தார்.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் 1963.07.01 முதல் 1970.07.31 வரையான ஏழாண்டு காலம் ஆசிரியப் பணிபுரிந்த எம் பவளவிழா நாயகன் ச.விநாயகரத்தினம் மலையக மாணாக்கரின் கல்விக் கண்ணைத் திறந்தமை வரலாற்றிலே பொன்னெழுத்துக்களாலே பொறிக்கப்பட வேண்டிய செய்தியாகும். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் படித்த பல மாணவர்கள் இன்றும் 'விம்' அவர்களை மறவாது நீளநினைந்து உயர்வுடன் வாழ்கின்றனர்.

'விம்' அவர்கள் மகாஜனக் கல்லூரிக்கு பணி மாற்றலாகிய பின்னர் பிற்காலத்தில் மலையகத்து மாணாக்கர்கள் பலர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே கல்விகற்று இன்று பல்கலைக்கழகங்களிலே மிகவுயர் கல்விப் பதவியான பேராசிரியர் பதவிகளையும், துறை சார் தலைமைத்துவங்களையும், பீடாதிபதி முதற் பல்வேறு பெரும் பொறுப்புக்களையும் வகிக்கின்றனரென்பது மனங்கொள்ளத்தக்கது.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலே 'விம்' அவர்கள் கல்விபுகட்டிய காலம் மலையகக் கல்வியின் எழுச்சிக்காலம்- பொற்காலம் என்றும் கூறலாம். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் விளையாட்டுத்துறைத் தலைவராயும், இந்து மாமன்றத்தின் பொறுப்பாசிரியராயும், உதை பந்தாட்ட மற்றும் மெய்வல்லுநர் பயிற்றுனராகவும், நாடகப் பயிற்றுவிப்பாளரா யும் பணி ஆற்றியுள்ளார். கல்லூரிக்கு வெளியிலே கல்விக்காகவும், கல்லூரிக்காகவும் பல பன்முகப் பணிகளைத் திறம்பட ஆற்றினார். பொதுமறைக் கழகத்தின் அமைப்பாளராகவும், திருக்குறள் மாநாட்டு இணைச் செயலாளராயும், திருவள்ளுவர் 2000 ஆம் ஆண்டு விழாப் பொறுப்பாளராயும் திறம்படப் பணிபுரிந்தவர்.

அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலே 1963-1970 காலப் பகுதிகளிலே எழுச்சிமிகு சிந்தனைப் புரட்சி-களம் உருவாக்கப்பட்டதென்பது மிகைக் கூற்றல்ல. மலையகக் கல்வி வளர்ச்சியிலும், புலமையெழுச்சியிலும் 'யாழ்ப்பாணத்து தமிழ் ஆசிரியர்கள்' ஏற்படுத்திய தாக்கம் என்பது மிகமிக முக்கியமானது. இன்றும் மலையகத்துக் கல்விமான்களும், சிந்தனையாளர்களும், புத்திஜீவிகளும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும் பேருண்மை இது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே 1970.08.01 முதல் 1992.12.31 வரை பெருமைமிகு ஆசிரியப்பணி புரியலானார். அந்த வேளையிலும் தமது தகைமையையும், திறமையையும், ஆசிரிய வாண்மையையும் வெளிப்படுத்தினார். வகுப்பறையிலே தமது பாடங்களை எளிமையாகவும், விளங்கும் முறையிலும், நுட்பமாகவும், தெளிவுபடவும், நேரகாலம் பார்க்காது போதித்ததுடன், எண்வகைத் துறைகளிலே தமது காலத்தையும் பேருழைப்பையும் வழங்கிச் செயற்பட்டார். மகாஜனா மாணவர்கள் மாணவியர் நூற்றுக்கு மேற்பட்ட தங்கப்பதக்கங்களைப் போட்டிகளிலே வென்று வெற்றிவாகையைத் தட்டிக்கொள்ளப் பயிற்சிகளை வழங்கிய பயிற்றுநர், "சோதனை", "குறும்பு செய்த கோமகள்", "வில்லால் அடித்த விஜயன்" ஆகிய தரமான மேடை நாடகங்களைத் தயாரித்துப் பயிற்றுவித்துப் போட்டிநிலையிலே முதற் பரிசுபெற வைத்தவர். மகாஜனக் கல்லூரிக்கு வெளியில், 1979 ஆம் ஆண்டிலே வடமாநில சைவசமய ஆசிரிய ஆலோசகராகப் (பகுதி நேரம்) பணியாற்றினார். வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமான கீரிமலைச் சிவன் கோயிலிலே 'சிவநெறிக் கழகம்' அமைத்து அதன் செயலாளராகப் பணிகள் பல புரிந்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த ஆசிரியர் விருதினையும் பெற்றார்.

உலகளாவிய ரீதியிலே வெளியிடப்பட்டுள்ள இரு பெரும் நூல்களிலே வெளியிடப்பட்டுள்ள 'விம்' பற்றிய மேற்கோள்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி, கனடாவிலே வெளியிடப்பட்ட மகாஜனன் (1910-2010) நூற்றாண்டு விழா மலரிலே பக்கம் 39 இல் முதலாவது மேற்கோள் இடம்பெற்றுள்ளது.

"இவர் மகாஜனாவின் பழையமாணவரா அல்லது ஆசிரியரா எனப் பிரித்துப் பார்க்க முடியாதளவுக்கு கல்லூரியின் சகல நிலைகளிலும், விடயங்களிலும், செயற்திட்டங்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, 'கல்லூரிதான் மனையென்று' கருதுமளவுக்குச் செயலாற்றிய பழைய மாணவன். மகாஜனாவின் ஆசிரியராக இணைந்து செயற்பட்டவேளை இவர் தமிழையும் சமயத்தையும் முக்கிய பாடங்களாகப் படிப்பித்தார். மாணவர்களைச் சமயப் போட்டிகளுக்கு கூட்டிச்சென்று பங்குபற்றச் செய்வதிலும் சமயம் தொடர்பான பயிற்சிகளில் நேரம் காலம் பாராது மாணவர்களுக்குப் பயிற்சியளிப் பதையும் கடமையாகக் கொண்டிருந்தார். மகாஜனாவின் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் திருவிழா, திருக்கேதீச்சரம் ஆலயத்திருவிழா இரண்டையும் வருடந்தோறும் சிறப்பாகவும் திறம்படவும் நடைபெறச் செய்வதிலும், மாணவர்களைக் கொண்டு செயற்படுத்தும் திறமையையும் பெற்றிருந்தார். மாணவர்கள் சமய நெறியிலும், தமிழ் மொழியிலும் வல்லமை புலமை அடையவேண்டுமென்ற ஆவலுடையவர். இவர் சில விளையாட்டுகளுக்கும் பொறுப்பாக இருந்தார். வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்வதில் திறமையாளராக இருந்தார்.கல்லூரியில் மகாஜனச் சிற்பியின் (அதிபர் தெ.து.ஜெயரத்தினம்) வெண்கலச்சிலை அமைப்பதற்கான பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி அதனை ஜெயரத்தினம் மண்டபத்தில் நிலைபெறச் செய்தவர்களில் முக்கியமான ஒருவர் இவர் என்று புகழாரஞ் சூட்டப்பட்டுள்ளது. அத்துடன் இந்துசமய தத்துவங்களையும், சிவதத்துவ விளக்கங்களையும், கீரிமலையின் பூர்வீக வரலாற்றையும் கூறும் நகுலநாதம் என்னும் நூலில் இடம் பெற்ற 'கீரி மலைச் சிவன் கோவில்' என்ற கட்டுரையிலும் ஆசிரிய மணி, பவளவிழா நாயகர் ந.விஜயரத்தினம் அவர்கள் தமிழுக்கும், சைவசமயத்துக்கும் ஆற்றிய அளப்பெரும் தொண்டு குறித்து வரலாற்றுத் தகவல்களுடன் விஸ்தாரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மேற்கோள்கள் 'விம்' அவர்களின் சைவத்தமிழ்ச் சேவையையும் செயற்பாட்டு நலனையும் விதந்துரைப்பனவாகும். 'விம்' அவர்கள் 1993-01-01 முதல் ஒரு வருட காலம் முழு நேரச் சைவ சமய ஆசிரிய ஆலோசகர் என்னும் பதவியில் பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் 1994-01-01 ஆம் திகதி முதல் 1997-07-31 ஆம் திகதிவரை அதே பதவியில் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்திலே சேவையாற்றினார். இவரின் சைவ தமிழ்ப்பணியினைப் பாராட்டி 'இறைபணிச் செம்மல்' என்னும் சிறப்பு விருதினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது. திரு.ச.விநாயகரத்தினம் அவர்களுக்கு 2010 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தினால் "சிவத் தமிழ் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இறை பணிச் செம்மல் "சிவத்தமிழ்ச் செல்வர்" ஆசிரியமணி 'விம்' அவர்கள் தடம்பிறழாத வைராக்கிய தெய்வ நம்பிக்கையும், உழைப்புறுதியும் சேவை மனப்பாங்கும் கொண்ட நல்ல சீலமிக்க குணநலங் கொண்ட மகான், தன்னலமற்ற சமயத் தொண்டன். எளிமையே உருவானவர். சேவையிலே, தொண்டிலே இன்பங்கண்டு குதூகலிக்கும் மாண்பினர்; "ஆசிரியத்துவம்" என்பது கற்பித்தல் மட்டுமல்ல ஆற்றலும் ஆளுமையுங் கொண்டவர்களை, கூர்த்தநுண்மதி படைத்தவர்களை இனங்காணுதல்" எனுங் கல்விக் கோட்பாட்டைத் தமது பிறப்பின் இயல்பாகவே கொண்டமைந்தவர். கல்வி, மொழி, சமயம் என்பன எந்தக் காலத்தும் பெறுமதிமிக்கன என்பதில் உறுதி கொண்டவர் எம் நல்லாசான். புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பான் பாரதி. அத்தகு திடசித்தத்துடன் எம்மை பிறரும் மதிக்கத்தக்க வகையிலே வழிகாட்டி வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த எம் பவளவிழா நாயகர் தனித்த புகழ் கொண்டவர்; அவரது சேவைகள் அளப்பரியன. ஈடிணையற்றவை. எம் பவளவிழா நாயகரை குருவணக்கம் செய்து- நீளநினைந்து நித்தலும் கைதொழுது வாழும் பெரும் பேறு எம்மை வாழ்நாள் முழுவதும் மகிழ்வூட்டி இன்பந் தருவதாக.✱

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்.



### ஆசிச் செய்தி

பார்புகழும் பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு தமிழுக்கும் சைவத்துக்கும் பெருமை சேர்த்தவர்களுள் ஒருவராக கருதப்படுகின்ற சரவணமுத்து விநாயகரத்தினம்அவர்கள் பவளவிழா காண்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். பவளவிழா என்பது ஓர் உன்னதமான சாந்தி வைபவம். இது பவள விழா காண்பவர், பவள விழா எடுப்பவர்கள், அதில் பங்குகொள்பவர்கள், அதற்கு உதவுபவர்கள் என்ற பல வகையினருக்கும் எல்லாவிதமான நல்ல பலன்களை அளிக்க வல்லது என்றால் அது மிகையாகாது. ஆசிரியர் அவர்கள் அறிவும் அடக்கமும்கொண்டு வாழ்ந்து வந்ததுடன் ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு அயராது பாடுபட்டு உழைத்த செயல் வீரர். அது மாத்திரமல்ல சமய சமூகத் தொண்டுகளிலும் பிரதிபலன் கருதாது முன்னின்று சேவையாற்றி வருபவர். ஆசிரியரின் பவளவிழா மாண்புற நிகழவும் பல்லாண்டு வளமுடன் வாழவும் எல்லாம்வல்ல வரத்தலம் கற்பக விநாயகரின் பாதம் பணிந்து நிறைவு செய்கின்றோம்.

ம. மகேந்திரசர்மா,
ஆதீனகர்த்தா, பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.

### சேவையின் நாயகனே வாழ்க நீடூழி



ஊழியின் முதல்வன் நகுலேஸ்வரனும்
கார்த்திகைப் பெண்களிடை வளர் மாவைக்கந்தனும்
துர்க்காபுரியுறை துர்க்காதேவியுமுறை நன்னகராம்
வற்றா நன்னீர் வளங்கொண்ட பன்னாலை
கற்பக விநாயகர் கழல் தொழுதிடுகின்றவரத்தலம்
உயர்குலத் தோன்றல் புதுவீடு சங்கடப்படலை
பெயர்விளங்க சரவணமுத்துவின் வம்சாவழி
வந்துதித்த ஆசிரியமணியே, விநாயகரத்தினமே!
பந்துபோற் பல பணிகள் செய்தவரே,
சைவத்தின் காவலரே, சைவமே நும் பாரம்பரியம்
பையவே நீவிர் பாங்காய் செய்த பணி
பூத்துக்குலுங்கிடுதே இங்கும் புலம்பெயர் பூமியிலும்
பார்த்துப் பூரிப்புடன் வாழ்க பல்லாண்டு பாரியாருடன்
காத்திரமாய் வளர்ந்திடுக நின்சேவை மேன்மேலும்
- தெல்லியூர்த் தேவி.

### பவள விழா நாயகனே வளர்க நின் சேவைகள்



ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தையும் அதன் புனிதத் தன்மையையும் மக்கள், குறிப்பாக மாணவ உலகம் உணர்ந்து கொண்டமையை வெளிப்படுத்தும் விழாவாகவே இன்று ஆசிரியர் திரு. சரவணமுத்து விநாய கரத்தினம் அவர்களின் பவள விழா திகழ்கிறது "வெள்ளிடைமலை". இத்தகைய விழா நாயகனின் மாணவனாக நான் இருந்தமையை இட்டு பெரு உவகையடைகின்றேன்.

ஆசிரியர் அவர்கள் தனது ஆசிரியத்தொழிலை வருமானம் ஈட்டும் ஆயுதமாக நினைக்காது சேவையாகவே செய்துள்ளார். அத்துடன் அவர் பல சமயத் தொண்டுகளை முன்னின்று நடத்தி சைவ சமயத்தின் மேன்மைக்கு மெருகூட்டியுள்ளார். மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சியில் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருக்கோயில்களின் மகாஜனக் கல்லூரி உபயம் என்றால் இவரே முன்னின்று மாணவர்களை தயார்படுத்தி அழைத்துச் செல்வார். இவைமட்டுமல்ல விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தை மாணவர்களின் இளமைப்பருவத்திலே அவர்களுக்கு எடுத்தியம்பி பங்குபற்ற ஊக்கமளித்த பெருமையும் அவரையே சாரும். இந்தகைய செயல்வீரனின் தேவை நம் மண்ணுக்கு அவசியம். எனவே அவர் தம் பாரியாருடன் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழவேண்டுமென எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜரை வேண்டுகின்றேன்.

வை.தனநாதன், கணக்காய்வாளர் லக்ஸ்மி குரூப், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணையாளர்கள்: பழைய மாணவர்கள், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.

(சி/2030)(2-6-7)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள கிழக்கு மாகாண தேர்தல் களம்

பதவிக் காலம் முடிவுறாத நிலையில் முன்கூட்டியே கலைக்கப்பட்டுவிட்ட மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தல் பிரசார களம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

மக்களின் மனநிலையை அறிவதற்காகவே இந்தத் தேர்தல்களை நடத்தத் துணிந்ததாக அரச தரப்பில் சொல்லிக் கொண்ட போதிலும் நாட்டில் விலைவாசி ஏற்றம், மற்றும் குற்றச் செயல்களின் அதிகரிப்பு போன்றவற்றினால் வெறுப்படைந்துள்ள பொதுமக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்காகவே அரசு இந்தத் தேர்தலை முன் கூட்டியே நடத்துகிறது என்பது எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டுகளில் ஒன்று.

மக்கள் மனநிலையை அறிவதுதான் நோக்கமானால் வடக்கு மாகாண தேர்தலை ஏன் நடத்தாமல் பின்னடிக்கிறீர்கள் என்பதுவும் எதிர்க்கட்சிகளின் கேள்வியாகவுள்ளது.

கடந்த காலத்தில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் பிரதேச சபைத் தேர்தல்களின்போது அரசுக்கும் அரசு சார்ந்த கட்சிகளுக்கும் வடக்கில் எதிர்பார்க்கப்பட்ட அளவு ஆதரவு கிடைக்காமல் போனமையால் மாகாண சபை தேர்தலை இப்போது நடத்துவதனால் அதே நிலை ஏற்படலாம் என்று அரசு தரப்பு அஞ்சுவதாகவும் அவ்வாறான ஒரு நிலைமை தோன்றாத வகையில் நிலைமைகளைச் சீர்செய்து கொண்டதன் பின்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்றும் அரசு கருதுவதாகவும் எதிர்த்தரப்பு வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது. இந்தக் கருத்து பெரும்பாலும் சரியானதே என்பதை உறுதிப்படுத்துவதுபோல் இருக்கிறது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்தபோது தெரிவித்துள்ள கருத்து. வடக்கு மாகாண வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டியிருப்பதையும் இடம் பெயர்ந்துள்ள பெரும் எடுப்பிலான தமிழர் மட்டுமின்றி சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களையும் மீள்குடியமர்த்தவேண்டியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள அவர் அதன் பின்னரே மாகாணசபைத் தேர்தலை நடத்துவது அரசின் உத்தேசம் என்று தெரிவித்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க, கிழக்கு மாகாணத்தில் ஆயுதக் குழுக்கள் செயல்படத் தொடங்கியிருப்பதாகவும் சில கட்சிகளின் பிரமுகர்கள் இவர்களின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகி இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் கிளம்பியுள்ள அதேவேளை கிழக்கு மாகாணத்தில் சில அரசியல் கட்சிகளுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல் திணைக்களம் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனைக் கேட்டிருக்கின்றது.

கிழக்கானால் என்ன வடக்கானால் என்ன இரண்டு மாகாணங்களும் கடந்த முப்பது ஆண்டு காலமாக ஆயுதக் குழுக்களின் ஆதிக்கத்தில் இருந்துவந்துள்ள பகுதிகளாகும். போர் முடிவுற்ற போதிலும் சமீப காலம்வரை ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்கள் இந்தப் பகுதிகளில் குறைந்துவிடவில்லை. அவைகளிடமிருந்த ஆயுதங்கள் களையப்பட்டுவிட்டதாக கூறப்பட்ட போதிலும் ஆயுதக்களைவு இடம்பெற்றதற்கான வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை. இன்னமும் கூட சில பகுதிகளில் ஆயுதங்கள் மீட்கப்படுவது குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. இவை எல்லாமே கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளிடம் இருந்தவைதானா என்பதற்கு நிரூபணம் இல்லை. சில பல இடங்களில் நடைபெற்றுள்ள கொள்ளைகளின் போது ஆயுதப் படைகளிடம் இருப்பது போன்ற நவீனரக ஆயுதங்கள் காட்டப்பட்டு அச்சுறுத்தப்பட்டமைக்கான செய்திகளும் வந்ததுண்டு. இவை மட்டுமல்ல இந்தப் பிரதேசங்களில் ஆயுதம் கொண்டு போராடிய குழுக்கள் சிலவற்றின் தலைவர்கள் பலர் அரசோடு இணைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களும் இவர்களின் சகாக்களும் கடந்த காலத்தில் பயன்படுத்திய ஆயுதங்கள் என்னவாயிற்று என்பது மர்மமாகவே உள்ளது. அரசிடம் ஒப்படைக்கப்பட்டதாகவோ அவர்களிடமிருந்து அரச படைகளால் களையப்பட்டதாகவோ சரியான தகவல் ஏதுமில்லை. எனவே கிழக்கு மாகாண தேர்தலின் போது ஆயுதக் குழுக்கள் வெளிப்படக்கூடிய அபாயம் இருப்பதை தேர்தல் திணைக்களம் கவனத்தில் கொள்வது அவசியம். தேர்தலின் ஆரம்ப கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கு ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல் இருப்பதாக தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அப்படியான ஒரு நிலைமை ஆரம்பத்தில் இருந்தது உண்மைதான் என்றாலும் அது இப்போது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுவிட்டது என்று மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுவில் நேற்றுவரை கிழக்கு மாகாணத்தில் இருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி அங்கு கட்சிகளின் பிரசாரங்கள் இப்பொழுதுதான் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளன. நாள்கள் செல்லச் செல்ல நிலைமைகள் மாறலாம். ஆர்வ மிகுதியால் கட்சி ஆதரவாளர்கள் கட்டுமீறிப்போகும் நிலைமைகளும் ஏற்படலாம். எதற்கும் தேர்தல் திணைக்களம் விழிப்பாகவே இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

தமிழ்- முஸ்லிம் மக்கள் கணிசமாக வாழும் பிரதேசமான கிழக்கு மாகாணத்திலும் தனக்கு பெரும் ஆதரவு இருப்பதாக அரசு தரப்பு வெளிப்படுத்த முயன்று கொண்டிருக்கும் அதே சமயம் தனது சமீப கால நிலைப்பாட்டை முஸ்லிம் மக்கள் பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெரும் முயற்சியில் இறங்கும் என்பது திண்ணம். இவைகளுக்கிடையில் மாகாணசபைத் தேர்தலில் முதன்முறையாக போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கு இத் தேர்தல் அடித்தளமாக அமையும் என்பதால் தமிழ் பேசும் மக்கள் அனைவரது ஆதரவையும் பெற்று முன்னிலை பெற வேண்டிய கட்டாயத்தில் அது இருக்கிறது.

### 2005 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற

# நிகழ்ச்சித் திட்ட அலுவலர்கள் சம்பள உயர்வு கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.1

பிரதேச செயலகங்களில் நிகழ்ச்சித் திட்ட அலுவலர்களாக 2005 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற பட்டதாரிகள் தம்மை உரிய தரத்துக்குள் உள்வாங்கி சம்பளத்தையும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

2005 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற 50 ஆயிரம் பட்டதாரி அலுவலர்கள் நேற்று கடமைக்குச் செல்லாமல் நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

23-07-2005இல் நாடு தழுவிய ரீதியில் நியமனம் பெற்ற இவர்கள் கடந்த ஏழு ஆண்டுகளாகச் சேவையாற்றுகின்றபோதும் பட்டதாரி நியமனத்துக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பு, பதவி உயர்வு, தரம், வகுப்பு எவையுமின்றிக் கடமையாற்றுகின்றனர்.

எனவே தமது மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி இவர்கள் நேற்று நாடு முழுவதும் அடையாளப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை சுதந்திர பட்டதாரி அலுவலர் சங்கம் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக வடக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரி அரச சேவையாளர்களும் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு வழங்கினர்.

(த-41)

## 5 முன்பள்ளிகளுக்கு மலசல கூடங்கள்

தென்மராட்சி, ஓக.1

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து முன்பள்ளிகளுக்கு மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் முன்பள்ளி சிறார்களுக்கான மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

## ஆரம்ப நிகழ்வு மட்டுவில் அ.த.க. பாடசாலையில்

தென்மராட்சி, ஓக.1

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 5 ஆயிரம் ஆரம்ப பாடசாலைகள் புனரமைப்புச் செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்ப நிகழ்வு மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றிலும் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் உட்பட பலர் கலந்து கொள்வர்.

ஆரம்ப நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு சமநேரத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## இலங்கை-மலேசியக் குழுவினர் பிரதம செயலாளருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கை-மலேசிய நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும், வடமாகாணப் பிரதம செயலாளருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநரின் உப அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், வடமாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வடமாகாணப் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்ஷ்மி பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

இவற்றைவிட முதலீட்டு மூலங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கின் கல்வி மேம்பாட்டுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பது தொடர்பிலும் ஒன்றியப் பிரதிநிதிகள் கேட்டறிந்தனர்.

> முதலீட்டு மூலங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் சுற்றுலாத் துறை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-5)

## சமுர்த்தி சிறுவர் கழகத்தின் கலை, இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.மாவட்ட சமுர்த்தி சிறுவர் கழக கலை, இலக்கியப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார்.

சமுர்த்தி சிறுவர் கழக மாவட்ட மட்ட கலை, இலக்கியப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி முதல் குருநகர் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் தொடர்பில் மேலதிக விவரங்கள் தேவைப்படுபவர்கள் தத்தமது பிரதேச செயலர்களுடனும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனும் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-5)

## வலி. தென்மேற்கு சபையின் கண்டனத் தீர்மானங்கள்

பண்டத்தரிப்பு, ஓக.1

மன்னார் நீதிமன்ற அவமதிப்புக்கு எதிராகவும், நிமலரூபன் படுகொலைக்கு எதிராகவும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சபையின் உப தவிசாளர் ச.சிவகுமாரனால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளை மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் சபையில் இருந்தனர். இவர்களும் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவில்லை. இதனால் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(த-130)

## வடக்கில் தொலைபேசி விஸ்தரிப்புக்கு 42 ‘இம்சான்’ பரிவர்த்தனை அலகுகள்

யாழ்ப்பாணம், ஓக.1

வடக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புகளை மேலும் விஸ்தரிப்பதற்காக 42 ‘இம்சான்’ பரிவர்த்தனை அலகுகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ்.ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரிவர்த்தனை அலகுகள் கூடுதலாக வன்னிப் பகுதியில் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கே எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களில் இந்த ‘இம்சான்’ பரிவர்த்தனை அலகுகளைப் பயன்படுத்தித் தொலைபேசி இணைப்புகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்தப் பரிவர்த்தனை அலகு ஊடாகத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்ட இடங்களுக்கும் மேலும் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவிக்கன.

(த-17)

# கறுப்பு ஜூலையை மீண்டும் உருவாக்க முயல்கிறது அரசு

## வவுனியா நகரசபையின் பதில் தலைவர் கூறுகின்றார்

மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை உருவாக்கி தமிழ் மக்களைப் பீதியுடன் வைத்திருப்பதற்கு அரசு முயற்சித்து வருகின்றது.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் வவுனியா நகர சபையின் பதில் தலைவர் எம்.எம்.ரதன்

வவுனியா நகரசபையின் இம்மாதத்திற்கான கூட்டம் நேற்று முன்தினம் நகரசபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இதற்கு தலைமை வகித்ததுடன் மகர சிறையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட நிமலரூபன் படுகொலையைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

**தமிழ்பேசும் மக்கள் மனங்களில் ஜூலை மாதம் என்பது சோதனைகளும், துயரங்களும் மிகுந்தது. இதன் தொடர்ச்சியாகவே இந்த மாதங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் காணப்படுகின்றன.**

தமிழ்பேசும் மக்கள் மனங்களில் ஜூலை மாதம் என்பது சோதனைகளும், துயரங்களும் மிகுந்தது. இதன் தொடர்ச்சியாகவே இந்த மாதங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் காணப்படுகின்றன.

மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை ஏற்படுத்தித் தமிழ் மக்களைப் பயப்பீதியுடன் வைத்திருக்க அரசு முயற்சித்து வருகிறது. 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் வைத்துக் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 போராளிகள் கொடூரமான முறையில் சிங்களக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

ஜூலை மாதத்தில் நெல்லியடியில் நிகழ்ந்த துணிகரத் தாக்குதல் நிகழ்வொன்று இன்றும் எம்மக்கள் மனங்களில் நிலைபெற்றுள்ளது.

இப்போது போர் நிறைவடைந்தாலும், தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

வவுனியாச் சிறையிலிருந்த நிமலரூபன் சிங்களக் குண்டர்களாலும், காடையர்களாலும் கடுமையாகத் தாக்கப்பட்டுக் கை, கால் முறிக்கப்பட்ட நிலையிலே மகர சிறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவ்வாறு கொல்லப்பட்ட அவரது இறுதிக் கிரியைகளைக் கூட சுதந்திரமாக நிறைவேற்ற முடியாத நிலையில் பொலிஸாரும் இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் அவரது இறுதிச் சடங்கின் போது குவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிகழ்வுகளுக்கெல்லாம் அரசே பொறுப்புக் கூறவேண்டும். இத்தகைய சம்பவங்களைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்து கண்டனத் தீர்மானத்தை அவர் முன்மொழிந்தார்.

இறுதியில் கண்டனத் தீர்மானம் சபை உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (க-400)

# புறக்கணிக்கப்பட்டனர் முன்னாள் போராளிகள்

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கான கடன் வழங்கும் திட்டத்தில் முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முன்னாள் போராளிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு கடன் வழங்கும் திட்டத்துக்கான நேர்முகத் தேர்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் உள்ள முன்னாள் போராளிகள் தெரிவு செய்யப்பட்டு, அதற்கான நேர்முகத் தேர்வும் நடைபெற்றுள்ளது.

ஆனால் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள முன்னாள் போராளிகள் எவரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியாகக் காணப்படும் மாந்தை கிழக்கில் ஊனமுற்ற மற்றும் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் முன்னாள் போராளிகள் அதிகம் பேர் உள்ளனர். இந்த நிலையில் இந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டமையானது முன்னாள் போராளிகளிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; முதல் தெரிவின் போது இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும், இரண்டாவது தெரிவின் போது இவர்கள் உள்ளடக்கப்படுவர்கள் என்றும் தெரிவித்தார். (க-6)

# குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் கிளை அலுவலகம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஒக.1

குடும்பப் புனர்வாழ்வுநிலையத்தின் கிளை அலுவலகம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசு மற்றும் புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் இணை அனுசரணையுடன் இந்தக் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஜப்பான் நாட்டின் தூதுவர் வைபவ ரீதியாக இதனைத் திறந்து வைத்தார்.

கிளிநொச்சியில் வாழுகின்ற மக்கள் போரின் போது பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர். இவர்களுக்கான உளவியல், சமூக மற்றும் மனநல சேவைகளை வழங்குவதில் மிகவும் குறைவான வசதிகள் காணப்படுவதுடன் ஒரு சில பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்களே உள்ளனர். தற்போது இந்தக் குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் கிளையொன்று இங்கு திறந்து வைக்கப்படுகின்றமை ஒரு முக்கியமான கட்டமாகும் என இங்கு உரையாற்றிய ஜப்பானியத் தூதுவர் குறிப்பிட்டார்.

புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்டுச் சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி வருவதுடன் ஆற்றுப்படுத்துகை மற்றும் உசாத்துணைச் சேவைகளை இலங்கை வட பகுதியின் நான்கு மாவட்டங்களிலும் இந்த நிறுவனம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)



போரினால் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட முத்துஐயன்கட்டு முத்துவிநாயகர் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-500)

# அலங்கார உற்சவம்

நெளுங்குளம், ஒக.1

முருங்கன் செம்மண் தீவுக் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் 35 ஆவது ஆண்டு அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆலயத்தின் அலங்கார உற்சவம், தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

(க-402)

# கர்ப்பிணிகளுக்கான 'கிளினிக்' நடத்த பொலிஸாரை வெளியேற்றி உதவுங்கள்

## நிலையத்தைக் கையளிக்குமாறு முசலி பிரஜைகள் குழுவின் தலைவர் மனு

மன்னார், ஒக.1

சிலாபத்துறை கிராமத்தில் அமைந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக் நிலையத்தில் நிலைகொண்டுள்ள பொலிஸாரை வெளியேற்றி அதனை மீண்டும் மக்களிடம் கையளிக்குமாறு முசலிப் பிரதேசத்தின் பிரஜைகள் குழு அமைப்பாளர் ஏ.சுனேஸ் சோசை மனுவொன்றைக் கையளித்துள்ளார்.

மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை கிராமத்தில் அமைந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக் நிலையத்தில் தற்போது பொலிஸார் நிலை கொண்டுள்ளனர். இதனால் அதனை இயங்க வைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் பொலிஸாரை அங்கிருந்து வெளியேற்றி கிளினிக் நிலையத்தை மீளவும் இயங்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் பிரஜைகள் குழுத் தலைவரால் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில்;

சிலாபத்துறை கிராமத்தில் அமைந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக் நிலையத்தில் பொலிஸார் பல மாதங்களாக நிலை கொண்டுள்ளனர்.

இதனால் கர்ப்பிணித்தாய்மார்கள் சிலாபத்துறை வைத்தியசாலையிலே இடம்பெறும் கிளினிக்குக்கே சென்று வருகின்றனர்.

இதற்காக நியமிக்கப்பட்ட வைத்தியர் இனி வரும் காலங்களில் இந்த வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை வழங்க முடியாது என அறிவித்து விட்டார்.

இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த கிளினிக் கட்டடத்தை மீளப்பெறுவது குறித்து முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளரினால் கடந்த மே மாதம் மனு ஒன்று கையளிக்கப்பட்ட போது, இரண்டு வாரத்தினுள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால் தற்போது மூன்று மாதங்களாகியும் பொலிஸார் குறித்த கிளினிக் கட்டடத்தில் இருந்து அகலவில்லை.

எனவே கர்ப்பிணித் தாய்மார்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த கட்டடத்தில் நிலை கொண்டுள்ள பொலிஸாரை வெளியேற்றி அந்தக்கட்டடத்தைப் பெற்றுத்தர ஆவன செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(க-12)

# சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான இறுதிக் கட்ட நடமாடும் சேவை

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு

முள்ளியவளை, ஒக.1

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான இறுதிக்கட்ட நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முள்ளியவளையில் அமைந்துள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை அலுவலகத்தில் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் பொதுமக்கள் பங்குபற்றிப் பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பலவன் பொக்கணை, வற்றாப்பளை, கேப்பாபுலவு, முள்ளியவளை மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு புதறிகுடா, தண்ணீரூற்று மேற்கு, கிழக்கு, மாமூலை, நீராவிப்பிட்டி கிழக்கு, மேற்கு கிச்சிராபுரம், கணுக்கேணி கிழக்கு, மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் இதில் கலந்து கொள்ள முடியும்.

இரண்டாம் திகதி வியாழக்கிழமை அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள சேவையில் செம்மலை மேற்கு, மதவாளசிங்கன், செம்மலை, உப்புமாவெளி, அளம்பில் வடக்கு, தெற்கு, குமாரபுரம், குமுழமுனை மேற்கு, கிழக்கு, மத்தி, தண்ணிமுறிப்பு ஆகிய கிராம சேவகர் பிரிவு மக்களும்,- .

ஏழாம் திகதி செவ்வாய்க்கிழமை கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் தெற்கு, வடக்கு, மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களும்,-

ஒன்பதாம் திகதி சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் முல்லைத்தீவு நகரம், கிழக்கு, மேற்கு தெற்கு. சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு தெற்கு, வடக்கு, வண்ணாகுளம், செல்வபுரம், கோயிற்குடியிருப்பு, மணற்குடியிருப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களும் கலந்து கொள்ளமுடியும்.

இந்த நடமாடும் சேவையினூடாக பிறப்புச் சான்றிதழ்கள், காலம் கடந்த பிறப்புப் பதிவுகள், விவாக சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொலைந்த தேசிய அடையாள அட்டைக்கான பொலிஸ் அறிக்கை, முதியோர் அடையாள அட்டை, ஆகியவற்றை முத்திரைக் கட்டணமின்றி இலவசமாக பெற்றுக் கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்களான கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இந்த நடமாடும் சேவையை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், கரை துறைப்பற்றுப் பிரதேச செயலகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கவை.

(க-433)

# ரூ. 5 லட்சம் பெறுமதியான வலைகள் நெடுந்தீவுக் கடலில் அறுத்து நாசம்

## அப்பகுதி சிறுதொழில் மீனவர் பாதிப்பு உடன் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நயினாதீவு, குருநகர் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இந்தப் பகுதிக்குள் தமது தொழிலை மேற்கொள்ளக்கூடாது என 2004ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், ஓக.1

நெடுந்தீவு சிறுதொழில் மீனவர்களின் 5 லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் வேறு பகுதி மீனவர்களால் அறுத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன என்று நெடுந்தீவு கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் க.ப.அமிர்தநாதர் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து உடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு நெடுந்தீவு மீனவரின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுமாறும் அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவு சிறுதொழில் மீனவர்கள் நெடுந்தீவு வடக்குக் கடலில் கரையில் இருந்து இரண்டரை மைல்கள் தூரத்தில் தமது தொழிலை செய்யக் கூடியதாக வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நயினாதீவு, குருநகர் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இந்தப் பகுதிக்குள் தமது தொழிலை மேற்கொள்ளக்கூடாது என 2004ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

எனினும் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் குறிப்பிட்ட தினங்களில் அத்துமீறி இந்தக் கடல் பரப்பினுள் தொழில் செய்வதுடன் நெடுந்தீவு மீனவர்களின் வலைகளையும் அறுத்துச் சேதப்படுத்துகின்றனர்.

இது தொடர்பாக பல தடவைகள் அறிவித்தும் கூட தொடர்ந்தும் இது போன்ற சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

எமது மீனவர்கள் சிறு தொழில் மீன்பிடித்தலிலேயே பெரிதும் தங்கியுள்ளனர். அவர்களுக்குத் தொழில் பாதிப்பு ஏற்படாதவாறு குறிப்பிட்ட தினங்களில் நெடுந்தீவுக் கடலில் அத்துமீறி நுழைந்து தொழில் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனப் பல தடவைகள் கேட்டிருந்தும் நயினாதீவு, குருநகர் பகுதி மீனவர்கள் இங்கிருந்து தொழில் செய்கின்றனர்.

எனவே வியாழன், வெள்ளிக்கிழமைகளில் எமது கடற்பகுதிக்குள் நுழைவதை குருநகர், நயினாதீவு மீனவர்கள் தவிர்க்க வேண்டும். அந்தப் பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் எமது நியாயமான கோரிக்கைக்கு மதிப்பளித்து பாதிப்புக்களில் இருந்து எமது மீனவரை விடுவிக்க உதவ வேண்டும் - என்றார். (த-7)

## எழுவைதீவு வைத்தியசாலைக்கு மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.1

எழுவைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு மருத்துவர் ஒருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அனலைதீவு அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவரே எழுவைதீவு அரசினர் வைத்தியசாலையிலும் மேலதிகமாகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் இந்த வைத்தியர் எழுவைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு சென்று பணியாற்றி வருகின்றார்.

எழுவைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு மருத்துவர் ஒருவர் இல்லாமையால் அங்குள்ள மக்கள் தமது மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனையடுத்தே அந்த வைத்தியசாலைக்குத் தற்காலிக மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். (த-17)

## வரணியில் டெங்கு ஒழிப்பு

தென்மராட்சி, ஓக.1

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினரும் கொடிகாமம் பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்களும் இணைந்து வரணி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு பரிசோதனைகளில் நேற்று ஈடுபட்டனர்.

டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏற்றவாறான சூழ்நிலையில் வைத்திருந்த அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் வரணிப் பகுதியில் இதுவரை இவ்வருடத்துக்குரிய வியாபார உத்தரவுப் பத்திரம் பெறாத வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## இடை நிறுத்திய பஸ் சேவையை மீண்டும் ஆரம்பித்து உதவுங்கள்

### பளைப் பிரதேச மக்கள் கோரிக்கை

பளை, ஓக. 1

இடைநிறுத்தப்பட்டுள்ள இரவு தங்கல் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு பளைப் பிரதேச மக்கள் இ.போ.ச.வின் வடமாகாண பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர்.

2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் பளை பஸ் நிலையத்தில் மூன்று பஸ்கள் தரித்துநின்று அதிகாலை 5.00 மணி தொடக்கம் 15 நிமிட இடைவெளியில் சேவையில் ஈடுபட்டன.

இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். நகரப் பாடசாலைகள், சாவகச்சேரி, கொடிகாமம், சந்தைகள் போன்றவற்றுக்குச் செல்லும் நோயாளர்கள், அரச ஊழியர்கள், பொது மக்கள் மரக்கறி உற்பத்தியாளர்கள் போன்றோர் பயனடைந்தனர்.

ஏ-9 வீதி வாகனப் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டு மூன்று வருடங்களாகியும் இன்றுவரை இரவுத் தங்கல் பஸ்கள் பளையில் தரிப்பதில்லை. அதிகாலை பஸ் சேவை இல்லாததால் பளைப் பிரதேச மக்கள் தூர இடங்களிலிருந்து வரும் தனியார் பஸ்களை நம்பி மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. காலையில் தூர இடங்களிலிருந்து வரும் தனியார் பஸ்களில் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்படுவதால் மாணவர்களும், சந்தைகளுக்கு மரக்கறி பொருள்கள் கொண்டு செல்வோரும் பயணிக்க முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பளை பஸ் நிலையத்தில் இரவு தரிக்கும் பஸ் காலை 5.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டால் சாவகச்சேரி வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலைஆகியவற்றுக்கு செல்லும் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்கள் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் உட்பட பலர் பயனடைவர் எனவும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் பி.ப. 4.30 மணிக்குப் பின்னர் நீண்ட தூரத்திற்குச் செல்லும் தனியார் மற்றும் இ.போ.ச பஸ்களே சேவையில் ஈடுபடுவதால் அவற்றில் பயணிக்க முடியாத நிலை பளைப் பிரதேச மக்களுக்கு ஏற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (த-9)

## அறிக்கையில் தவறு எனக் கூறி கிழித்தெறிந்தார் உறுப்பினர்

### வலி.தென்மேற்கு கூட்டத்தில் அமளி

வலி.தென்மேற்கு, ஓக.1

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்ட அறிக்கையில் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள் நீக்கப்பட்டு வேறு விடயங்கள் புகுத்தப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய உறுப்பினர் ஒருவர், அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறி கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சபை மண்டபத்தில் வைத்து அறிக்கையைப் பல துண்டுகளாகக் கிழித்தெறிந்தார்.

இதனைத் தொடர்ந்து சரியான அறிக்கை தயாரிக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று தவிசாளர் கூறியதனால் நிறுத்தப்படவிருந்த கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் ஆ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்ட நிகழ்ச்சி நிரலின்படி கடந்த மாதக் கூட்டறிக்கை பதில் செயலாளர் கிருஷ்ணகுமாரினால் வாசிக்கப்பட்டது.

அறிக்கை முழுமையாக வாசிக்கப்பட்டு முன்மொழிந்து வழிமொழிய இருந்த சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான கே.கௌரிகாந்தன் எழுந்து, இந்த அறிக்கை சரியான முறையில் பதியப்படவில்லை. உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட முக்கியமான கருத்துக்கள் குறிப்பாக, மருதடி விநாயகர் கோயில் சம்பந்தமான கருத்துக்கள் நீக்கப்பட்டு சபையில் தெரிவிக்கப்படாத கருத்துக்கள் புகுத்தப்பட்டுள்ளன. உறுப்பினர்களை ஏமாற்றும் விதத்தில் தயாரித்துள்ள இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறியதுடன் சபையில் வைத்து அறிக்கையைப் பல துண்டுகளாகக் கிழித்து எறிந்தார்.

இதனைத் தொடர்ந்து கூட்டம் நிறுத்தப்படுமா என்ற அச்சத்தில் உறுப்பினர்கள் இருந்தபோது தலைவர் சபையிலிருந்து வெளியேறி விட்டார்.

இந்த நிலையில் உப தலைவர் எஸ்.சிவகுமார் தலைமையில் கூட்டத்தை நடத்தலாம் என்று உறுப்பினர்கள் கூறினர். இதையடுத்து கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்த உப செயலாளர் எழுந்துசென்று தலைவரை மீண்டும் அழைத்து வந்து ஆசனத்தில் அமர்த்தினார்.

கடந்த மாத அறிக்கை சரியான முறையில் முழுமையாகத் தயாரிக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுமென்று தலைவர் கூறியதையடுத்துக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (த-115)

## காந்தி சிலை உடைப்பு மாநகரசபை கண்டனம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கே.விந்தன் இந்தத் தீர்மானத்தைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

யாழ்ப்பாணம், ஓக.1

அரியாலையில் மகாத்மா காந்தி சிலை உடைக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்.மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கே.விந்தன் இந்தத் தீர்மானத்தைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் உரையாற்றியபோது கூறியதாவது,

திருகோணமலையிலும் காந்தியின் சிலை உடைக்கப்பட்டது. அது குறித்து எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. நீதி கிடைக்காத நிலையில் தொடர்ந்தும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவது ஏற்றுக்கொள்ள முடியாது. இப்போது யாழ்ப்பாணத்தில் காந்தி அடிகளின் சிலை உடைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இப்படியான செயல்களை அனுமதிக்கமுடியாது. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை கிடைக்க மாநகரசபையின் மூலம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கினர். (த-7-17)

## துண்டி கடற்கரைப் பகுதியில் கழிவுகளைக் கொட்டத் தடை

யாழ்ப்பாணம், ஓக.1

கொழும்புத்துறை துண்டி கடற்கரைப் பகுதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மீறிக் குப்பைகளைக் கொட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றபோது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

துண்டி கடற்கரையில் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுப் பின்னர் அவை தீ மூட்டி எரிக்கப்படுகின்றன. மாநகரசபை சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை காரணமாக அப்பகுதிச் சுற்றாடல் பாதிக்கப்படுவதாகவும், அத்துடன் அருகில் உள்ள ஐயனார் ஆலயத்தின் தூய்மைக்குப் பங்கம் ஏற்படுவதாகவும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாக மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் அருளப்பு கொர்ணலிஸ் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மக்கள் செறிந்து வாழும் துண்டி கடற்கரைப் பகுதியில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் அவர்கள் தொற்று நோய்களுக்கு இலக்காகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த நடவடிக்கையை உடன் நிறுத்துவதற்கு யாழ். மாநகரசபை முன்வரவேண்டும் - என்றார்.

இதனை அடுத்து இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படும் என யாழ். மாநகரசபை முதல்வர் கூட்டத்தில் தெரிவித்தார். (த-17)

## நாகர்கோவில் உபதபாலகம் மீண்டும் அதே இடத்தில்

யாழ்ப்பாணம், ஓக.1

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் உப தபாலகம் மீண்டும் அதே இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போரினால் சேதமடைந்த இந்த உப தபாலகக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுக் கடந்த வெள்ளிக்கிழமை பொது மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் ஆலயத்துக்கு முன்பாக பழைய இடத்திலேயே உபதபாலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் தபால் தேவை வசதிகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-17)

### ராஜீவ் கொலைவழக்கு குற்றவாளிகளின்

# கருணை மனு பிரணாப்பிடம் சாதகமான பதில் கிடைக்கலாம்



இந்தியாவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பிரணாப் முகர்ஜியிடம், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் கருணை மனுவுக்கு சாதகமான பதில் கிடைக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் மரண தண்டனையை இந்த மூவரும் எதிர்கொண்டுள்ளனர்.

இந்த மூவரின் மரண தண்டனைக்கு எதிரான குரல்கள் தமிழகத்தில் மட்டுமல்ல உலகத் தமிழர் தேசங்களிலும் ஒலித்து வருகின்றன.

இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான புதிய ஜனாதிபதி பிராணாப் முகர்ஜியின் மேசைக்கு குறித்த மூவரின் கருணை மனு செல்லும் என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் ஆளும் இந்திய அரசின் ஐக்கிய முற்போக்கு முன் னணி அரசின் பங்காளிக் கட்சியான தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி, இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக மரண தண்டனை அளிக்கப்பட்டவர்களுக்கு எதிரான தமது கட்சியின் வலியுறுத்தல் தொடர்ந்து இருக்கும் என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில் எனது நிலைப்பாடு குறித்து நான் ஏற்கனவே கதைத்துள்ளேன். பொதுவாக நான் மரணதண்டனைக்கு எதிரானவன். பேரறிவாளன் மற்றும் ஏனையோரின் மரண தண்டனை விவகாரம் குறித்து எனது கோரிக்கையை எமது கட்சி ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது.

அந்தக் கோரிக்கை தொடர்ந்தும் இருக்கும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார் கருணாநிதி. (வ)

## லோக்சபா தலைவராகும் வாய்ப்பு சுஷில் குமாருக்கு



இந்தியாவில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால் காங்கிரஸ் கட்சியின் லோக்சபா தலைவராக மத்திய அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே நியமிக்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய நிதி அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகக் கடந்த 25ஆம் திகதி பதவியேற்றார்.

இந்தநிலையில் அவர் பதவி வகித்து வந்த லோக்சபா கட்சித் தலைவர் பதவி மற்றும் நிதித்துறை வெற்றிடமாக இருந்தது. தற்போது நிதித்துறையை பிரதமர் மன்மோகன்சிங் வைத்துள்ளார்.

எனவே நாடாளுமன்ற கூட்டத்தொடருக்கு முன்பு, லோக்சபா தலைவராக சுஷில் குமார் ஷிண்டே நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் மகாராஷ்டிரா மாநிலத்தின் முன்னாள் முதல்வர் ஆவார். தற்போது மத்திய அமைச்சரவையில் மின்துறை அமைச்சராக பதவி வகித்து வருகிறார். (வ)

## அஸாமில் குண்டுத்தாக்குதல் ஒருவர் சாவு: 7 பேர் காயம்

கோல்புரா, ஒக.1

அஸாம் மாநிலத்தில் இராணுவத்தை குறிவைத்து நடத்தப்பட்ட சக்தி வாய்ந்த வெடிகுண்டுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

அஸாம் மாநிலத்தில் கலவரம் வெடித்ததையடுத்து அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தங்கியுள் ளனர். கலவரப் பகுதிகளை பிரதமர் மன்மோகன் சிங் கடந்த சனிக்கிழமையும், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நேற்று முன்தினமும் பார்வையிட்டனர்.

இந்தநிலையில் நேற்று பிற்பகல் 12 மணிக்கு மேல் கோல்புரா மாவட்டத்தில் இராணுவத்தினரை குறிவைத்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பொதுமகன் ஒருவர் உயிர் இழந்தார். மேலும் 7 பேர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கலவரத்தைக் கட்டுப்படுத்த வந்த இராணுவத்தினரை குறி வைத்து நடந்த தாக்குதலால் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

### காந்தியின் புத்தகம் விரைவில் சீன மொழியில்

பீஜிங்,ஒக.1

காந்தியடிகளின் 'தன்னிகரற்ற தலைமைப் பண்பு' என்ற புத்தகம், சீன மொழியில் வெளியிடப்பட உள்ளது. முன்னாள் இந்திய தூதரான பாஸ்கல் ஆலன் நசரத், 'மகாத்மா காந்தியின் தலைமைப் பண்புகள்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இந்தப் புத்தகம் 2006 ஆம் ஆண்டு ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கீச மொழிகளில் வெளியிடப்பட்டது. தற்போது இந்தப் புத்தகம், சீன மொழி யிலும் வெளியிடப்பட உள்ளது.

இந்தப் புத்தகத்தை, சீன பல்கலைக் கழக, வரலாற்றுப் பேராசிரியர் ஷாங் குவான்யூ, மொழி பெயர்த்து வருகிறார்.

அடுத்த ஆண்டு இந்தப் புத்தகம் சந்தைக்கு வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சீன வர்த்தக வெளியீட்டு நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது. பீஜிங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், இந்தியத் தூதர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார். (வ)



அசாம் மாநிலம் கோக்ராஜ்கர் மாவட்டத்தில், கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் சந்தித்து ஆறுதல் கூறினார்.

## மாவோயிஸ்ட்டுகளுக்கு சீனா பயிற்சி

இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் மாவோயிஸ்ட்டுகளுக்கு பயிற்சியுடன் ஆயுதங்களை சீனா வழங்கி வருவதாக அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தியாவில் வட கிழக்கு மாநிலங்களான ஒரிசா, அசாம், ஹரியானா, பீகார், ஜார்கண்ட்டில் மாவோ தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

இவர்கள் இந்த மாநிலங்களில் தங்களின் ஆயுத பலத்தையும் படை பலத்தையும் உறுதிப் படுத்த சீனாவை நாடுகின்றனர். இதற்கு சீனாவும் முன்வந்து உதவி செய்துள்ளது.

அண்மையில் அருணாச்சல பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 3 மாவோ தீவிரவாதிகள் இந்தத்தகவலைத் தெரிவித்தனர்.

ஆயுதங்களுடன் பயிற்சியையும் சீனா, மியன்மார் எல்லைப்பகுதியில் வைத்து வழங்கி வருவதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். இந்த 3 பேரிடம் இருந்து 7 சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டு அவை தடயவியல் சோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாவோ தீவிரவாதிகளை ஒடுக்கி விட வேண்டும் என்று இந்தியா நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு சீனா பயிற்சி கொடுப்பது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சட்டவிரோதக் குடியேற்றம்தான் அஸாம் கலவரத்துக்குக் காரணம்

**அத்வானி சாடல்**

கோக்ராஜர், ஒக.1

அஸாமின் கோக்ராஜர், சிராங் உள்ளிட்ட மாவட்டங்களில் நிகழ்ந்த இன மோதல் மத ரீதியானது அல்ல என்றும் அதிக அளவிலான சட்ட விரோத குடியேற்றம்தான் காரணம் என்றும் பாரதீய ஜனதாக்கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி தெரிவித்தார்.

அஸாமில் போடோ இனத்தவருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே ஒரு வாரம் நிகழ்ந்த மோதலில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். சுமார் 4 லட்சம் பேர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த வன்முறை பாதித்த பகுதிகளைப் பார்வையிட இரண்டு நாள் பயணமாக வந்துள்ள அத்வானி நிவாரண முகாம்களில் உள்ளோரை நேரில் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

அஸாமில் நிகழ்ந்துள்ள மோதலானது இந்துக்களும் முஸ்லிம்களுக்கும் இடையேயான மோதலோ அல்லது பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையினருக்கு இடையேயான மோதலோ அல்ல. மிகப் பெரியளவில் பங்களா தேஷில் இருந்து எல்லைதாண்டி வந்து குடியேறுவதால்தான் பிரச்சினை கலவரமாக ஏற்பட்டுள்ளது.



இங்கே நான் கேட்ட விவரங்கள் அனைத்தும் மகிழ்ச்சி தரக்கூடியவையாக இல்லை.

இந்த வருடத்திலும் கூட இத்தகைய நிகழ்வுகள் நடப்பது வேதனையளிக்கிறது. உரிய நேரத்தில் இந்த விவகாரத்துக்கு தீர்வு காணாவிட்டால் நிலைமை மிகவும் மோசமடைந்து விடும். (வ)

# ஊடுருவலைத் தடுக்க இஸ்ரேலின் உத்தி

**இந்தியா திட்டம்**

இந்திய எல்லையில் ஊடுருவலைத் தடுக்க புதிய தொழில்நுட்பத்தைக் கையாள இந்தியா முடிவு செய்துள்ளது. இதன்படி இஸ்ரேல் கையாளும் நுட்பம் சாத்தியமா என்பதை ஆராய இந்தியா முடிவு செய்துள்ளது.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து வந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இது போன்ற சம்பவங்கள் இனியும் நிகழாமல் தடுக்கும் வகையில் புதிய மேம்பட்ட தொழில் நுட்பங்களைக் கையாள இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்த மாதத்தில் இந்தியக் குழுவினர் இஸ்ரேலில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளனர். அப்போது இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் (ஐடிஎப்) காஸா பகுதி மற்றும் மேற்குக் கரை உள்ளிட்ட எல்லையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்ய உள்ளனர் என்று 'ஜெருசலேம் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் வெளியான செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்தியக் குழுவினர் ஆய்வு நடத்தி பாகிஸ்தான் எல்லை மற்றும் பங்களாதேஷ் எல்லையில் அதைச் செயற்படுத்துவது குறித்து ஆராயப்படும். மும்பைத் தாக்குதல் சம்பவம் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாத வகையில் இந்த ஆய்வு அமையும்.

எகிப்து எல்லைப் பகுதியில் இஸ்ரேல் அரசு வேலி அமைத்து அதன் மூலம் சட்ட விரோத ஊடுருவலைத் தடுத்துள்ளது. சுமார் 150 கிலோ மீற்றர் நீளத்துக்கு அமைக்கப்பட்டு வரும் இந்தப் பணிகள் இந்த ஆண்டு இறுதியில் முடியும். 5 மீட்டர் உயரமுள்ள இந்த வேலியின் பல பகுதிகளில் ரேடார் மூலம் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊடுருவலைத் தடுக்க முடியும் என்று இஸ்ரேல் நம்புகிறது.

இதனிடையே அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம், இஸ்ரேல் பொருத்தியுள்ள இ.எல்.எம். 2112 ரக ரேடார்களின் செயல் திறன் குறித்து ஆய்வு செய்து வருகிறது. இத்தகைய ரேடார்களை எல்டா சிஸ்டம்ஸ் தயாரித்துள்ளது. இந்நிறுவனம் இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இந்த ரேடார்கள் ஊடுருவல்காரர்கள் எல்லையினுள் நுழைய முற்படும் போதே கண்டுபிடிக்க உதவும். மொத்தம் 5 வகையான ரேடார்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை 300 மீற்றர்- 20 கிலோமீற்றர் தூரத்தில் ஆள்நடமாட்டத்தைக் கண்டறிய உதவக் கூடியவை. அதே போல 40 கிலோமீற்றர் தூரத்தில் வரும் வாகனத்தைக் கண்காணிக்கும் திறன் கொண்டவை.

# அலெப்போ கைப்பற்றப்பட்டது

## சிரிய ராணுவத்திடமிருந்து தகவல்

டமஸ்கஸ், ஓக.1

சிரியாவின் முக்கிய பாரம்பரிய நகரான அலெப்போவை அந்த நாட்டு ராணுவத்தினர் மீண்டும் கைப்பற்றியுள்ளனர் என அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த நகரத்தில் தொடரும் கடும் தாக்குதல்களினால், அங்கிருந்த இரண்டு லட்சம் பேர் அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.




சிரியாவில், ஜனாதிபதி அசாத்தைப் பதவி விலகக் கோரி, கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு மார்ச் முதல் போராடி வருகின்றனர்.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்க, ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில், இதுவரை 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். தலைநகர் டமஸ்கஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், ராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன. கிளர்ச்சியாளர்களைக் கொன்று குவிக்கும் சிரியா அரசு மீது, பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா., பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்தத் தீர்மானத்தை, ரஷ்யாவும், சீனாவும் ஏற்கவில்லை. சிரியாவின் எல்லைப் பகுதிகளில், கிளர்ச்சியாளர்களின் கை சமீப காலமாக ஓங்கியுள்ளது.

ராணுவத்துக்கு எதிராக, ''எரிமலை'' என்ற பெயரில் கிளர்ச்சியாளர்கள் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இவர்களை ஒடுக்க இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க, அரசு படைகள் முயற்சிப்பதாக வந்த தகவலின்படி, ரஷ்யாவும், அமெரிக்காவும், கிளர்ச்சியாளர்கள் மீது, இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என, சிரியா அரசை எச்சரித்துள்ளன. சிரியாவின் பாரம்பரிய மாவட்டமாக யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட, அலெப்போவை கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசப்படுத்தியிருந்தனர். இங்கிருந்து அவர்களை விரட்டியடிக்க, சிரியா ராணுவம் இந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்குக் கிளர்ச்சியாளர்களும் பதிலடி கொடுத்து வருகின்றனர். அலெப்போ மாவட்டத்தில் உள்ள சலாஹிதீன் பகுதியிலிருந்து கிளர்ச்சியாளர்களை விரட்டி விட்டதாகவும், தற்போது இந்த மாவட்டம் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் சிரியா ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அலெப்போவின் மற்றப் பகுதிகளில் கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த பலர், துப்பாக்கிகளுடன் உலாவிக் கொண்டிருக்கின்றனர். அந்நியநாட்டு கூலிப் படையினர் தான் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதாக, சிரியா அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் தாக்குதல்கள் நீடிப்பதால், அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர். உயிருக்குப் பயந்து இரண்டு லட்சம் பேர், துருக்கி மற்றும் ஜோர்தான் நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். சிரியாவிலிருந்து வருபவர்களுக்காக ஜோர்தான் அரசு, ஒன்றரை லட்சம் பேர் தங்கும் அளவுக்கு அகதிகள் முகாமைத் தயார்படுத்தியுள்ளது. அலெப்போவில் தாக்குதல் நீடிப்பதால் தெருக்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. சொந்த மக்களையே கொன்று குவிக்கும் சிரியா அரசுக்கு, அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

## பிலிப்பைன்ஸைத் தாக்கியது 'சயோலா' சூறாவளி



மணிலா, ஓக.1

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் வீசிய சூறாவளியினால் 3 பேர் உயிரிழந்தனர். இதில் சிக்கிய 6 பேரைக் காணவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மணிலாவில் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் பல பகுதிகள் மழைநீரால் சூழப்பட்டுள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மணிலாவில் கடுமையான சூறைக்காற்று வீசியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். 6 பேரின் நிலை என்னவாயிற்று என்று தெரியவில்லை. இவர்களைத் தேடும் பணி முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளது. பொன்னே எனப்படும் புழுதிப் புயலைப் போல சூறைக்காற்று வீசியதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

அத்துடன் மிகுந்த சத்தத்துடன் இடியும் இடித்தது. பெரும்பாலான பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. மணிக்கு 105 கி.மீ. வேகத்தில் சூறைக்காற்று வீசியதாக வானிலை ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் புயல் எதிர்வரும் வியாழக்கிழமை அளவில் தாய்வான் கடல் பகுதியில் கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தப் புயலுக்கு 'சயோலா' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மொத்தம் 20 புயல்கள் மணிலாவைத் தாக்கும் என வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 7ஆவதாக இடம்பெற்றுள்ள புயல் 'சயோலா' தான் இப்போது தாக்கியுள்ளது. 'சயோலா' என்பது வியட்நாம் மற்றும் லாவோஸ் பகுதியில் காணப்படும் அரிய வகை பாலூட்டியாகும்.

## புலிகளின் உடல்கள் கண்டுபிடிப்பு

ஹனோய், ஓக.1

வியட்நாமில் காரில் புலிகளின் உடல்களைக் கடத்திச் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது.

குவாங் பனஹ் மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை வேகமாக வந்த காரை நிறுத்தி சோதனையிட்டதில் 2 புலிகளின் உடல்கள் இருப்பது தெரிய வந்தது.

இது குறித்துக் காரை செலுத்தி வந்தவரிடம் விசாரிக்கையில், இது வாடகைக் கார் என்றும், புலிகளின் உடல்களைக்கொண்டு செல்வதற்காக அறிமுகமில்லாத நபர் ஒருவரால் கார் வாடகைக்கு எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் எலும்பிலிருந்து மருந்துகள் தயார் செய்யப்படுகின்றன. இந்த மருந்துகள், சிறந்த வலி நிவாரணியாகச் செயல்படும் ஆற்றல் கொண்டவை.

100 கிராம் கொண்ட இந்த மருந்தின் விலையானது ரூ.55 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

வனவிலங்குகளைக் கொலை செய்தல் மற்றும் துன்புறுத்துதல் உள்ளிட்ட குற்றங்கள் வியட்நாமில்தான் அதிகமாக நடக்கின்றன என்று உலக வனவிலங்கு நிதியம் கடந்த வாரம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்காக வியட்நாம் அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படியே காடுகளுக்குள் நடமாடுபவர்கள் தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## காத்திருக்கும் கதிரைகள்...



ஒலிம்பிக் போட்டிகள் லண்டனில் கோலாகலமாக ஆரம்பமாகி சில நாள்கள் கழிவதற்கு முன்னரே, பார்வையாளர் வரவு வீழ்ச்சி கண்டுள்ளது. அரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பார்வையாளர் இருக்கைகள் அவர்களின் வரவுக்காகக் காத்துக்கிடக்கின்றன.

## கணவனைக் கட்சியிலிருந்து நீக்கியதை வரவேற்ற மனைவி

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து தன் கணவர் நீக்கப்பட்டுள்ளதை முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மகள் வரவேற்றுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப். இவர் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக இருக்கின்றார். இவரது மருமகன் முகமது சப்தார். குறித்த கட்சியின் இளைஞரணித் தலைவராக இருக்கின்றார். கட்சித் தலைவர்களை மதிக்காமல் செயல்படுகின்றார் எனவும், தனக்கென ஒரு குழுவை அமைத்து வருகின்றார் எனவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து, இவரைக் கட்சியிலிருந்து விலக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் சப்தார் நீக்கப்பட்டுள்ளார். முஸ்லிம் லீக் கட்சி, குடும்பம் சம்பந்தப்பட்டது கிடையாது. கட்சியில் அனைவரும் சமம் என்பதை என் தந்தை நவாஸ் நிரூபித்துள்ளார். என் கணவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதற்காக கவலைப்படவில்லை. பெருமிதப்படுகிறேன் என, நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் தெரிவித்துள்ளார்.

## இன்றும் பறக்கிறது அமெரிக்கக் கொடி

லண்டன், ஓக.1

சந்திரனில் நடப்பட்ட அமெரிக்கக் கொடி இன்றும் பறந்து கொண்டிருப்பதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

1969ஆம் ஆண்டு அமெரிக்காவின் அப்பலோ- 11 விண்கலம் சந்திரனைச் சென்றடைந்தபோது, நீல் ஆம்ஸ்ட்ரோங் தலைமையிலான விண்வெளி வீரர்கள் அங்கு அமெரிக்கக் கொடிகளை நட்டு வைத்தனர். புவிவட்டபாதையில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க விண்வெளி மையத்தின் ஆய்வுக் கெமரா, சமீபத்தில் வெளியிட்டுள்ள படத்தில், சந்திரனில் நடப்பட்ட கொடி இன்னும் பறந்து கொண்டிருப்பது தெரியவந்துள்ளதாகச் சந்திரனைப் பற்றிய ஆய்வுத் திட்ட விஞ்ஞானி மார்க் ரொபன்சன் தெரிவித்துள்ளார்.

அப்பலோ விண்கலம் நிலவிலிருந்து புறப்படும் போது, விண்கலத்தின் இயந்திரம் வெளியிட்ட வெப்பத்தால் கொடிகள் எரிந்து போயிருக்கும் என, சில விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். சந்திரனில் 250 முதல் 280 டிகிரி பாரனைட் அளவுக்கு வெப்பநிலை காணப்படுகிறது. இந்த வெப்பத்தில் அமெரிக்கக் கொடி 40 ஆண்டுகளாகப் பறந்து கொண்டிருக்குமா? என்ற சந்தேகத்தையும் சிலர் கிளப்பியுள்ளனர். ஆனால், நாசா விண்வெளி ஆய்வுக் கெமரா எடுத்துள்ள படம், நிலவில் நடப்பட்ட ஆறு கொடிகளில் ஒரு அமெரிக்கக் கொடி மட்டும் இன்றும் பறந்து கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதாக மார்க் ரொபன்சன் தெரிவித்துள்ளார்.

1969ஆம் ஆண்டு அமெரிக்காவின் அப்பலோ– 11 விண்கலம் சந்திரனைச் சென்றடைந்தபோது, நீல் ஆம்ஸ்ரோங் தலைமையிலான விண்வெளி வீரர்கள் அங்கு அமெரிக்கக் கொடிகளை நட்டு வைத்தனர்.



## தொலைக்காட்சி கலையகத்தில் தீ விபத்து

பாகிஸ்தானில் உள்ள தொலைக்காட்சிக் கலையகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்; 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கிழக்குப் பாகிஸ்தானில் காரி ஷாஹு பகுதியில் தனியார் தொலைக்காட்சிக் கலையகம் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. புனித ரம்ழான் மாதத்தில், நோன்பு தொடங்குவதற்கு முன், சூரியோதயத்துக்கு முன்னதாக நடக்கும் சுஹேரி விருந்து குறித்த சிறப்பு ஒளிபரப்பின் போது இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பெரும் வெள்ளம்; அமிழ்ந்தன வீடுகள்

## வடகொரியாவில் 88 பேர் சாவு; 134 பேருக்குக் காயம்

பியாங்யாங், ஓக.1

வடகொரியாவில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் அங்குள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அணைகள் மற்றும் ஏரிகள் நிரம்பி வழிகின்றன.

மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் பாய்ந்தது. அதன் காரணமாக தலைநகர் பியாங்யாங் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீடுகள் தண்ணீரில் மிதக்கின்றன. வீதிகளும் விளைநிலங்களும் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கின்றன. பொதுமக்கள் தங்கள் வீடுகளை



விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். இதற்கிடையே வெள்ளத்தில் சிக்கி இதுவரை 88 பேர் உயிரிழந்துள்ளனர். 134 பேர் காயம் அடைந்துள்ளனர்.

63 ஆயிரம் பேர் வீடுகள் இன்றி தவிக்கின்றனர். 12 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன.

இவை தவிர 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. வீடுகளை இழந்த மக்கள் தங்க இடம் தேடி தவித்து வருகின்றனர். சுமார் 4,800 ஹெக்டேயர் விளை நிலத்தில் விளைச்சல் செய்யப்பட்டிருந்த பயிர்கள் தண்ணீரில் மிதக்கின்றன. மழை வெள்ளம் காரணமாக வட கொரியாவில் 30 லட்சம் மக்கள் உணவின்றித் தவிப்பதாகஐ.நா.சபைஅறிவித்துள்ளது.

# பிஜி முன்னாள் பிரதமர் ஊழல் குற்றவாளி



பிஜியின் முன்னாள் பிரதமர் லைசெனியா குவரேஸ், ஊழல் வழக்கில் குற்றவாளி என, அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கில் அவருக்கான தண்டனை விவரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

பிஜியில், 2000ஆம் ஆண்டு பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், லைசெனியா குவரேஸ். ஆறு ஆண்டுகள் பிரதமராக இருந்த இவர், ராணுவ புரட்சியில் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். அரசு முதலீட்டு நிறுவனமான பிஜியன் ஹோல்டிங்ஸ் என்ற நிறுவனத்தின் இயக்குநராக 1992 - 1995ஆம் ஆண்டுகளில் இவர் பதவி வகித்த போது, அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக, லஞ்ச ஒழிப்புத் துறையினர் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவரைக் குற்றவாளி என, அறிவித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது. அவருக்கான தண்டனை விவரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. அவருக்கு, நான்கு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கலாம், என எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஊழல் வழக்கில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால், அவர் இனி மேல் தேர்தல்களில் போட்டியிட முடியாது. - எனத் தெரிவிக்கப்படுகின்றது

# உகண்டாவில் பரவுகின்றது ஆட்கொல்லி வைரஸ்

உகண்டாவில் எபோலா எனப்படும்ஒருவிதஆட்கொல்லி வைரஸ் பரவிவருவதாகஎழுந்த தகவலால் அந்த நாட்டு மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். இது தொடர்பாக அந்த நாட்டு ஜனாதிபதி, பொதுமக்களை கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஆபிரிக்க நாடான உகண்டாவில் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்புஒருவிதவைரஸ் தாக்குதலால் நோய்த் தொற்று ஏற்பட்டு தலைநகர் கம்பாலா மருத்துவமனையில் சிகிச்சைப் பயனின்றி 14 பேர் இறந்துள்ளனர்.இந்த வைரஸிற்கு எபோலா என பெயரிட்டுள்ளனர்.

இந்த வைரஸ் தாக்கியவர்களை , கைகுலுக்கினாலோ, முத்தமிட்டாலோ, அவர்களோடு உடலுறவு வைத்தாலோ தொற்று நோய் ஏற்பட்டு 90 சதவீதம் இறப்பது உறுதி எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் உகண்டாவில் மக்களிடையே எபோலா வைரஸ் குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி யூவேரிமுசுவெய்னி, நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி வாயிலாக மக்களுக்கு கூறுகையில், எபோலா வைரஸ் வேகமாகப் பரவி தலைநகர் கம்பாலாவிலும் பரவியுள்ளதால், கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.எபோலா வைரஸ் 2000ஆம் ஆண்டு பரவியதில் 425 பாதிக்கப்பட்டனர்.

இவர்களில் 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் எனவும், இந்த வைரஸ் தாக்கியவர்களுக்கு, இடைவிடாத காய்ச்சல், தலைவலி, வாந்தி போன்ற அறிகுறிகள் தென்படும், பின்னர் சிறுநீரகத்தைத் தாக்கும் எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது. இதற்கு தற்போது எதிர்மருந்து கிடையாது என்பதால் உகண்டாவாசிகள் பீதியில் உறைந்துள்ளனர்.

# பஸ் மீது ரயில் மோதி, 8 பேர் சாவு

வார்ஸோ, ஓக.1

போலந்தில் உள்ள முக்கிய நகரான பராடோஸ்ஸிவெஸ்ஸில் நின்று கொண்டிருந்த சிறிய ரக பஸ் மீது ரயில் மோதியதில் 8 பேர் உயிரிழந்தனர்; 2 பேர் படுகாயமடைந்தனர்.

போலந்தின் பராடோஸ்ஸிவெஸ் நகரத்தில் சிறிய ரக பஸ்ஸில் உக்ரேனைச் சேர்ந்த 10 தொழிலாளர்கள் சென்று கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரும், அங்குள்ள உணவு தயாரிக்கும் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள்.

பராடோஸ்ஸிவெஸ் அருகே ரயில்பாதையைக் கடக்கும்போது, எதிர்பாராதவிதமாக பஸ் நின்றுவிட்டது. ஓட்டுநர் எவ்வளவோ முயற்சி செய்தும், பஸ்ஸை இயக்க முடியவில்லை. அதற்குள் வேகமாக வந்த ரயில், பஸ் மீது பயங்கரமாக மோதியது. இதில் பஸ் சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டது.



விபத்தின்போது பஸ்ஸில் வந்த 8 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். ஆனால், ரயிலில் வந்த 30 பயணிகளில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. பஸ்ஸில் அதிக பயணிகளை ஏற்றி வந்ததும் விபத்துக்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.


# ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
21.10.1989

## அமரர்
## கிருஷ்ணமூர்த்தி கோகுலன்

இறையின் அடியில்
01.08.2011



ஓராண்டுதான் ஓடிப் போனதுவோ?
ஓ! கண்ணே எம் கோகிலா....
ஈர விழி காயவில்லை எம் இதய மலரே
இதயமது துடிக்குதடா.....
பாரதில் எம்மை விட்டுப் பறந்தோடிப்போனதெங்கே
பாச மலரே வாசமது மறையுமுன் வாசல் விட்டுப் போனாயோ?
தீராத கவலைதனை தீர்க்க வழி தெரியவில்லை
தங்கமணியே! கோகிலனே!
வாராயோ.... மீண்டும் இம் மண்ணில் வாராயோ
வதங்கி வாடும் பயிர் எமக்கு நீராக வாராயோ...
இன்றல்ல அன்றல்ல என்றும் உன்
இனிய நினைவுடனே இங்குநாம் வாழ்ந்திடுவோம்
இறையடி இரந்து ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி..... சாந்தி.... சாந்தி.....!

குடும்பத்தினர்.


(21164)(2-6-7)

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(12)

வேதனைப்படுகிறான், விரக்திக்கு ஆளாகிறான், வாழ்க்கை தோல்வியில் முடிந்து போகிறது.

சோதனைகள் தோன்றுகின்றபோது அதைச் சந்திக்க முடிவெடுத்து விட்டால், அதற்குத் தேவையான ஆற்றல் இயற்கையாகவே கிடைக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். ஆற்றல் என்பது நம்முள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு சக்தி. நாம் அதை எழுப்பி விட்டால் அது துரிதமாக வேலை செய்யத்



தொடங்குகிறது. இந்தச் சக்தியை நம்மில் பலர் உணர்வதே இல்லை.

சோதனைகளைச் சந்திக்க விரும்புகின்ற அனைவரும் இந்தச் சக்தியைப் பற்றித் தெரிந்துகொள்வது அவசியம். உங்களுக்கு ஒரு கடுமையான சோதனை ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். அதை எப்படிச் சமாளிப்பது எனத் தெரியாமல் தடுமாறுகிறீர்கள். இதைச் சமாளிக்க முடியாமல் போய்விடுமோ என்று அச்சப்படுகிறீர்கள். இந்த அச்சம் வேர் பிடித்து வளர்ந்து சமாளிக்க முடியாது என்கிற மன நிலையினை உங்களிடம் தோற்றுவித்து விடுகிறது. இதை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

இந்தச் சோதனையை நான் வெற்றிகரமாகச் சமாளித்து விடுவேன் என்று நீங்கள் நினைக்க ஆரம்பிப்பது முதல் கட்டம். இவ்வாறு நீங்கள் எண்ணத் தொடங்கிய உடனேயே, சோதனையால் ஏற்பட்ட மனச்சோர்வு மெல்ல மெல்ல உங்களை விட்டு அகல ஆரம்பிக்கும். சமாளித்து விடலாம் என்கிற எண்ணம் உறுதி பெறுகின்றபோது, உங்களை அறியாமலே ஒரு தன்னம்பிக்கை தோன்றுவதையும் பார்க்கலாம். இதுதான் உங்களுக்குக் கிடைத்துள்ள முதல் பிடி. இந்தப் பிடியை நீங்கள் இறுக்கமாகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

சோதனைகளைச் சமாளிக்க முடியும் என்று நீங்கள் எண்ணுவதற்குப் பெயர்தான் ஆக்கபூர்வ சிந்தனை.

முடியாது என்கிற எண்ணத்தை முதலில் உங்களுடைய மனதில் இருந்து அகற்றிட வேண்டும். முடியாது என்பது ஓர் எதிர்மறைச் சிந்தனை. இது நாம் செய்கின்ற காரியங்களுக்கு முட்டுக்கட்டைகளைப் போடும். முன்னேறிச் செல்ல தடைகளை ஏற்படுத்தும். ஆக எதிர்மறைச் சிந்தனைகளுக்கு கொஞ்சம் கூட இடம்கொடுக்கக் கூடாது.

சாதாரணமாக நம்முடைய மனதில் எதிர்மறைச் சிந்தனைகள் சுலபத்தில் இடம்பிடித்து விடும். ஒரு காரியத்தைப் பற்றி நாம் எண்ணுகின்ற போதே, அது நடக்காது என நம்மை எச்சரிக்கும். இம் மாதிரி சிந்தனைகள் கொஞ்சம் கொஞ்சமாக நம்மிடையே நிரம்ப ஆரம்பித்து விடுமானால் நம்மால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. எதுவும் நம்மால் முடியாது என்கிற தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி விடுவோம்.

இதிலிருந்து விடுபடுவது எப்படி? ஓர் அறையில் கெட்ட காற்று இருந்தால் அதை அப்புறப்படுத்த என்ன செய்வோம் என்று யோசித்துப் பாருங்கள்.

நல்ல காற்றை உள்ளே அனுமதிப்பதன் மூலம் கெட்ட காற்றை அப்புறப்படுத்திவிடுவோம்.

நல்ல காற்று வர வர, கெட்ட காற்று கொஞ்சம் கொஞ்சமாக இடம்பெயர்ந்து விடும். அது போலத் தான் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை நாம் வளர்த்துக் கொள்ளும்போது எதிர்மறைச் சிந்தனைகள் நம்முடைய மனதில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறத் தொடங்குகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயத்தையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவாகவே எதிர்மறைச் சிந்தனைகள் நம்முடைய மனதில் ஆழமாக வேரூன்றி நிலைத்து விடுகின்றன. அவை அவ்வளவு சுலபத்தில் நம்முடைய மனதை விட்டு வெளியேறுவதில்லை. ஆக்கபூர்வச் சிந்தனைகள் பலம் பெற்றவையாக இருக்கும்போது எதிர்மறைச் சிந்தனைகள் பலமிழந்து வெளியேறத் தொடங்குகின்றன.

இந்த அடிப்படையினை நீங்கள் கவனத்தில் கொண்டால் ஓர் உண்மை தெளிவாகும். ஒரு காரியத்தில் வெற்றி பெறுவோம் என்கிற ஆக்கப்பூர்வ சிந்தனை உங்களிடம் எந்த அளவுக்கு பலம் பெற்று விளங்குகிறதோ, அந்த அளவுக்கு வேகத்துடன் எதிர்மறைச் சிந்தனைகள் உங்கள் மனதை விட்டு நீங்கி விடும்.

ஒரு சோதனை உங்களை எதிர்நோக்கும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டுமென இனி யோசித்துப் பார்க்கலாம்.

சோதனை கடுமையானதாக இருக்கலாம். இதைச் சமாளிக்க முடியாது என்று எடுத்த எடுப்பிலேயே நீங்கள் எண்ணத் தொடங்கி விட்டால், ஏற்கனவே உங்களிடம் உள்ள எதிர்மறைச் சிந்தனை பலம் பெற்று விடுகிறது. மாறாக இந்தச் சோதனையில் எப்படியும் வெற்றி பெறுவேன் என்று நீங்கள் எண்ண ஆரம்பித்தால் எதிர்மறைச் சிந்தனை பலவீனம் அடையத் தொடங்கும்.

ஒரு காரியத்தை செய்ய முடியும் என்கிற நம்பிக்கைதான் அந்தக் காரியத்தைச் செய்வதற்கு ஆதாரமாகிறது.

*(தொடரும்)*

-பி.சி.கணேசன்-

# முன்பள்ளி மாணவரின் விருப்புக்கு ஏற்பவே கற்பித்தலை மேற்கொள்வது அவசியம்

## கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

முன்பள்ளிப் பருவம், மாணவர்களின் கற்றலுக்கான ஆரம்ப அடித்தளம் என்பதால் அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்றாற்போல் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்ட வேண்டும்.

மாறாக அவர்களின் விருப்பங்களுக்கு இடம் கொடுக்காமல் பெற்றோர், ஆசிரியர்கள் தமது விருப்பத்துக்கேற்ப கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதால் மாணவர்களின் ஆரம்பக் கல்வி பெரும் பின்னடைவைச் சந்திப்பதுடன் கற்றல் என்பது மிகவும் வெறுக்கத்தக்க விடயம் என்ற கருத்து அவர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும் என்று யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் தெரிவித்தார்.

சுழிபுரம் பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே தனபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்பள்ளிகள் மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியை வழங்குவதுடன் கலகலப்பு, விளையாட்டு, களியாட்டம் என இணைந்த உற்சாகமான கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். எமது பிரதேசத்தில் சமகாலத்துக்கேற்ப பல நவீன முன்பள்ளிகள் உருவெடுத்துள்ளன. இந்த முன்பள்ளிகளில் இத்தகைய கற்றல் செயற்றிட்டங்களைக் கொண்டு வரவேண்டும்.

இதன் மூலம் முன்பள்ளி மாணவர்கள் இயல்பாக கற்றலை மேற்கொள்ள வழிநடத்தப்படுவதுடன், கற்றலில் தாமாகவே ஆர்வமும் செலுத்துவார்கள். அல்லாது போயின் முன்பள்ளி மாணவர்கள் தமது பருவத்துக்கு ஏற்றாற்போல் விளையாட்டு முறையான கற்றலில் கவனம் செலுத்தாது கட்டாயப்படுத்தப்பட்ட வெறும் புத்தகத்துடன் கூடிய கற்றல் முறை அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கும்.

தமது கௌரவத்துக்காக தமது பிள்ளைகள் இதைத்தான் கற்க வேண்டும் என வலுக்கட்டாயமாக பெற்றோர் ஆசிரியர்கள் மூலம் கற்றலைத் திணிக்க முற்பட்டால், இவர்கள் கல்வியில் ஈடுபாடு காட்ட முடியாமல் முன்பள்ளி பருவம் முடித்து, பாடசாலைக்குச் செல்ல ஆரம்பிக்கும் போது கல்வியில் ஒரு வெறுப்பு நிலையில் தான் பாடசாலைக்குச் செல்வார்கள்.

இதன் காரணமாக பிள்ளைகள் ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி மட்டம் மிகக் குறைவடைந்து உள ரீதியாக பாதிக்கப்பட்டு கற்றலில் மிகவும் பின் தங்கியவர்களாக இருப்பார்கள்.

முன்பள்ளி கற்றல் என்பது ஓர் இனிப்பான விடயம் எனும் ரீதியில் சிறார்களின் விருப்பங்களுக்கு இடம் கொடுத்து சுய ஆளுமையுடன் அவர்களின் ஆர்வத்துக்கு ஏற்ற முறையில் கற்பதற்கு வழி காட்ட வேண்டும் - என்றார்.

(எ-14)



கோப்பாய் சரஸ்வதி வித்தியாலயத்தின் நூற்றாண்டு மலர் வெளியீடும் கோப்பாய் இணையத்தள அறிமுக நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி திருமுருகன் மண்டபத்தில் நடைபெற்றது. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலின் முதற்பிரதியை வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். (எ)

# நியமனம்

தென்மராட்சி, ஓக.1

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு எக்ஸ்-ரே உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்பளையைச் சேர்ந்த பி.வீ.ஜ. நுவான் என்பவர் மாகாண சுகாதார சேவைகள் அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டு கடந்த 23 ஆம் திகதி திங்கள்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-9)

# மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி

நவாலி, ஓக.1

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் தரம் 11 இல் கல்வி பயிலும் செல்வி யஸ்மினி 2012 ஆம் ஆண்டுக்கான வணிகப் போட்டியில் கோட்டத்திலும், வலயத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதனையடுத்து மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளார்.

(எ-100)

# பக்தி இயக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு இசைப்பாடல்கள் வெளியிடப்பட வேண்டும்

## ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஓக.1

''தமிழ் உணர்வோடும் சமய நம்பிக்கையோடும் பக்தி இயக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு ஆலயங்களின் வரலாற்றை உள்ளடக்கிய இசைப்பாடல்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்'' என்று ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித்தார்.

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலய அருள் வியாபகத்தை உள்ளடக்கி சி.விவேகானந்தன் இயற்றி முரளிதரனின் இசையமைப்பில் எஸ்.சாந்தன் பாடி ஏழாம் திருவிழா உபயகாரர் கதிரவேலு சத்தியமூர்த்தியின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட இறுவட்டின் வெளியீட்டு நிகழ்வு ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இசைப் பாடல் இறுவட்டை வெளியிட்டு வைத்து உரையாற்றும்போதே லலீசன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பல்லவர் கால பக்தி இயக்கம் நாயன்மார்களால் மிக நெருக்கடியான சூழலில் முன்னெடுக்கப்பட்டது. நாயன்மார்கள் இறைவனின் அருள் வியாபகத்தை வியந்து அருள் பாடல்களாக பாடி மக்கள் இயக்கமாக முன்னெடுத்தனர். அதில் வெற்றியும் கண்டனர். அவையே இன்று நாம் பாடிப்பரவி வரும் தேவார, திருவாசகங்கள்.

இன்றைய காலக்கட்டத்தில் ஆலயங்களின் வரலாறுகள் அருள் வியாபகத்தை வெளிப்படுத்தி இசைப்பாடல்கள் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இது வரவேற்கத்தக்கது. இத்தகைய முயற்சிகள் தொடர வேண்டும் பக்தி இயக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு பக்திப் பாடல்கள் உதவ வேண்டும். தமிழ் உணர்வையும் சமய நம்பிக்கையையும் வளர்த்தெடுப்பதற்கு இசைப்பாடல்களை துணையாகக் கொள்ள முடியும்.

இசைப்பாடல்களை வெளியிடுவதற்கு தென்னிந்தியப் பாடகர்களை நம்பியிருக்க வேண்டிய தேவை இல்லை.

உள்ளூர் கலைஞர்கள், பாடகர்கள் ஆற்றல்மிக்க நிலையில் உள்ளனர். அவர்களைப் பயன்படுத்தலாம். இசைப்பாடல்கள் மூலம் தலத்தின் பெருமையும், வரலாறும் எடுத்து இயம்பப்பட வேண்டும். இதன் மூலம் வரலாற்றை ஆவணமாக பேணுகின்ற நிலையும் உறுதி செய்யப்படும். வரலாற்றுக்கு பாடல்கள் சான்றாக அமையும். எனவே இசைப்பாடல் வெளியீட்டில் சமூகம் அதீத அக்கறை கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

ஓம் சக்தி வெளியீடாக மலர்ந்த இசை இறுவட்டின் முதற்பிரதியை ஆலய மகோற்சவ குரு சிவஸ்ரீ. வி.கஜேந்திரக் குருக்களும் சிறப்புப் பிரதியை ஆலய நிர்வாகி இ.கணேசலிங்கமும் பெற்றுக்கொண்டனர்.

(எ-11)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# வன்னியின் அடையாளம் அழிகின்றதா?

வன்னி, விவசாய வளத்தின் அடையாளமாகப் பார்க்கப்படும் மரபொன்று இருந்து வருகின்றது. பண்டைக் காலம் தொட்டு இந்தப் பிராந்தியத்தில் இயற்கையாக இருந்திருக்கின்ற நீர்நிலைகளும், பின்னர் குறுநில அரச உருவாக்கத்தோடு அமைக்கப்பட்ட சிறு குளங்களும், பிரிட்டிஷ்காரரின் வருகையோடு அகலிக்கப்பட்ட பெருங் குளங்களும், சுதந்திரத்தின் பின்னர் மேலும் விஸ்தரிப்புப்பெற்ற நீர்ப்பாசன விருத்திகளும் இணைந்தே அந்த நிலத்துக்கு இந்த அடையாளத்தை வழங்கின.

அங்கு வாழ்ந்த மக்களும், பல்வேறு கட்ட குடியேற்றத் திட்டங்களுக்கு அமைவாக வன்னியில் குடியமர்ந்த வேறு பிராந்திய மக்களும் விவசாயத்தையே தமது வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டனர். இவர்களின் வரவோடு வன்னியின் விவசாயம் உச்சக்கட்ட வளர்ச்சியைக் கண்டது. இங்கு விளைவிக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் இலங்கையின் பிற மாவட்டங்களுக்கும் பங்கீடு செய்யப்பட்டன. வேறுவகையில் சொல்வதானால் வன்னி வடக்கின் தானியக் களஞ்சியமாகத் தன்னை தக்க வைத்துக் கொண்டது.

விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்றிருந்த காலத்திலும், அவ்வப்போது இராணுவ ரீதியான பின்னடைவுகளைச் சந்தித்திருந்தபோதும் அங்கு வாழ்ந்த மக்களையும், போராளிகளையும் காப்பாற்றியது வன்னியின் விவசாயம்தான். இலங்கை அரசு பொருளாதாரத் தடை விதித்து தமிழர்களைப் பட்டினி போட்டுக்கொலை செய்யத் திட்டமிட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம், அந்தத் திட்டத்தை அர்த்தமற்றதாக்கியதும், மண்டியிடாத விடுதலைப் பற்றை உரமேற்றியதும் அந்த விவசாய மூலம் தான். எங்களிடம் எப்போதும் உப்புண்டு நெல்லுண்டு எனும் நினைப்பு எந்தத் தடையின் போதும் மண்டியிடலை நினைத்துக்கூடப் பார்க்கவைக்கவில்லை.

ஆனால், இறுதிவரை வன்னியை மையப்படுத்தியிருந்த தமிழரின் விடுதலைப் போராட்டம் மௌனிப்பு நிலைக்கு வந்த கையோடு, அந்த நிலத்தின் தனித்துவ அடையாளமாக இருந்த விவசாயமும் பெரும் எழுச்சியைத் தொட்டிருக்க வேண்டும் ஆனால் அது நடக்கவில்லை.

நிலத்தின் உரிமையாளர்களானவர்கள் அனைவரும் குடிபெயர்க்கப்பட்ட கையோடு குளங்களும், விவசாய நிலங்களும் பாழடைந்து விட்டன. மீண்டு வந்து பழைய தொழிலை ஆரம்பித்த போது தான் குளங்களிடம் நீர் கையிருப்பில் இல்லாதது தெரியவந்தது. பல விவசாயிகள் ஆச்சரியம் அடைந்தனர். இதற்கு முன்னர் எப்போதும் இப்படி நடந்ததேயில்லை எனப் புலம்பினர். தம் பழைய கடவுள்களைத் துணைக்கு அழைத்தனர். நீர் வேண்டி இரணைமடுக்குளத்தில் வேள்வி செய்தனர். ஆனால் மழையும் பெய்யவில்லை. குளத்துக்கு நீரும் ஏறவில்லை.

வங்கிகளில் விவசாயத்துக்காக வாங்கிய கடன்களின் வட்டி வீதம் மட்டும் ஏறிக்கொண்டேயிருப்பதாக கவலைத் தெரிவிக்கும் விவசாயிகள், தமக்கு ஏற்பட்டுள்ள வறுமையையும், வறட்சியையும் நினைத்து அனைவரிடமும் புலம்புகின்றனர்.

நீர்ப்பாசனத் துறை சார்ந்த அதிகாரிகள் கூறுவதுபோல், திருட்டு நீர் விநியோகம், அளவுக்கதிகமான விதைப்பு, ஆவியாதல், வீண் விரயம் போன்ற காரணிகள் இடப்பெயர்வுக்கு முன்னரும் இருந்தன. ஆனால் விவசாயத்துக்குப் போதுமான நீர் எப்போதும் குளங்களில் இருந்தது. இப்போது மட்டும் எப்படி இந்தப் பற்றாக்குறை வந்தது என்ற கேள்வியை அனைவரும் முன்வைக்கின்றனர்.

அதற்கு அந்த மக்களிடம் ரகசியமான பதில் இருக்கின்றது. அதனைப் உரத்து யாராவது சொல்வார்களா என்ற எதிர்பார்ப்போடுதான் அந்தக் கேள்வியை முணுமுணுக்கின்றனர். வன்னியில் இருக்கின்ற பெரும்பாலான பெரிய குளங்களின் அருகோடு இருப்பது இராணுவத்தினர்தான். அவர்கள் தேவையற்ற நேரங்களில் குள நீரைத் திறந்த விட்டதனால் தான் இந்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என ஒரு கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கின்றனர். ஒரு தொழிலில் அனுபவப்பட்டவர்களின், அந்தத் தொழில் பற்றிய கண்டுபிடிப்பு பொய்யாகாது என்ற பொதுவிதியின்படி இதனை ஏற்றால், நீர் பற்றாக்குறைக்கான காரணத்தை ஊகிக்கலாம்.

மாறுபடும் சூழல் நிலைமைகளால் மழை வீழ்ச்சி குறைந்துள்ளமையும் இந்தப் பற்றாக்குறைக்கு ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

# தீதும் நன்றும் பிறர்தர வாரா?

செந்தூரி

பலாலியில் பதினொரு இராணுவ மினிமுகாம்களை ஒரே தடவையில் அடித்திருந்தார்கள். 'பொடியள்'. காயம்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கான வாகனங்களின் வேகத்திற்காக வீதி வளைவுகளிலிருந்த வேலிகள் வெட்டிவிடப்பட்டிருந்தன.

இரண்டொரு நாள்கள் சண்டை நீடிக்கலாம் என்கின்ற அனுமானம், மரவள்ளிக் கிழங்குப் பொரியலை பொலுத்தீன் பைகளில் அடைக்கும் பணியில் மும்முரமாக இருந்த அத்தை, சித்திமாரின் பேச்சுக்களிலிருந்து அப்போது ஆறுவயதுப் புத்திக்கு அவ்வளவாக ஏறவில்லை. பெரும்பாலான வீடுகளில் ஆண்கள் எவருமேயில்லை. போராளிகளாயில்லாத போதிலும் இரத்தம் தோய்ந்து வரும் சீருடைப் பையன்களைத் தூக்கி இறக்கவும், களமுகப்புகளுக்கு விநியோகம் காவும் வாகனங்களை ஓட்டவும், ஏற்றி இறக்கல்களில் ஒத்தாசை புரியவும் என்று எல்லோருக்குமே வேலை இருந்தது.

அன்றைக்குக் கேட்ட "குண்டுச் சத்தம்" ஒன்றுக்குக்கூட நெஞ்சில் பயம் ஏறவில்லை. இன்றைக்கும் பசுமையாக நினைவிலிருக்கும் அந்த நாள்களில் யாழ்ப்பாணத்தில் இராணுவ பிரசன்னம் பலாலி எனப் படுகின்ற எல்லைக்குள் மட்டுமே, உட்கார்ந்திருந்தது. செவ்விரும்புத்துகள்கள் வேகங்கொண்டு பறக்கும், கந்தகப் புகை மூச்சுக்குழல்களில் முட்டும், சிவப்புப் புழுதி மண்ணில் குருதி கொப்பளிக்கும், சமர்க்களமொன்றில் இடுப்பில் இறுக்கிக் கட்டிய சாரத்தோடு அறுந்த செருப்பை தோளிடுக்கில் ஆயுதத்துக்கு மிண்டு கொடுத்தபடி வேகங்கொண்டு நின்றவனின் தூரக்கனவான "தமிழீழம்" என்கின்ற சொல், இன்றைக்கு எண்ணற்ற தொலைவில், திராவிட சக்தியை அரசியல் சதியாக்கி கபடத் தாயம் போடும், கருணாநிதியின் "டெசோ"விடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பது எத்தனை பெரிய முரண்நகை?

"தமிழ்த் தேசியம்" என்கின்ற சொல்லாடல் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே "தமிழீழம்" தமிழரின் தீராக்கனவு. குட்டிமணியின் கண்மணிகளை வெலிக்கடையில் வெளியெடுத்து வைத்தது, சிவகுமாரனை கோப்பாயில் மரவள்ளித் தரவைகளினூடாக மூர்க்கங் கொண்டு ஓடவைத்தது, உமாமகேசுவரன் தான் இனிமேல் தமிழ்த் தலைவன் என்ற அறிவிப்பைச் செய்ய வைத்தது, இன்றைய ஜனநாயக நீரோடும் தேவானந்தாவை, சுரேஸை பொள்ளாச்சியிலும், வேலூரிலும் காடுகளில் பயிற்சியெடுக்க வைத்தது. பத்மநாபா என்றொரு தலைவனைப் பிரிந்து போகச் செய்தது, பாலகுமாரனை பக்கத்தில் கொண்டு சேர்த்தது, பிரபாகரனுக்கு உலகத் தமிழ்த் தலைவன் என்கின்ற அங்கீகாரத்தை கொடுத்தது வரை, எல்லாமே அந்த மந்திரச் சொல் செய்த மாயங்களே! பெயர் சொல்லத் தெரிந்த மேற்படி சிலரின் பின்னால், தத்தமது கொள்கை வகுப்புக்களுக்கேற்பவும், சுயவிருப்பங்களுக்கேற்பவும் நள்ளிரவுகளில் வீட்டைவிட்டு "ஓடி வந்த" எல்லா இளைஞர்களிடமும் சுலபமாக கொடுக்கக்கூடியதாக இருந்த தாகம், தமிழீழம் பற்றியது மட்டுமே!

வெளிச்செல்ல முடியாத துர்நாற்ற காரணங்களுக்காக, அகாலத்தில் பிரிந்துபோன கட்சிகளும், இயக்கங்களும் இன்றும் தம் பெயரோடு "E" இனைச் சுமப்பது, வெறுமனே பூசிமெழுகிவிட முடியாத எம் தீராக் கனவுகளின் ஆங்கில அடையாளம்.

வெள்ளைக்கு மாறிவிட்ட முன்னாள் புரட்சியாளர்களின் முன்னிருபது வருடங்கள் உண்மை மட்டும் பேசும் வல்லமையுடையனவாயின், மேலே பெயர் குறிப்பிட்டவர்களின் சுயசரிதைப் பக்கங்களின் முதல் அத்தியாயங்களைத் தனித்தனியே எழுதும் தேவை எதுவுமே இருக்காது!!

தத்தமது வசதிகளுக்காக இயக்கம் என்கின்ற நீண்ட நதியிலிருந்து கட்சிக் குளங்களுக்குள் குதித்தவர்களின் எதிர்ப்பாற்றல் திறன், வேகமாக மட்டுப்படுத்தப்பட்டு குறுகிப்போனது. தனக்கு மூக்குப் போனாலும், எதிரிக்கு சகுனப்பிழை ஆனால் போதுமென்ற பொன் விளையும் (?) மனங்கொண்டவர்களின் ஆயுதங்களையும், ஆக்ரோசத்தையும் ஆளுநிறைமும், துரோகங்களையும், துண்டான நாக்குகளையும் வீழ்ந்த மண்ணும் ஆழப் புதைத்துக்கொண்டன. "பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டுக் கட்டியிருந்த கோவணத்தையும் களவு கொடுத்தவர்கள்" என்ற நீளவசனத்தைப் பெரிதுான் விரும்பிகளிடம் மட்டுமே விதைத்து விழல் வேளாண்மைக்கு முயன்றவர்கள், இணக்க அரசியல் என்கின்ற வெள்ளைப் பச்சையரிசி தடையறக் கிடைக்கும் லொறிகளுக்காக மட்டும் அகலவாயல் வைத்து இராணுவக் காவலும் வாங்கியிருந்தனர். மேற்சொன்ன "பட்டுவேட்டி எதிர் கட்டிய கோவணம்" வசனம் கூட அவர்கள் சுயமாகத் தேடியதில்லை என்பது, காலம் தாழ்த்தியோ, சற்று முன்னரோ வெளிவந்த வேடிக்கைகளில் ஒன்று.

1982.04.14 ஆம் திகதியிட்ட முன்னுரையோடு, வைரமுத்துவின் "இன்னொரு தேசிய கீதம்" என்கின்ற வெளியீட்டின் 107 ஆம் பக்கத்திலிருந்து உருவி எடுக்கப்பட்டிருந்ததும் இந்தியாவின் சுதந்திர தினத்தை எள்ளி நகையாடியிருந்ததுமான அந்தக் குறுங் கவிதை இவ்வளவும்தான்.

*"அவன் ஒரு*
*பட்டுவேட்டி பற்றிய*
*கனவில் இருந்த போது*
*கட்டியிருந்த கோவணம்*
*களவாடப்பட்டது"*

எழுதப்பட்ட காலமும், தமிழகத்தின் பாண்டிபஜாரின் வீதிகளில் குறுந்தூர குறிபார்த்துச் சுடும் போட்டிகளில் ஈடுபட்டிருந்த முன்னாள் விடுதலை மேதாவிகளின் காலமும் ஒத்துப்போவதால், "சுட்டது" தமிழக இளைஞர்களை மட்டுமல்லாது, தமிழகத்து வரிகளையும் தான் என ஏகத்துணியலாம்.

"இதிலயும் இரவலா தோழரே!" சிபாரிசுக் கடிதம் கொடுத்த ஒற்றைக் காரணத்துக்காய் பிரபாகரனையும் அவன் பின்னால் திரண்ட ஒட்டுமொத்த தமிழினத்தையும் இளக்காரமாய் ஏளனம் வழியப் பார்க்கும் உங்களில் எவரேனும் இதைப் படிக்க நேர்ந்தால், நிலைக் கண்ணாடி முன்பாக நின்று இப்படிச் சொல்லிப் பாருங்களேன் "மறுபடியும் நான் தான் 'அவுட்'டா?"

'பற்று' என்ற தூய தமிழ்ச் சொல்லை, நாசிக்கமலத்திலிருந்து ஆழ்ந்து அனுபவித்து உச்சரித்து, அதன் அழகையுணர்ந்து பின்பற்றுபவர்கள் எல்லோரது சமயலறைகளிலும் "உப்புக் கிண்ணம்" அடிக்கடி நிரவலேற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றது என்பதை, ஆழ்ந்த அனுதாபங்களுடன் அறியத்தரக் கடமைப்பட்டுள்ளோம்.

"தமிழீழம்" என்கின்ற சொல்லைப் பிரசவித்த பெருமை வல்வெட்டித்துறைக்கல்லாது வட்டுக்கோட்டைக்கே சேரும்! ஈழத்தந்தை செல்வா போட்ட விதையை மரமாக்கிப் பார்க்க எண்ணிய ஆசையை முள்ளிவாய்க்கால் வரை நீடித்த பெருமையை, வல்வையின் நெருப்பைச் சுமந்த கருப்பை தாங்கும். சொல்லும் போது உடலின் உரோமங்கள் விறைத்து நிற்கின்றனவாயும், என் தேசம் என்கின்ற சிலிர்ப்பு இறுமாந்து எழுகின்றதாயும் பிரயோகத்திலிருந்த "அந்தக் கனவை" புதைக்க முயற்சித்த குழியை வெட்டியவர்களைக் கொண்டே நிரப்ப எத்தனித்த பேரினத்தின் பொறிக்குள் ஒட்டுமொத்த இனமும் வசமாகச் சிக்கினோம் என்பதே உண்மை.

இன்றைய நாள்களில் 'டெசோ' வர்ணஜாலத்தைத் தோற்றுப்போன தனது திராவிடக் கிண்ணங்களுக்குள் கரைத்துக் கொண்டிருக்கும் கருணாநிதியையும், மாநாட்டில் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றக்கூடாதென்ற சொக்கத் தங்கம் சோனியாவின் அன்புக்கட்டளை(!)யைச் சுமந்து வந்த சிவகங்கைத் தமிழன் ப.சிதம்பரத்தையும், மீண்டுமொருமுறை ராஜ்டிரபதி பவன் பார்க்கும் ஆசையில், "சோனியாவை பிரதமராக்கவும் தயாராக விருந்தேன்" என்று டெல்லி வீதிகளில் மடிப்பிச்சை கேட்குமளவுக்கு தன் அறிவியல் விம்பத்தை ஒரே நொடியில் போட்டுடைத்த அணு விஞ்ஞானி அப்துல்கலாமையும், "பிரபாகரனைக் கொன்ற பின்னரே ராஜீவ் காந்தியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்துவேன்" என்ற சபதத்தை, அவசரக் குடுக்கைத்தனமாக நிறைவேற்றிய நிழலில் வாழும் சுப்பிரமணிய சுவாமியையும் "மண்ணெத்தித் தூற்றும் அளவுக்கு" எம் கைகளும், பொல்லாத நாவுகளும் சுத்தமானவை தானா?

இவர்கள் பாவரினதும் மெய்நிறம் எதுவென்று கண்டுபிடிக்க மட்டுமே தமிழனின் தற்காலிக வீழ்ச்சி எமக்கு உதவியிருக்கின்றது. மெல்லக் கண்மூடி, நெற்றிப் பொட்டில் சிந்தனை கூட்டிச் சொல்லுங்கள் எம்மவர்களே, கருணாநிதிமட்டுமா தமிழீழத்தை மறுதலித்த மனித மிருகம்?

"வடக்கு கிழக்கு தமிழரின் தனித்த தாயகம்" என்கின்ற சுலோகத்தை, கட்சி அலுவலகத்துச் சுவரில் வர்ணம்பூசி மறைத்துவிட்டவர்களை ஏன் மறந்தீர்கள்?

'ஜெனிவா', 'ஒஸ்லோ' நகரங்களில் கோட், சூட் கம்பீரத்தில் புலம்பெயர் தமிழர்களின் முன்னால் மேடையேறி "பிரபாகரன் மட்டுமே ஒரே தீர்வு" என்று தன்னளவில் புளுகிவிட்டு, பிரதியமைச்சரானவனை எப்படி மன்னித்தீர்கள்? மாகாண முதலமைச்சராக்கி ஏன் மணியடித்தீர்கள்?

பனியிலும், குளிரிலும் கழுத்து மூடிய கம்பளிகளோடு எம்மவர்கள் வியர்வை வெளித் தெரியாமல் சிறுகச் சேமித்த அந்நிய நாட்டுப் பணத்தை, ஆயுதமாக்கி அனுப்புவதாகக் கூறிவிட்டு, "ஆனை வருமுன்னரே மணியோசையை அனுப்பி" ஆப்பு வைத்த தொப்பித் தலையர்களின் கண்ணீருக்கு ஏன் அனுதாபிக்கின்றீர்கள்?

வாக்கு வாங்கும் வரை, "வீழ்ந்துவிடாத வீரம், மண்டியிடாத மானம்" என்று வீர வசனம் பேசிவைத்துவிட்டு, அலரிமாளிகையின் தேநீர்க் கோப்பைகளை கையில் வாங்கியவுடன் "தனிநாடு கேட்பவனை நாங்களே தோற்கடிப்போம்" என்பவனை எல்லாம் எப்படி அனுசரிக்கின்றீர்கள்?

அவரவர் எடுத்து கைப்பக்குவம் காட்டுவதற்கு, தமிழீழம் என்ன தாளித்த சரக்கா?, "இலங்கைக்குள் இன்னொரு நாட்டை அனுமதிக்கப் போவதில்லை" என்று யாருமில்லாத கடையில் 'ரீ' போட்டு வைத்திருக்கும் "பற்றீசியா புட்டினிஸ்"சுக்கு, 'கணியன் பூங்குன்றனாரை' பார்க்கவோ, கேட்கவோ சந்தர்ப்பமில்லைத்தான். ஆயினும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று உலகப் பெருவெளிக்கே சமத்துவம் கேட்ட பழந்தமிழ்ப் புலவன் பச்சைப் பேயனா? நெஞ்சுக்கினிய துரோகிகளே! தூங்குவது போல் நடிக்கும் வரலாறு, 'புரண்டு' படுப்பதில்லை! கடன் புத்தகத்தில் உங்களின் பக்கம் இடமின்றி வழிகின்றது-நிச்சயம் திருப்புவோம்!

வெற்றி பெற்ற பின்னர் மட்டுமே, எம் அனுபவ அவலங்களைப் பாடமாக வேணும் பதிவேற்றிக்கொள்ள உலகம் தயாராகவிருக்கின்றது. "போராடியவன் தோற்றுப் போனால் தீவிரவாதி" என்ற சினிமா வசனங்களை 'ஸ்லிங்கம்' போல் துப்பிவிடுங்கள். லட்சோப லட்சம் உயிர்த்தியாகங்கள் எந்தக்கணத்திலும் தோற்கப் போவதில்லை என்ற நம்பிக்கை ஒன்றே போதும் எம் விடுதலைத் திரியின் விளக்கினை ஏற்ற, பல போராளிகளின் நெஞ்சிலும், சில கோமாளிகளின் மேலாடைகளிலும் இன்னும் உயிர்ப்புடன் வாழும் சேகுவேரா கூட வெற்றியோடு சாக வில்லை! உயிர்துறந்த பின்னும் அவன் கண்கள் மூடியிருக்க வில்லை!

# வறண்டது இரணைமடுக் குளம்!

''நான் என்னுடைய சொந்தப் பங்குகளைக்கொண்டு நீர்வரி, ஏனைய காசு என்பவற்றை முறையாகச் செலுத்தி, எந்தவிதமான மேலதிக காணிகளையும் செய்கைகளுக்கு உட்படுத்தாமல், குறிப்பிட்ட அளவு நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ளேன். இதில் சுமார் ஒன்றரை ஏக்கர் நெற்செய்கை நீர்ப்பாசனம் சீரின்மையால் அழிவடைந்த நிலையில் கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் எஞ்சியுள்ள மூன்று ஏக்கருக்கும் சீரான நீர்விநியோகம் இன்றி அதிலும் மூன்றில் ஒரு பகுதியைக் கைவிட வேண்டியதாயிற்று. எஞ்சியதும் சீரான நீர்ப்பாசனம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது.''



பா.துவாரகன்

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற் செய்கையில் கணிசமானவை, சீரான நீர் விநியோகம் இன்றி அழிவடைந்துள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வங்கிக் கடன்களைச் செலுத்த முடியாமலும், கடன்களில் இருந்து மீள முடியாமலும் அவலங்களைச் சந்தித்துள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளை நேரில் சந்தித்தபோது அவர்கள் தமது துயரக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அதாவது தங்களுடைய வயதுக்கு எந்தக் காலத்திலும் இவ்வாறு இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொண்ட சிறுபோகமோ அல்லது காலபோகமோ தண்ணீர் இல்லாமல் எரிந்து போகவில்லை. இந்த இரண்டு வருடமாகத்தான் இவ்வாறான அழிவுகள் நடைபெறுகின்றன என்கின்றனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் காலபோகத்திலும், சிறுபோகத்திலும் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையானது மாவட்டத்தின் அரிசி உற்பத்தியை ஓரளவு ஈடுசெய்யும் வகையில் உள்ளது. இரணைமடுக்குளத்தை அதன் கீழ் உள்ள விவசாயிகள் தங்கள் ஒவ்வொருவரினதும் தாயாகவே கருதி வருகின்றனர். அதுபோல அவளும் கைவிட்டதாக வரலாறுகள் இல்லை. இருந்தும் இந்த ஆண்டு சிறுபோகச் செய்கை ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள முரசுமோட்டை, ஊரியான், பன்னங்கண்டி, சின்னக்காடு, மகிழங்காடு, மூன்றாம் வாய்க்கால் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கைகளில் சுமார் முப்பது வீதமானவை நீர் விநியோகமின்றி அழிவடைந்துள்ளன. இதனால் பெருமளவான ஏழை விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

முரசுமோட்டைப் பகுதியில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு நீர் விநியோகமின்றி பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டு அதை இடைநடுவில் கைவிட்ட செல்வம் என்ற விவசாயி, ''நான் எந்தவிதமான வேறு தொழிலும் செய்வதில்லை. வயல் செய்வதுதான் எனது தொழில். இந்த வருடம் இருந்த நகைகளையும் வங்கியில் அடைவு வைத்து கடன்களைப்பட்டு ஆறு ஏக்கர் வயல் காணியில் சிறுபோக செய்கையினை மேற்கொண்டேன். நான் எந்தவித சட்டவிரோத செய்கைகளையும் மேற்கொள்ளவில்லை. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாவரையில் செலவு செய்து, எனது உழைப்பையும் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொண்டேன். ஆனால் இன்று சீரான நீர்விநியோகம் இல்லாமல் பயிர்ச்செய்கை கருகி அழிவடைந்துள்ள நிலையில், நான் அதைக் கைவிடவேண்டிய நிலையில் உள்ளேன். இந்தச் செய்கையை நம்பித்தான் நான் கடன்களைப் பெற்றிருந்தேன். செய்கை பாதிக்கப்பட்டதால் கடன்களை மீளச் செலுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்'' என்று கூறினார்.

இதேபோல் ஊரியான் பகுதியில் விவசாயம் மேற்கொண்டுள்ள சி.சிவஞானம் என்ற விவசாயி, ''நான் என்னுடைய சொந்தப் பங்குகளைக்கொண்டு நீர்வரி, ஏனைய காசு என்பவற்றை முறையாகச் செலுத்தி, எந்தவிதமான மேலதிக காணிகளையும் செய்கைகளுக்கு உட்படுத்தாமல், குறிப்பிட்ட அளவு நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ளேன். இதில் சுமார் ஒன்றரை ஏக்கர் நெற்செய்கை நீர்ப்பாசனம் சீரின்மையால் அழிவடைந்த நிலையில் கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் எஞ்சியுள்ள மூன்று ஏக்கருக்கும் சீரான நீர்விநியோகம் இன்றி அதிலும் மூன்றில் ஒரு பகுதியைக் கைவிட வேண்டியதாயிற்று. எஞ்சியதும் சீரான நீர்ப்பாசனம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது. வங்கியில் ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடனைச் செலுத்த முடியாதநிலையில் எனது வாழ்வாதாரத்தையும் பிள்ளைகளின் கல்விச்செலவை ஈடுசெய்தல் போன்ற அனைத்துக்கும் இந்த நெற்செய்கையை நம்பித்தான் இருந்தேன். அது இன்று கைவிரித்துவிட்டது'' என்றார்.

இதைவிடக் கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வரும் மூத்த விவசாயிகள் பலர் தமது அனுபவங்களை பின்வருமாறு கூறினர்.

''நாங்கள் பருவம் தெரிந்த காலத்திலிருந்து கிட்டத்தட்ட ஐம்பது, அறுபது வருடமாக நெல்தான் செய்து வருகின்றோம். ஆனால் தண்ணீர் இல்லாமல் எரிந்ததாக வரலாறுகள் இல்லை.''

முரசுமோட்டைப் பகுதியில் உள்ள விவசாயிகள் சிறுபோக செய்கைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை ஒரு பகுதியினர் வெலிக்கண்டல் ஆற்றில்வரும் கழிவு நீரைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நூறு, இருநூறு ஏக்கர் நெற்செய்கைகளை மேற்கொள்வார்கள். இப்போது அதுகூட இல்லை.

வெலிக்கண்டல் ஆறானது இரணைமடுக் குளத்தில் இருந்தும், அதன் கீழ் உள்ள வயல்களில் இருந்தும் வெளியேறும் கழிவு நீரையும் நிலக்கீழ் ஊற்று நீரையும் கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ஆறாகும். இந்த ஆற்றினை மறித்து உடுப்பாற்றுக்கண்டல் விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவது வழக்கம். இது யாருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. இதைக் கூடுதலாக முரசுமோட்டை, உடுப்பாற்றுக்கண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் செய்துவந்துள்ளனர்.

இந்த ஆண்டு அந்த நீரை குறிப்பிட்ட பிரதேச விவசாயிகள் பயன்படுத்த முடியாது என்றும், அதனைக் கண்டாவளை விவசாயிகளே பயன்படுத்த முடியும் என்றும் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் சி.விகிர்தன் அனுமதியளித்து, அதற்கான எழுத்துமூல அறிக்கையை வழங்கியுள்ளார். இந்த நிலையில், கண்டாவளைப் பகுதி விவசாயிகளால் குறித்த ஆறு முன்னால் மறிக்கப்பட்டுள்ளதால், பின்னால் உள்ள உடுப்பாற்றுக்கண்டல், முரசுமோட்டை, ஊரியான் போன்ற இடங்களில் கால்நடைகள், விலங்குகள் என்பவற்றுக்குக்கூட நீரில்லாத நிலை காணப்படுகின்றது என்று விவசாயிகள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பாகவும், பயிர்ச் செய்கை பாதிக்கப்படுவது தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள நீர்ப்பாசனப் பொறியியலாளர் சி.விகிர்தன், கிளிநொச்சி பிராந்தியப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன் ஆகியோர் இரணைமடுக்குளத்தின் கீழ் இந்த ஆண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி மாவட்ட அரச அதிபர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலேயே பயிர்ச் செய்கையும், நீர் விநியோகங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது, அப்போது இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 29 அடி 8 அங்குலமாக அதாவது ஐம்பத்தி ஒன்பதாயிரத்தி ஐநூறு கனஅடி நீர் காணப்பட்டது. இதில் ஒன்பதாயிரத்தி ஐநூறு கனஅடி நீரைக் குளத்தின் தேவைக்கும், உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கும், ஆவியாதல் போன்றவற்றுக்கும் வைத்துக்கொண்டு, எஞ்சிய ஐம்பதாயிரம் கனஅடி நீரில் ஏழாயிரத்து தொள்ளாயிரத்தி அறுபத்தி நான்கு கன அடி நீரை எண்ணாயிரம் ஏக்கர் செய்கைக்கு பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டு, அதன்படி எமது முதலாவது நீர்விநியோகத்தை ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி மேற்கொண்டிருந்தோம்.

இந்த நிலையில் இன்றுவரை குறித்த அளவு நீரைவிட மேலதிக நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது. காரணம் திட்டக் குழுக்களினதும், சில விவசாயிகளினதும் பொறுப்பற்ற தன்மையால் சட்டவிரோதமான விதைப்புக்கள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது காணிகள் அளவீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை மேற்கொண்டுள்ள அளவீடுகளின் அடிப்படையில் இரண்டாயிரம் ஏக்கருக்கும் மேல் மேலதிக விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மேலதிக விதைப்புக்களைக் கட்டுப்படுத்த முடியாமைக்கான காரணியாக, வயல் காணிகளின் அளவுகள் சரியாகத் தெரியாமை அமைந்தது. அதாவது விவசாயிகள் தமக்கு வழங்கப்பட்ட காணிகளின் அருகில் பயன்படுத்தப்படாமல் இருந்த வாய்க்கால்கள், வீதிகள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றை அடாத்தாகப் பிடித்துப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதைவிட வாய்க்கால் ஒதுக்கீட்டுக் காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு பயிர்ச் செய்கைகளுக்கு உட்படுத்தியமை, இரவு வேளைகளில் அடாத்தாகப் பிரதான வாய்க்கால்களை மறித்து சில விவசாயிகள் நீர் பெறுகின்றமை மற்றும் மேலதிக நீர் வீண்விரயமாகுதல், சரியான முறையில் பிரதான மற்றும் ஏனைய வாய்க்கால்கள் பராமரிக்கப்படாமை, கால அட்டவணைகளுக்கு அமைவாகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமை, கழிவு வாய்க்கால்களுக்கு நீர் செல்வதைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திட்டக் குழுக்கள் அக்கறை இன்றி செயற்பட்டமை, போதிய நீர் விநியோகத்தர்கள் அலுவலகத்தில் இல்லாதநிலை, எதிர்பார்த்த காலங்களில் மழைவீழ்ச்சி கிடைக்காமை போன்ற காரணிகள் சீரான நீர்விநியோகம் மேற்கொள்ள முடியாமைக்கான காரணங்களாக அமைந்துள்ளன. இந்த நடவடிக்கைகள் சரியாகப் பேணப்பட்டிருந்தால் பாதிப்புக்களை ஓரளவு தவிர்த்திருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பாதிப்புக்களைச் சந்தித்த விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது வங்கிக் கடன்களைச் செலுத்துவதற்கு கால எல்லைகள் நீடிக்கப்படுமா? என்ற கேள்வியே விவசாயிகளிடம் தற்போது எழுந்துள்ளது.

கடந்த வாரம் மேற்குறித்த பகுதிகளைப் பார்வையிட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் சட்டவிரோத செய்கைகளை மேற்கொண்ட ஒவ்வொரு விவசாயியிடம் இருந்தும் ஏக்கர் ஒன்றுக்கு பதினையாயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலதிக சட்டவிரோத விதைப்புக்களை மேற்கொண்டவர்களின் பயிர் செய்யும் உரிமம் நிறுத்தப்படும் என்றும் கூறினர். இது எவ்வளவு தூரத்துக்கு சாத்தியமாகும் என்பது எல்லோரினதும் கேள்வியாகும்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட எண்ணாயிரம் ஏக்கர் செய்கை நிலப்பரப்பை ஆறாயிரமாகத் தீர்மானித்திருந்தால் இவ்வாறான பாதிப்புக்கள் நடைபெற்று இருக்க மாட்டாது. 2011, 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாறுதான் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனால்தான் அந்தக் காலப் பகுதிகளில் அழிவுகள் ஏற்படவில்லை என அனுபவமுள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

*

# நேர்த்திக் கடன் மறந்த பக்தனுக்கு தவறை எடுத்தியம்பிய கந்தவனம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



கர்ணன்

கந்தவனக் கோயிலினது சமூகத் தொடர்புகள் பற்றி நோக்கும் போது, இது வடமராட்சிப் பகுதியின் பாரம்பரிய வழிபாட்டு மையமாக விளங்கி நிற்கின்றது. இதற்குச் சான்றான வடமராட்சிப் பிரதேசத்தில் வழங்கி வரும் பழமொழிகளில் ஒன்றான ''ஆத்தை பிச்சையெடுக்க பிள்ளை கந்தவனக் கடவையில் அமுது கொடுக்குதாம்'' எனும் பழமொழி விளங்குகிறது ஏனெனில் பழமொழி என்பது எளிதில் மக்கள் புழக்கத்தில் வருவதன்று. அது பல காலங்கள் கடந்து நிலைத்ததாலேயே நிலைபெறும் மொழியாகும்.

இலங்கைத் தமிழர் பாரம்பரியத்தில் ''கந்தவனம்'' எனும் பெயர் சிறப்புடைய ஒன்றாகும். இது இந்த தலத்தின் சிறப்புப் பெயர் ஆகும். முற்காலத்தில் நேர்த்தியின் பொருட்டாய் வைக்கப்பட்டு. அது வியாபகம் அடைந்து இலங்கைத் தமிழ் பண்பாட்டில் ஓர் இடத்தைப் பெற்று சிறப்புப் பெயராக விளங்குவதனை நாம் அறிய முடிகின்றது.

இங்கே நடைபெறும் தேர்த்திருவிழாவிலும், தீர்த்தத் திருவிழாவிலும், சூரன்போர்த்திருவிழாவிலும் பல்வேறு இடங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வது சிறப்பான விடயமாகும்.

கோயிலின் மகிமைகள் பற்றி நோக்கும்போது, குழந்தையில்லாதவர்கள் இங்கே தவமிருந்து காஞ்சிமாங்கனி பெற்று குழந்தைப் பேறடைதல் இன்று வரை நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்துச் செல்லப்பா சுவாமிகள் ''ஓடுங்கடா ஓடுங்கடா கந்தவனத்தில் தான் நல்ல சரக்கிருக்குது'' என்று தமது மகாவாக்கியத்தை உதிர்த்து தனது சீடர்களுக்கு வழிகாட்டியுள்ளார். அதேபோல் சிவயோக சுவாமிகள் கந்தவனத்திற்கு யாத்திரை பல அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளார். யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களில் மிகவும் பிரபலமான பாடலாகிய 'ஆடுமயிலே' எனும் பாடல் கந்தவனத்தில் மயில் ஆடும் போது சுவாமிகளால் பாடப்பெற்றது.

சுவாமிகள் கந்தவனத்திற்கு வரும் போதெல்லாம் எத்தனையோ அடியவர்களுக்கெல்லாம் பெரும் பிணி நீக்கியுள்ளார்கள். அவ்வாறு ஒருமுறை கோயிலுக்கு சுவாமிகள் வந்து கோயில் ஆதீனகர்த்தர் செல்லையாபிள்ளையின் பாரியார் இராசமுத்து அம்மையாருக்கு நெடுங்காலமாய் இருந்து வந்த வயிற்று வலியைத் தாம் வாங்கி துன்புற்று சிறிது நேரம் களித்து தெளிந்து அற்புதம் நிகழ்த்தியுள்ளார். அன்றிலிருந்து இராசமுத்து அம்மையார் காலமாகும் வரை அந்தக் கொடிய வயிற்றுவலி ஒரு போதும் அவருக்கு வந்ததில்லை.

சுவாமிகள் செல்லையாபிள்ளையை முதன் முதல் தொண்டமனாறு செல்வச்சந்நிதியில் வைத்து சந்தித்துள்ளார். அங்கு ஒரு நாள் செல்லையாபிள்ளையை அழைத்து, கடலை வாங்கிக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். அதன் பின் செல்லையா பிள்ளைக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு யோகர் சுவாமிகள் தனது அனுக்கிரகம் கிடைக்கும் வண்ணம் ''யோக'' எனும் முத்திரை பொறித்த ''யோகீந்திரன்'', ''யோகாம்பிகை'', ''சிவயோகநாயகி'' எனும் பெயர்களைத் தாமே சூட்டியுள்ளார்.

இவர்களில் யோகீந்திரன் ஒருவரே செல்லையா பிள்ளையின் ஒரே ஒரு ஆண்பிள்ளை. செல்லையாபிள்ளை ஆண்பிள்ளை வேண்டி ஆறுமுகநயினாரை வாா்ப்பித்த அடுத்த ஆண்டு யோகீந்திரன் பிறந்தமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய அற்புதங்களில் ஒன்றாகும்.

ஒரு நாள் செல்லையாபிள்ளை கந்தவனத்தில் ''திருத்தணிகைப் புராணம்'' படித்துக் கொண்டிருந்த போது யோகர்சுவாமிகள் திடீரெனவந்து அமர்ந்து அதற்குப் ''பயன்'' கூறிய இனிய சம்பவமும் உண்டு.

''சுவாமிகள் தனது சீடர்களை வைத்து செல்லையா பிள்ளையின் வீட்டில் தோட்டமும் செய்வித்துள்ளார்.

ஆனைக்குட்டிச் சித்தர்கள் எனப்படும் பெரியானைக் குட்டி, சித்தானைக்குட்டிசித்தர்கள் கந்தவனத்தில் வந்து தங்கியிருப்பது வழக்கம். ஒருநாள் பெரியானைக்குட்டிச் சித்தர் தமது கையை யாராவது அசைக்கும்படி பணித்துள்ளார். ஆனால் எவர் முயன்றும் அவருடைய கையை அசைக்கமுடியவில்லை. இவ்வாறு ஆனைக்குட்டிச் சித்தர்கள் தமது சித்துக்களை நிகழ்த்தியுள்ளார்கள்.

சுப்பிரமணிய பாரதியாரின் ஞானகுருவாகிய வியாபாரிமூலைச் சித்தர் ''அருளம்பல சுவாமிகள்'' கந்தவனம் வந்து வன்னிமரத்தின் கீழ் நிஷ்டை இருப்பது வழக்கம். ஒரு நாள் அவ்வாறு நிஷ்டை இருந்து பின்னர் கோயிலிற்கு அருகிலுள்ள கந்தவன சமுத்திரத்தில் தெப்பமாக மிதந்துள்ளார். அந்த நேரம் அந்த வீதிவழியே வந்த ஆங்கிலேயத் தளபதி ஒருவன் அருளம்பல சுவாமியை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுள்ளான். என்ன அற்புதம் அவன் சுடும் ஒவ்வொரு துப்பாக்கி ரவையும் சுவாமிகளைத் தாக்காது செயலிழந்து கடலில் விழத் தொடங்கியது. ஆங்கிலேயத் தளபதி வெட்கித்தலைகுனிந்து வந்த வழியே சென்ற அற்புதமும் நிகழ்ந்துள்ளது.

சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் கந்தவனத்தில் சமயகுரவர்களை நிறுவியும் ஆலயத்துக்கு அருகில் ஆசிரமம் அமைத்துதிருந்து சரீரத் தொண்டுகள் பல புரிந்து தவ வாழ்க்கை மேற்கொண்டு முத்தியடைந்தார். அதே போல நயினாதீவுச்சுவாமிகளும் கந்தவனத்தில் சில காலம் தங்கியிருந்து தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார்.

> "யாழ்ப்பாணத்துச் செல்லப்பா சுவாமிகள் ''ஓடுங்கடா ஓடுங்கடா கந்தவனத்தில் தான் நல்ல சரக்கிருக்குது'' என்று தமது மகாவாக்கியத்தை உதிர்த்து தனது சீடர்களுக்கு வழிகாட்டியுள்ளார்.

திருமுருக கிருபானந்த வாரியார் கந்தவனம் வந்து கோயிலின் புறச் சூழலையும் தெய்வீகத்தையும் உணர்ந்து தமக்கு ''வயலூர்'' ஞாபகம் வருவதாகவும் தெரிவித்து ஆறு முகநயினாரின் திருப்பெருவடிவத்தினையும் கண்டு வியந்து ''இவர் போல் இந்தியாவிற் கூட எவருமில்லை'' என்று கூறிக் கண்ணீர் மல்கி வழிபட்டு ஒரு திருப்பாவும் பாடி மகிழ்ந்துள்ளார்.

புலவர்களுக்கெல்லாம் தலைமையானவரும் ஆறுமுக நாவலரின் உற்ற நண்பரும் அவராலேயே ''புலவர்'' எனும் பட்டமும் பெற்ற உடுப்பிட்டியூர் சிவசம்புப்புலவரின் குலதெய்வமே கந்தவன நாயகத்தான். நாம் கந்தவனக் கல்யாண வேலனிற்கு நேர்ந்த நேர்த்தியை மறந்தமையால் இரு கண்களும் பார்வை இழக்கப் பெற்று பின்னர் கந்தவனம் வந்து தம் பிழையுணர்ந்து நறுநீர்க்கேணியில் நீராடி நான்மணி மாலையும், நயனரோக முறையீடும், கீர்த்தனைகளும் பாடி மீண்டும் தமது கண்பார்வையைப் பெற்ற அற்புதம் நிகழ்ந்தது. இவரால் கந்தவனக் கலம்பகம் கந்தவனநாயகரூஞ்சல், கந்தவனநாதர் பதிகம், கந்தவனக் கலிவெண்பா, கந்தவனச் சதகம் முதலியவையும் கந்தவனத்தின் மீது தமிழ் மணம் கமழப்பாடப் பெற்றுள்ளன.

இந்தப் புலவர் பெருமான் தமது ஆவிபிரியும் போது கூட ஒரு வெண்பா பாடியே உயிர் துறந்தார். அந்த வெண்பா தமக்குக் கண்ணொளி கொடுத்த கந்தவன நாதர் மேல் பாடப்பெற்றது.

அது

*''கந்தவனங் கொண்ட கடம்பாவெமைக் கொடிய*

*பந்தவனத் தேற்றியிடர் பண்ணாதே நந்தவனம்*

*முற்றுமுன்றன் பொன்னடியில் மொய்த்திருக் கவேயருள்வாய்*


*மற்றெதையும் வேண்டே மறித்து''*

என்பதாகும். அவ்வாறே நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு குன்மநோய் (வயிற்றுவலி) ஏற்பட்டு, அந்த நோய் நீங்கும் பொருட்டு கந்தவனம் வந்து தங்கியிருந்து ஆறுமுக நயினாரை அல்லும் பகலும் வழிபட்டு நான்மணிமாலையும் பதிகமும், திருப்பள்ளி எழுச்சியும்பாடி அந்த நோய் நீங்கப் பெற்ற அற்புதமும் நிகழ்ந்தது.

அவ்வாறு கோயிற் பூசகராயிருந்த கனகசபாபதிக்குருக்கள் திருவூஞ்சலும் முருகேசபண்டிதர் கந்தவன அபயப்பதிகமும், தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசான் கா.கோ.வெங்கடராமன் கந்தவனக் கலம்பகமும் தஞ்சை சிலேடைக்கவி க.கணபதிப்பிள்ளை ஆசிரியர் கந்தவனநாதர் பிள்ளைத் தமிழும், கீர்த்தனைகளும் பாடியுள்ளார்கள்.

அருணகிரிநாதர் கதிர்காமத்திற்கு கிளியாகவந்து திருப்புகழ் பாடியபோது கந்தவனத்திற்கும் திருப்புகழ் பாடியமை குறிப்பிடத்தக்கது. இந்த திருப்புகழில் ''கந்தசுவாமி கானகம்'' எனும் தலமுத்திரையையும் குறிப்பிடுகின்றார்.

(முற்றும்)



நல்லூரானின் 7 ஆம் நாள் வீதி உலாக் காட்சி


## கிருபா லேணர்ஸ்



(அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
இப்பொழுது பருத்தித்துறை 1 ஆம் கட்டைச் சந்தியில்
T.P : 021 4923201,
071 4546958, 077 7225292
தலைமைக்காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353
(சி/1297)(6-7-8)


## நல்லைக்குமரனைசித்தத்தில்வைத்திட சித்திநலம்பெறலாம்



நல்லைக் குமரனை சித்தத்தில் வைத்திட
சித்தி நலம் பெறலாம்
நால் வேதமும் போற்றும் முத்துக்குமரனைத் தொழ
முத்தி நலம் பெறலாம்
வள்ளிக் குறமாதின் வள்ளலை உள்ளத்தில் வைத்திட
சாந்தி நிலை பெறலாம்
வேலவன் பாலமுருகனை வேண்டிட தீராத
வினை தீர வரம்பெறலாம்

க.லோகேஸ்வரன், தொல்புரத்தூர்.

## நல் அடியார்களுக்கு என்றும் அருள்தருவானடி



நல்லைக் கந்தன் புகழ் பாடுங்கடி
நாளும் அவன் திருக்கோலம் காணுங்கடி
தொல்லைகள் யாவும் தீர்பானடி
தோகைமயில் மீது வருவானடி
வல்லமை பெற்றவன் நம் கந்தனடி
வலியாரை என்றும் அழிப்பானடி
எல்லைகள் அற்ற புகழ் கொண்டவனடி
ஏற்றம் மிக்க செல்வக் கந்தனடி
நல் அடியார்களுக்கு என்றும் அருள் தருவானடி
நாம் வணங்கும் நல்லைக் கந்தனடி



சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்
நாயன்மார்கட்டு.


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக
## மதிவதனி சிற்பாலயம்
உரிமையாளர் : சரவணபவன் ஆச்சாரி

ஆயாதி கணித தியானம் - ரூபம் - மந்திர முறைப்படி அனைத்து சிற்பப் பொருள்களும் செய்து தரப்படும்.

14, B.A. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 0374,
077 4112049, 077 4656408


## சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் – 2012 பத்தாம் திருவிழா தீர்த்தத் திருவிழா



தில்லை யம்பலத்தே நீயாடும் தீர்த்தன் தன் திருமகன்
தொலை வினை தீர்க்கும் எல்லையில்லா அருளாளன்
கல்லைக் கனியாக்கும் செங்கற்படையின் மகாதேவக் கணபதி
வல்லை வந்தளித்தான் அருள் வளர் தீர்த்த திருவாரி

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
பொன்னுத்துரை இராசம்மா குடும்பத்தினர்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

(சி/1297)(2-6-7)

# தமிழர்கள் ஓரணியில் திரண்டால் வடக்கு–கிழக்கை இணைக்கலாம்

## தேர்தல் நல்லதொரு சந்தர்ப்பம் என்கிறார் கூட்டமைப்பின் கனடா கிளைத் தலைவர்

மட்டக்களப்பு,ஓக.1

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் 95 சதவீதத் தமிழ் வாக்காளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால் அதிக ஆசனங்களைக் கூட்டமைப்பு பெற முடியும். அதன்மூலம் வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைக்கமுடியும். தமிழர் தரப்பின் கனவை நனவாக்கலாம். இணைந்திருந்த வடக்கையும் கிழக்கையும் பிரித்த மஹிந்த ராஜபக்ஷவின் மேலாதிக்க சிந்தனைக்கு அடி கொடுக்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடாக் கிளையின் தலைவர் வேலுப்பிள்ளை தங்கவேலு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வேண்டுகோளுக்கு மேல் வேண்டுகோள் விடுத்தும் அதற்குச் செவிசாய்க்காத மஹிந்த அரசு, கிழக்கு மாகாணசபையின் பதவிக்காலம் இன்னும் ஓராண்டுக்கு வலிதுடையதாக இருந்த நிலையிலும் கடந்த மாதம் 27 ஆம் திகதி சபை கலைக்கப்பட்டது. செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி தேர்தல் நடக்கவிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமை சபையில் அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ அரசு அரசியல் மற்றும் இராஜதந்திர நெருக்கடிக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இதனால் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைக் காட்ட வேண்டிய கட்டாயம் அவருக்கு எழுந்துள்ளது.

2008 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அப்போது நிலவிய போர்ச்சூழல் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தலில் போட்டியிட முடியாமல் போய்விட்டது. இது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

ஆனால், இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கியுள்ளது. இதனால் கிழக்கில் நான்கு முனைப் போட்டி நிலவுகிறது. பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன போட்டியிடுகின்றன.

சலுகைகளுக்காக அல்ல, உரிமைகளுக்காகப் போராடப் புறப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிள்ளையான், மாகாண சபைக்கு அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் தேவையில்லை என்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடிமை சாசனம் எழுதிக்கொடுத்ததை மக்கள் எளிதில் மறந்துவிடக் கூடாது.

சிங்கள அரசு, வடக்கிலும் கிழக்கிலும் நில அபகரிப்பை திட்டமிட்ட வகையில் நடத்திக்கொண்டு கிழக்கில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறும் நில அபகரிப்பு தமிழ் மக்களது தேசிய அடையாளத்தை துடைத்தழிக்கும் முயற்சியாகும்.

மாகாணசபையின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர் கையில்தான் உண்டு என்பது உண்மைதான். அமைச்சரவை ஆலோசனை மட்டும் வழங்கலாம். இருந்தும் இருக் கும் அற்பசொற்ப அதிகாரத்தை தமிழ்மக்கள் தங்கள் கையில் எடுக்க இந்தத் தேர்தல் ஒரு வழியாகும்- என்றார். (ச)

## பதுளையில் பஸ் விபத்து; 10 பயணிகள் காயம்



பதுளை,ஓக.1

பதுளையை நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ், எலதலுவ என்ற இடத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற விபத்தில் காயமடைந்தவர்கள் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுகாயத்துக்கு உட்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## இரட்டைக் கொலை; எத்தோயா கிராமத்திலும் விசாரணை

இரத்தினபுரி,ஓக.1

தாயும் மகளும் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட கஹவத்தை கொட்டகத்தென்ன வீட்டில் பெறப்பட்ட விரல் அடையாளங்களை ஆராய்ந்து வரும்குற்றப்புலனாய்வுப் பொலிஸார் பல ஆண்களை விசாரிப்பதற்காக இரத்தினபுரி எத்தோயா என்னும் கிராமத்துக்குச் சென்றுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர்களின் ஒரு நெருங்கிய உறவினருக்கும் எத்தோயாவில் வசிக்கும் அவரின் உறவினருக்கும் இடையில் தொடர்பு ஒன்றை கண்டறிவதற்குப் பொலிஸார் முயன்று வருகின்றனர். இந்த நெருங்கிய உறவினரே எத்தோயாவிலுள்ள தனது உறவினரிடம் இந்தக் கொலைகளை செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்கியதாகச் சந்தேகிக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு, பாடுமீன் விடுதியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, பிரதியமைச்சர்களான ஏ.ஆர்.எம்.ஏ.காதர், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன், நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன, கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்

### லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் கோரிக்கை

நுவரெலியா,ஓக.1

தோட்டங்களில் வேலை நாள்கள் குறைக்கப்பட்டு போதிய வருமானமின்றி அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாமல் அவதியுறும் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவி வழங்குமாறு லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர் எஸ். இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மனு ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கண்டி மற்றும் மாத்தளைப் பகுதிகளில் கடந்த பல மாதங்களாக நிலவிவரும் மோசமான வரட் சியின் காரணமாக தேயிலைச் செடிகள் கருகிப்போய் தொழிலாளர்கள் பறிப்பதற்கு தேயிலைக் கொழுந்து இல்லாது போயுள்ளது.

இதன் காரணமாக இப்பகுதித் தோட்டங்களில் மாதமொன்றுக்கு 10 நாள்கள், 12 நாள்களே வேலை வழங்கப்படுகிறது. இதன் மூலம் தொழிலாளர்கள் ஐயாயிரம் ரூபாவை மாத்திரமே மாத வருமானமாகப் பெறுகின்றனர்.

சகல அத்தியாவசிய பொருள்களின் விலைகளும் உயர்ந்து வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் மக்கள் இதனால் மேலும் கஷ்டங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

மூன்று, நான்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஒரு குடும்பத்தில் ஒருவர் வேலை செய்து கிடைக்கும் இந்தச் சிறிய வருமானம் உணவுக்கே போதாமலுள்ளது.

இந்தநிலையில் அவர்களின்ஏனைய தேவைகளுக்கு அதிலும் குறிப்பாக பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான விடயங்களுக்குச் செலவிடப் பணம் இன்றிக் கஷ்டப்படுகின்றனர்.

எனவே, இது குறித்து ஆராய்ந்து மிகவும் இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய நிவாரண வசதி அளித்து அவர்களுக்கு உதவ வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பயிற்சியின்போது மரக்கிளை முறிந்து 17 படையினர் காயம்

### சிலர் ஆபத்தான நிலையில்

தியத்தலாவ,ஓக.1

விமானப்படை, கடற்படை அதிகாரிகள் பயிற்சியொன்றில் ஈடுபட்டிருந்த வேளை மரக்கிளையொன்று முறிந்து விழுந்ததில் 17 பேர் காயமடைந்த நிலையில் தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை தியத்தலாவ விமானப்படைப் பயிற்சி முகாமில் இடம் பெற்றுள்ளது.

மரம் ஒன்றில் ஏறி குறித்த படையினர் பயிற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்த போது மரக்கிளை முறிந்து விழுந்தே இந்த விபரீதம் இடம்பெற்று இருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ச)

## யானை தாக்கி குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேசத்தின் கித்துள் காட்டுப் பகுதியில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பழுகாமம், காந்திபுரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சாமித்தம்பி கணேசமூர்த்தி (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன் பிடிப்பதற்காக தனது சக தொழிலாளியுடன் காட்டு வழியாகச் சென்றவேளை யானை துரத்தியுள்ளது. இருவரும் வெவ்வேறு திசைகளில் ஓடியதையடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கரடியனாறுப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## பரீட்சைக்குச் சென்ற மாணவி இதுவரை வீடு திரும்பவில்லை

### பெற்றோர் முறைப்பாடு

நுவரெலியா,ஓக.1

பதுளை மகளிர் மகா வித்தியாலயத்துக்கு கடந்த சனிக்கிழமை பரீட்சை எழுதச் சென்ற மாணவியொருவர் இதுவரை வீடுதிரும்பவில்லை என்று பதுளைப் பொலிஸில் அவரது பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பஹறை, வேவெஸ்ஸ, 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சந்திரபிரபா (வயது 11) என்ற தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவியே இவ் வாறு காணாமற் போயுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட் டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பரீட்சை ஒன்றுக்குத் தோற்றிவிட்டு முற்பகல் 10.30 மணிக்கு அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார். எனினும் இன்றுவரை அவர் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## நகைகளைத் திருடியவர் கைது

பொகவந்தலாவை, செல்வக்கந்தைத் தோட்டத்தில் உள்ள வீடொன்றில் ஐந்தரை லட்சம் பெறுமதியுள்ள நகைகளைத் திரு டிய நபரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். வீட்டின் உரிமையாளர்கள் மத அனுஷ்டானத்திற்காகச் சென்றதை அவதானித்த குறித்த நபர் வீட்டின் கூரையின் ஊடாக வீட்டினுள் நுழைந்து நகைகளைத் திருடியுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட நகைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ச)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** நீங்கள் தெளிவான மனநிலையோடு செயற்பட்ட போதும் எதிர்பார்த்தது ஒன்றும், நடப்பது ஒன்றுமாக இருக்கும். குடும்பத்தில், சில சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். பண நிலை அதிகம் யோசிக்க வைக்கும்.

**இடபம்:** உங்களின் யோசனையால் வேலைப்பளு குறையும். எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். உறவினர்களின் விவகாரங்கள் அதிருப்தியைத் தரலாம். சிறு பிரயாணம் ஏற்படும்.

**மிதுனம்:** உங்களின் யோசனை பிறரால் விரும்பப்படும். கடிதத் தொடர்புகள் மன ஆறுதல் அளிக்கும். திடீர் செலவுகள் ஏற்பட்டபோதும், அதற்கேற்ற வருமானங்களும் இருக்கும். பெண்களுக்கு, பழைய தோழி ஒருவரை சந்தித்து மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**கடகம்:** செல்வாக்கு அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் பண உதவியோ, பொருள் உதவியோ கிடைக்கும். அலுவலகப் பணியாளர்களுக்கு கோரிக்கைகள் நிறைவேறும். சிரமத்தோடு பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**சிங்கம்:** சாதிக்க வேண்டும் என்ற மனநிலையோடு ஒவ்வொரு காரியங்களிலும் செயற்படுவீர்கள். சிலருக்கு உதவிகள், ஒத்தாசைகள் அதிகரிக்கும். உறவினர்களின் சந்திப்புக்களால் மனமகிழ்ச்சி அதிகரிக்கும் அதே நேரத்தில் சில நிகழ்ச்சிகளால் கோபம் அதிகரிக்கும்.

**கன்னி:** நீங்கள் அடையும் ஒருசில வெற்றிகள், அடுத்து எடுத்துக்கொள்ளும் காரியங்களில் தான் நினைப்பதே சரி, தான் செய்வதே சரி என்ற மனோபாவனையில் நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். கொஞ்சம் மாற்றிக் கொள்ளுதல் நல்லது. உத்தியோகத்தில் சில எதிர்ப்புக்கள் ஏற்படலாம்.

**நாளை**

ஆடி 18 வியாழக்கிழமை 02.08.2012
திதி: பூரணை மு.ப 09.34 வரை
நட்சத்திரம்:திருவோணம் மு.இ.10.51 வரை சித்தம்
சுபநேரம்: 07.34 - 09.04 வரை
ராகு காலம்: 01.34- 03.04 வரை

**துலாம்:** உங்கள் மனதில் புத்துணர்ச்சி ஏற்படும். தேவைப்பட்ட உதவிகளும் உடனடியாகக் கிடைக்கப்பெறுவீர்கள். திட்டங்களில் சில மாற்றங்கள் செய்து கொள்வீர்கள். குடும்பத்தேவைகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள் உண்டு. அது தொடராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** தேவையற்ற மனச் சஞ்சலத்தோடு ஆரம்பித்தபோதும் மாலைக்கு மேல் மனநிறைவு ஏற்படும். ஓய்வைப் பொருள்படுத்தாது, சில பணிகளை முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். பணவரவுகள் உண்டு. புதிய சந்திப்புகளால் சில தொந்தரவு ஏற்படலாம்.

**தனுசு:** ஒவ்வொரு விடயத்தையும் தீவிரமாகச் சிந்திக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருப்பீர்கள். கவனம் தேவை. விரைவான நடவடிக்கைகள் இலக்கை எட்ட உதவும். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்ட போதும் உங்களின் முயற்சியால் தீர்வு பெறும்.

**மகரம்:** உங்களின் சிந்தனைக்கு ஏற்ப சில விவகாரங்கள் நடந்து முடியும். உங்கள் வாழ்க்கையில் முக்கியமான நாளாக அமையும். சில பொறுப்பு உங்களைத் தேடி வரும். தொழிலில் சில முயற்சிகளை அதிரடியாக மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** மறைமுகமான எதிர்ப்புகள் இருந்தபோதும் அதனையும் சாதகமாக்கிக் கொள்வீர்கள். குடும்பத்தில் சில நபர்களின் செயல்கள் விரும்பத்தகாதது என்ற போதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். தகுந்த நேரத்தில் உடன்பிறப்பின் உதவி மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும்.

**மீனம்:** சில சந்தோஷமான சம்பவங்கள் உங்கள் மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். அதே நேரத்தில், இன்றைய வேலைகளில் தேக்கம் ஏற்படாமல் முடிக்க முயற்சியுங்கள். நண்பர் ஒருவர், அவர் பணிக்காக உங்களை நாடி, நீங்களும் தயாராகி அவர் வராமல் போகலாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 6 | | | 7 | |
| 6 | 9 | | | | | 4 | 1 | |
| 5 | 4 | | | 1 | 7 | | 2 | |
| 3 | | 9 | | | 5 | | 8 | 4 |
| | | | | 2 | | | | |
| 2 | 8 | | 4 | | | 9 | | 7 |
| | 3 | | 7 | 8 | | | 9 | 5 |
| | 6 | 1 | | | | | 3 | 8 |
| | 7 | | | 9 | | | 4 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 6 | 4 | 7 | 5 | 1 | 2 | 8 |
| 7 | 8 | 5 | 2 | 1 | 6 | 9 | 4 | 3 |
| 1 | 4 | 2 | 9 | 8 | 3 | 6 | 7 | 5 |
| 6 | 2 | 1 | 7 | 9 | 8 | 3 | 5 | 4 |
| 3 | 7 | 9 | 5 | 4 | 1 | 2 | 8 | 6 |
| 8 | 5 | 4 | 3 | 6 | 2 | 7 | 9 | 1 |
| 4 | 1 | 3 | 8 | 2 | 9 | 5 | 6 | 7 |
| 2 | 6 | 7 | 1 | 5 | 4 | 8 | 3 | 9 |
| 5 | 9 | 8 | 6 | 3 | 7 | 4 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்
06.04.1951

விண்ணில்
02.07.2012

### அமரர் சீனிவாசகம் சுந்தரலிங்கம்

(V.K. அம்பாள் முதலாளி)

கடந்த 02.07.2012 திங்கட்கிழமை துன்னாலை வெல்லிக்கம் தோட்ட விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவில் தேரின் பின் அங்கப் பிரதிட்ஷை செய்து நேர்த்தியை நிறைவு செய்து கோயில் பிரதம குருக்கள் ஐயாவினால் திருநீற்று ஆசி பெற்று தேரேறி இறைவன் பாதம் சென்றடைந்த எங்கள் குடும்பத் தலைவர் **சீனிவாசகம் சுந்தரலிங்கம்** அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்றைய தினம் துன்னாலை வெல்லிக்கம் தோட்ட விநாயகர் ஆலய தெற்கு வீதியில் இடம்பெறும். கிரியைகளிலும் நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரண நிகழ்வு மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட நேர்முக அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

வெல்லிக்கம் தோட்டம்,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(சி/2007)(5-6-7)

குடும்பத்தினர்.
021 226 2718

## எங்கள் கண்கள் நீராகும்....



### சகாதேவன் நிலக்ஷன் (நிலா)

மலர்வு
08.11.1985

மறைப்பு
01.08.2007

மரணம் என்றோ உறுதி எனவே
மகிழ்ச்சியுடனே வாழ்ந்தவனே
எங்கள் மனதில் என்றும் நீங்கா
நினைவை விட்டுச் சென்றவனே
பார்க்கும் நிஜங்கள் எங்கும் உந்தன்
உருவம் நாங்கள் காண்கின்றோம்
உன் உருவம் நிஜமாய் என்றோ ஒருநாள்
கண்முன் காண வாழ்கின்றோம்
இளமை நாட்கள் இனிய நாட்கள்
எங்கள் நெஞ்சைத் தீயாக்கும்
உன் நினைவின் அலைகள் தினமும் வாழ்வில்
எங்கள் கண்ணை நீராக்கும்
வாழும்போது எங்களோடு
வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றோம்
உன் பிரிவின் துயரில் இன்றும் நாங்கள்
தினமும் நாளைக் கழிக்கின்றோம்......

டடா, அம்மா, அண்ணா

நிலா இல்லம்,
47, புகையிரத நிலய வீதி,
கொக்குவில்.



புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சுயதொழிலில் ஈடுபடுவதற்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

# நீதிபதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய அறிவுறுத்து

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு,ஓக.1

நீதிபதிகளின் பாதுகாப்பையும் கடமையின் போது அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு தொலைபேசி ஊடாக பொலிஸ் மா அதிபர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

நீதிபதிகள் பாதுகாப்பு குறித்து 2011 ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி நீதிபதிகளின் பாதுகாப்புக்கு பொலிஸ் காவல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நடவடிக்கை எடுக்குமாறு அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய தமது மாகாணத்தில் உள்ள மேல் நீதிமன்ற நீதிபதிகளை மாதம் ஒருமுறை சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்புப் பிரச்சினை குறித்து வலய பொலிஸ் அதிகாரி அல்லது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தகவல் பெற்று அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச)

# ஷிராந்திக்கு வழி விடுவதற்கு மறுத்த இளைஞருக்குப் பிணை

கொழும்பு,ஓக.1

காலி முகத்திடலில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த முதற்பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவின் வழியை மறித்ததாக கைது செய்யப்பட்ட இளைஞர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று நீதிமன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவிக்கப்பட்ட நிலையில் அவருக்கு பிணை வழங்க கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த இளைஞரை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் குறித்த இளைஞர் நீண்ட காலமாக மனநிலை பாதிப்புக்கான மருந்து எடுத்து வருவதாக அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த இளைஞரைப் பிணையில் விடுதலை செய்ய கோட்டை நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார். (ச)

# கடவுச்சீட்டு முறைப்பாடுகள்; தெரிவிக்க புதிய நடைமுறை

கொழும்பு,ஓக.1

காணாமற்போன அல்லது திருடப்பட்ட கடவுச்சீட்டுகள் குறித்து முறைப்பாட்டை தெரிவிக்கும் புதிய நடைமுறையொன்றை குடிவரவு குடியகல்வு திணைக்களம் இன்றுமுதல் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இவ்வாறான கடவுச் சீட்டொன்றை பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் நடவடிக்கையை இன்டர்போல் ஊடாக இன்றுமுதல் சர்வதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-


சர்வதேச புலம் பெயர் அமைப்பின் உதவியுடன் கனேடிய அரசின் நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

1975 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் 9 மில்லியன் கடவுச் சீட்டுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 4.4 மில்லியன் கடவுச்சீட்டுகள் இன்று செல்லுபடியானவையாக உள்ளன.

கடவுச் சீட்டொன்று காணாமற் போனவுடன் அல்லது திருடப்பட்டிருந்தால் உடனடியாக திணைக்களத்தின் 011-5329501 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தர வேண்டும். அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டும்.

பொலிஸ் திணைக்களம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், இன்டர்போல் இவை மூன்றினூடாக தரவுகள் பதியப்பட்டு சகல நாடுகளுக்கும் தகவல்கள் அனுப்பப்படும். காணாமற்போன அல்லது திருடப்பட்டதாக முறைப்பாடு கிடைத்தவுடன் குறித்த கடவுச்சீட்டு திணைக்களத்தினால் ரத்துச் செய்யப்படும். உரியவர் புதிய கடவுச்சீட்டொன்றையே பெற வேண்டும்.

திருடப்பட்ட கடவுச் சீட்டை மற்றவர் உபயோகித்து வெளிநாடு செல்ல முற்பட்டால் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின், இன்டர்போலின் தரவுகளுக்கு உடனடியாக தகவல் கிடைத்துவிடும். குறித்த கடவுச் சீட்டை உபயோகிப்பவர் எந்த விமான நிலையத்தில் இப்போது இருக்கிறார் என்ற தகவலும் கிடைத்துவிடும். எனவே கடவுச்சீட்டை மிகக் கவனமாக வைத்திருக்க வேண்டும்- என்றார். (ச)




# 41 ஆயிரம் படையினர் பதவி நீக்கம்

கொழும்பு, ஓக.1

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 41ஆயிரம் படையினர் தமது பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக நீக்கப்படவுள்ளனர்.

குறித்த படையினருக்கான பணி நீக்கக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சு தப்பியோடிய படையினரை பணி நீக்கும் திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லையெனக்கூறி

# அரசியல் கைதிகளை தொடர்ந்து தடுத்து வைத்திருக்க முடியாது

**அரச தரப்பின் கூற்றை ஏற்க பிரதம நீதியரசர் மறுப்பு**

கொழும்பு,ஓக.1

சட்டமா அதிபர் அலுவலகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாததைக் காரணம் காட்டி தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு முதல் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

போதிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் தாமதமாவதாக அரச தரப்பினர் கூறுவதை அனுமதிக்க முடியாது. வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தேவையான ஆவணங்களை, தமிழில் மொழிபெயர்ப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக, சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளை நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்கு முடியாமல் இருப்பதாக அரச தரப்பில் கூறப்பட்டது.

ஆனால், அரச தரப்பின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. தேவையான தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை உடனடியாகப் பெற்றுக் கொண்டு, பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அரச தரப்புக்கு நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

**தேவையான தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை உடனடியாகப் பெற்றுக் கொண்டு, பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அரச தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.**

இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதிக்கு ஒத்திவைத்த உயர் நீதிமன்றம், அன்றைய தினத்துக்கு முன்பு சந்தேக நபர்கள் மீதான குற்றப்பத்திரிகைகளைச் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும் அரச தரப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-சி)

# அரசியல் கட்சிகளின் ஆயுதங்களை மீளப் பெற வலியுறுத்து

கொழும்பு,ஓக.1

கிழக்கு மாகாண அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெறுமாறு பொலிஸ் மா அதிபருக்கு, தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வேட்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இயங்கும் சில கட்சிகளினால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறையிட்டதைத் தொடர்ந்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் காலத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும், தங்களிடம் உள்ள ஆயுதங்களை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ச)

# இஸற் புள்ளி பிரச்சினையைத் தீர்க்க புதிய பல்கலையை அமைப்பதே வழி

## உயர்கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.1

இஸற் புள்ளி சர்ச்சையை தீர்ப்பதற்கு புதிய பல்கலைக்கழகமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.



இஸற் புள்ளி சர்ச்சை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சமர்ப்பிக்க உள்ள அறிக்கையில் இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய, பழைய இஸற் புள்ளித் திட்டங்களினால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியரை உள்ளீர்க்கும் வகையில் இந்தப் பல்கலைக்கழகத்தை அமைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

தகுதி பெற்றுக் கொண்ட சகல மாணவர்களும் தற்போதைய பல்கலைக்கழகங்களில் உள்ளீர்ப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று அவர் தெரிவித்தார். சகல பீடங்களையும் கொண்ட முழுமையான ஓர் பல்கலைக்கழக கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

கொழும்புக்கு வெளியே ஓர் இடத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவ முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# ஸ்கந்தாவின் நன்றிகள்

## அருளாசிச் செய்தி



கல்விசார்பெருந்தகையீர்!

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுநிலை காணும் கலாநிதி ஆறு. திருமுருகன் சமுதாயத்தினுடைய தனிப் பெரும் சிற்பியாக சமயம், சமூகம் சார்ந்த தொண்டின் செயற்பாடுகள் அனைத்தையும் தனதாக்கி, ஏழையின் கண்ணீரைத் துடைக்கும் தொண்டனாகி, இளைய தலைமுறையினருக்கு சமூகப் பணியாற்றும் பண்பினை ஏற்படுத்தி, சமூகத்தின் தேவைகளை அனைத்து நாடுகளுக்கும் கொண்டு சென்று அவர்களின் உதவியினூடாக நற்பணியாற்றி ஆசிரியராக, அதிபராக, ஆலோசகராக, வழிகாட்டியாக சீரான உடை, நேரான பார்வை, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் செயல் முறை அனைத்தையும் கொண்ட திருமுருகன் ஸ்கந்தாவினுடைய வளர்ச்சிக்காக பலவழிகளிலும் பணியாற்றியவர். இவர் ஓய்வு பெற்றாலும், சமுதாயப் பணியில் என்றும் செயலாற்றுவார். இவருடைய பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் ஆசிரிய, மாணவ, நலன்விரும்பிகள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். கலாநிதி ஆறு. திருமுருகன் இன்றுபோல் என்றும் மகிழ்ச்சியாக வாழ இறைவன் ஆசீர்வதிப்பாராக.

- என்றும் வேண்டும் இன்ப அன்பு -

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
ஆதீன குரு முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர்ஆதீனம்.

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலரின் வாழ்த்துச் செய்தி



கல்வியும் ஒழுக்கமும் எமது இரண்டு கண்களைப் போன்றன. அவற்றினை வளர்த்தெடுத்து உயரிய சமூக விழுமியங்களும், நற்பண்புகளும் உடைய சமூக சிற்பிகளை உருவாக்குவதில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஆற்றியுள்ள அளப்பரிய பணி பாராட்டத்தக்கதாகும். எமது சமூகத்தின் உயர்ச்சியிலே கல்வியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது. மிகுந்த சமூகப் பொறுப்புடனும், சமூகப் பற்றுடனும் பணியாற்றி, உயரிய சமூக உருவாக்கத்தின் அடித்தளமாகவும், சமய விழுமியங்களை மாணவர்களுக்கு வழங்குவதில் மிகுந்த பங்களிப்பினை வழங்கி ஆற்றலும், ஆளுமையும், மனித நேயமும் உள்ள மாணவ சமுதாயத்தின் தோற்றுவாயாகவும் செயற்பட்டுள்ளமை மக்கள் என்றென்றும் மனதில் நிலைத்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சி.சத்தியசீலன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

## வாழ்த்துச் செய்தி



"உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார்சால்பின் வரைத்து"

என்ற வள்ளுவன் வாக்குக்கு இலக்கணமாக வாழ்ந்துகொண்டிருப்பவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள். இவரது வாக்கும், போக்கும் ஸ்கந்தா மைந்தர்களிடம் வேரூன்றியுள்ளமை, அதிபரின் சேவையைப் போற்றும் மனப்பாங்கிலிருந்து தெளிவாகின்றது. அதிபரின் சேவையின் பெறுமதியைப் பெற்று மகிழ்ந்தவர்கள் அதிபர் ஓய்வுபெறும் காலத்தில் அதனை வெளிப்படுத்தும் முகமாக சஞ்சிகையை வெளியிட்டுள்ளமை அவர்கள் உள்ளத்தில் அதிபர் நீங்கா இடம் பெற்றுள்ளமையைத் துல்லியமாகக் காட்டுகின்றது. பார்போற்றும் செம்மல் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஓய்வு காலத்திலும், ஓய்வின்றிப் பயன்கருதா சேவையினைப் பாரில் உள்ள அனைவருக்கும் பகிர்ந்து வழங்க எல்லாம் வல்ல கந்தப்பெருமான் திருவருள் புரியவேண்டும் என்று பிரார்த்தித்து என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றேன்.

ப. விக்னேஸ்வரன்,
பிரதிச் செயலாளர்,மாகாணக் கல்வி அமைச்சு,வடமாகாணம்.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகனின் பணிநயப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். சமயப் பேச்சாளராக, சமூகப் பணியாளராக அறியப்பட்ட அவர் அதிபராகவும் சிறந்த ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது காலத்தில் ஸ்கந்தாவின் பௌதிக வளங்களின் தேவை மிக இலகுவாகப் பூர்த்தி செய்யப்பட்டது. அவரது வெளி நாட்டுச் சுற்றுப் பயணங்களும், தனிப்பட்ட செல்வாக்கும் இத் தேவைகளை நிறைவேற்றுவதிற் பக்கபலங்களாக இருந்து உதவி யமையை நான் நன்கு அறிவேன். ஓய்வுக்குப்பின்னரும் அவரது உதவிகள் ஸ்கந்தாவிற்குக் கிடைக்கவேண்டுமெனவும், அவரது சமூக சேவைகள் மூலம் தொடர்ந்தும் பலரும் பயன்பெற வேண்டு மெனவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.


ஆ. ராஜேந்திரன், வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



ஸ்கந்தவரோதயக் கல்லூரி கல்லூரியை அலங்க ரித்த சிறப்பான அதிபர் களில் ஒருவராகத் தற்போதைய அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் காணப்படுகின்றார் என்றால் அது மிகையாகாது. அவரது பெயர்ஒரு அணிகலனாக அதாவது தமிழ்க் கடவுளான முருகனின் பெயரைத் தாங்கியுள்ளது. இது தமிழ் மீதான அவரது பற்றினைச் சிறப்பிக்கும் ஓர்அணிகலனாகக் காணப்படுகின்றது. இதே போல் அவரது நெற்றியில் உள்ள திருநீற்றுப் பட்டையானது அவருக்கு சைவத்தின் மீதான ஈடுபாட்டைக் காட்டுகின்ற மற்றுமொரு அணி கலனாக விளங்குகின்றது. திசை தெரியாக் கடலில் தத்தளிப்போர்க்கு கலங்கரை விளக்கம் எவ்வாறு உதவு கின்றதோ அதே போன்று, அன்பிற்காக, ஆதரவிற்காக, சொந்தத்திற்காக ஏங்கித் தவிக்கின்ற சிறுவர், சிறுமியர், பெண்கள், முதியோர்கள், ஊனமுற்றோர், மனவளர்ச்சி குறைந்தோர்போன்றவர்களுக்கு ஆதாரமாக மதிப்பிற் குரிய அதிபர் கலாநிதி.ஆறு. திருமுருகன் காணப் படுகின்றார்என்பது சகலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் புகழ்மிக்க இக்கல்லூரியின் புகழ்மிக்க அதிபர்களில் ஒருவராக இருந்து ஓய்வுபெற இருப்பவர்அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள். இக்கல்லூரி எமது பிரதேசத்தில் மாணவச் செல்வங்களின் ஆளுமையையும், அறிவையும் வளர்க்கும் உயர்அறிவாலயமாக என்றும் மிளிர, தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு. மு. நந்தகோபாலன்,
பிரதேச செயலர், வலி தெற்கு, உடுவில்.



கலாநிதி ஆறு.திருமுருகன்
(B.A.,Dip.in.Edu.,Ph.D - Honoric.Causia)

தாய், தந்தை
ஆறுமுகம் - சரஸ்வதி
பிறப்பு:- 28.05.1961
கல்வி கற்ற பாடசாலைகள் :-
யா/இராமநாதன் கல்லூரி,
யாழ்.இந்துக் கல்லூரி.
ஆசிரியப் பணி
★ யா/ திருஞானசம்பந்த வித்தியாசாலை (28.11.1989)
★ யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி (1993 2012)
ஆசிரியர், பகுதித்தலைவர், உபஅதிபர், பிரதி அதிபர், அதிபர்.

## உப அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும், அதிபராகவும் 19 வருட காலங்கள் சேவையாற்றும் காலப்பகுதியில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், கல்லூரியின் பௌதிகவளங்களைப் பெருக்கிக்கொள்ளவும் சிறந்த பணியினை வழங்கி சேவை நயப்பு விழாவினை பெற்றுக்கொள்ளும் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள், ஆன்மிக பயணங்கள் பலவற்றை மேற்கொண்டு மனித குலம் மேம்படவும் சமூகத்தின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் என்றென்றும் வழங்கி வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

திருமதி சாந்தினி நாகராசா,
உப அதிபர்,யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

## ஸ்கந்தாவின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர்



எனது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஓய்வுபெறவிருக்கின்றார் என்ற விடயம் கேட்டு நான் ஒரு நிமிடம் அதிர்ந்துபோனேன். ஸ்கந்தாவின் வளர்ச்சிக்காகத் அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல் வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வந்தார். அனைவருடனும் அன்புரிமையுடன் நல்ல ஒரு நண்பராகப் பழகும் சுபாவமுடையவர். பல சமய நிறுவனங்களை நடத்துகின்ற - பல சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த - ஒருவர் ஸ்கந்தாவுக்கு அதிபராகக் கிடைத்தமையால் ஸ்கந்தா பெருமையடைகின்றது. இவர் ஒரு சிறந்த ஆளுமை படைத்தவர். உலகமெல்லாம் புகழ்பரப்பிய ஓர் ஆன்மீக வாதியாக, சமூக சேவகனாக, கலாநிதியாக ஆறு. திருமுருகன் திகழ்கின்றார். தமிழ் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த பற்றுக்கொண்டவர். வன்னியில் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு 116 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கிய பெருவள்ளல். ஒரு பாடசாலையில் அதிபர் பதவி கிடைத்தால் அந்தப் பாடசாலை மூலம் அந்த அதிபருக்குப் பெருமை கிடைக்கின்றது. ஆனால் ஸ்கந்தாவில் இவர் அதிபராகக் கடமையாற்றியமையால் ஸ்கந்தாவின் பெருமை மேலும் பன்மடங்காகின்றது.

தி. பிரகாஷ்,கௌரவ தவிசாளர் - வலி. தெற்கு பிரதேசசபை.

## வாழ்த்துச் செய்தி



சமயப் பணியுடன் கல்விப் பணியும் புரிந்து ஓய்வுபெறும் உயர்திரு. ஆறு.திருமுருகன் அவர்களை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். புகழ்பூத்த யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் இருந்து அரும்பணியாற்றிப் பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். சொல்லால் மட்டுமன்றி செயலாலும் செய்து காட்டும் செயல்வீரர். சைவசமய முறைப்படி தானும் வாழ்ந்து, தான் வாழும் சமூகத்திற்கும் உதாரணமாகத் திகழ்பவர். இசுறு திட்டத்தின்கீழ் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி பல வளங்களை எல்லாம் பெற்று இன்று அழகான கல்லூரியாகத் தலை நிமிர்ந்து நிற்கும் இக்காலத்தில் இக் கல்லூரியின் அதிபராக இன்னும் சில காலம் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும், தனது ஆன்மீகப் பணியினை மேலும் சிறப்பாக ஆற்றவேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக ஓய்வு பெறும் இவரது ஓய்வுகாலம் சிறக்க இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

சி. கந்தசாமி, பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.
பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்.

## Message of Felicitation from the former Principal of Skanda



It is with mingled feelings of happiness and sadness, I pen this message on the eve of the premature retirement of Dr. Aru. Thirumurugan on 1st of August 2012. His association with Skanda spans a period of nineteen years as a teacher, Sectional Head, Vice-Principal, Deputy Principal and Principal. When I assumed the Principalship of Skanda in 1997, everything in the school was topsy-turvy due to the 'Leap Forward' activity. He stood by me loyally and whole heartedly through foul weather, through the period of trials and tribulations and many cares and coresses. He shouldered half of my burden for the smooth running of the school.

He possesses admirable human qualities, such as affablility in conversation, eloquence in debate, penetration and discernment in counsel, vigilence and enterprise in action. His virtues and integrity in all the duties of public life are beyond exception.

I reluctantly bid him farewell. May God belss him with long life so that he may ever be useful to the society.

- K.Sivaji.

## பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எங்கள் அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் 1993ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராக, கலை-வர்த்தக மன்றப் பொறுப்பாசிரியராக, ஒழுக்காற்றுக்குழுப் பொறுப்பாசிரியராக, இல்லப் பொறுப்பாசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக மூன்று அதிபர்களின் கீழ் உயரிய பணி செய்து 2008இல் அதிபராகி இன்று இக் கல்லூரியின் முக்கிய தேவைகள் யாவற்றையும் நிறைவு செய்த பெரு நிறைவோடு ஓய்வு பெறுகின்றார்.

கல்லூரியினுள் காலடியெடுத்து வைக்கும்போது நுழைவாயில், ஸ்கந்தன் கோவில், அழகிய மூன்றுமாடிக் கட்டடம், ஸ்தாபகர்உருவச் சிலைகள், அழகிய நந்தவனம், அழகாகச் செப்பனிடப்பட்ட பாதைகள் என அனைத்துமே அவரது எண்ணத்தில் உருவானவை என்பதை எவரும் மறுக்க முடியாது. இத்தகைய எங்கள் அதிபர் அவர்கள் ஓய்வுபெறும் வயதுக்கு முன்னரே இளைப்பாறுவதை எமது சமூகம் விரும்பாவிடினும் இன்றைய காலகட்டத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்ற வேண்டிய பல பணிகள் எங்கள் அதிபர் அவர்களால் நிறைவேறும் என்ற திருப்தியுடன் கல்லூரிச் சமூகம் அவர் சேவையை வாழ்த்தி நிற்கின்றது.

திரு.த.தவராஜா, பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## பல்துறை வித்தகர் - கலாநிதி ஆறு. திருமுருகன்



பண்புடைய குடும்பத்தில் பிறந்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற பொன் மொழிக்கமைய பயன்தரு காரியங்களை ஆற்றிவருகின்றார் கலாநிதி ஆறு. திருமுருகன். தனது நீண்ட கால கல்விச் சேவையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபராக உயர் பதவி வகித்து தற்பொழுது ஓய்வுநிலை பெறுகிறார்.

இசுறு திட்டத்தின்கீழ் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு மாணவர்களின் இடவசதிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. முன்னாள் அதிபர் திரு. க. சிவாஜியுடன் இணைந்து ஆரம்பிக் கப்பட்டிருக்கும் ஆரம்பப் பாடசாலைக்கு சகல வசதிகளுடன் அமையப்பெற்ற கட்டடம் அத்தியாவசியம். முதல் கட்டமாக பழைய மாணவர்கள், கல்லூரி அபிவிருத்திச் சபை, பெற்றோர், நலன்விரும்பிகள் இணைந்து சுற்றுமதில், கிணறு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. கல்லூரி சேவையில் இருந்து ஓய்வு நிலை பெற்றாலும் தனது ஆளுமையை உபயோகித்து, ஒரு தொடர் நாடகமாக இவ்விருகைங்கரியங் களையும் நிறைவு செய்ய முன்னின்று ஒத்தாசை வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

க. பரமநாதன், தலைவர், பழைய மாணவர் தாய்ச்சங்கம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## வாழ்த்துச் செய்தி



ஸ்கந்தப் பெருமான் கோயிலும், வானளாவும் தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்கும் இசுறு மூன்று மாடிக் கட்டடமும், ஏனைய மாடிக் கட்டடங்களும் கலாநிதி ஆறு.திருமுருகன் பாடசாலைக்கு ஆற்றிய ஆற்றல்மிகுந்த அளப்பரிய சேவைக்குச் சான்று பகர்கின்றன. இவரது இதய சுத்தியும், தூரதிருஷ்டியான சிந்தனையும், திட்டமிடல் உத்தியும் எமது பாடசாலை வளாகத்தின் தோற்றத்தை நாட்டிலுள்ள தரம் வாய்ந்த பாட சாலைகளின் மட் டத்திற்கு உயர்த்தியுள்ளன.

இன்று பெரு வளர்ச்சி கண்டு ஸ்கந்தாவிற்கு ஊட்டல் பாடசாலையாக விளங்கும் ஸ்கந்தா ஆரம்ப பிரிவின் ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் தனித்துவமான ஒரு வளாகமாக அதை உருவாக்கி, ஸ்கந்தா ஆரம்ப பிரிவு, ஸ்கந்த வரோதயக் கல்லூரி என முழுமையான இரு வளாகங்கள் எதிர்காலத்தில் நிலைத்து நிற்பதற்கு வழிவகுத்துள்ளார். இவரது சேவைக்காலம் மிகவும் பெறுமதிமிக்க பொற்காலம் எனலாம். உரிய காலத்திற்கு முன்பு சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும், எமது பாடசாலையிலிருந்தும் அதன் முன்னேற்றத்திலிருந்தும் அவரது மனம் விலகிச் செல்லாது என்பது நிச்சயம். முழுமையான சமய, சமூக சேவைகளுக்காக ஓய்வு பெறும் கலாநிதி அவர்களுக்கு, பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் சார்பாக மனப்பூர்வமான நன்றியும் வாழ்த்துக்களும் பாராட்டும் உரித்தாகுக.

த. தேவராஜன்,செயலாளர்,பழைய மாணவ தாய்ச் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகிறேன்



கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஆசிரியர்குழாம் மத்தியில் அன்புடனும், பாசத்துட னும், கண்ணியத்துடனும் பழகி பெருமதிப்பைப் பெற்றவர். மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை அனைத்திற்கும் களமமைத்துக் கொடுத்து மாணவர்கள் மத்தியிலும் பெரு மதிப்பைப் பெற்றவர். கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர். பாடசாலையின் பண்புசார்விருத்தியிலே கூடிய அக்கறையுடன் நேரம், காலம் பாராது சேவை ஆற்றி, மக்கள் மத்தியிலும், வெளிநாடுகளிலும் பெருமதிப்பைப் பெற்றவர். அவரின் சேவைகளை மனப்பூர்வமாக பாராட்டி வாழ்த்துகிறேன். அவர்தனது வாண்மையை உயர்த்திக் கொள்ளவும், வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இனிவரும் காலங் களிலும் பாடசாலையின் அபிவிருத்தியிலும் சகலவிதமான செயற்பாடுகளிலும் தமது பூரண ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டு அபிவிருத்திச் சங்க சார்பிலும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மா.ஜோதி மார்க்கண்டு, செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## பிரபாகரனின் சாவுக்கு காரணமானவர் 'டெசோ' மூலம் தமிழீழம் அமைப்பாரா?

### கருணாநிதி மீது விஜயகாந் காட்டம்

பிரபாகரன் உயிரோடு இருந்த போதே இலங்கைத் தமிழர்களைக் கருணாநிதி காப்பாற்றவில்லை. இனி மேல் டெசோ மாநாட்டை நடத்தித் தான் தமிழீழத்தை அமைக்கப் போவதாக கருணா நிதி கூறுகிறார். இலங்கை யில் தமிழர்கள் செத்துக் கொண் டிருந்த வேளையில் அமைதி காத்து தமிழ் மக்களின் சாவுக் குக் காரணமாக இருந்தவர் இவர் என்பதை யாரும் மறந்து விடப்போவதில்லை. இவ்வாறு தேசிய முன்னேற் றத் திராவிட கழகத் தலை வர் விஜயகாந் தெரிவித் துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஊடகவியலா ளருக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 ஆம் ஆண்டு இலங் கையில் போர் நடந்த போது தமிழக ஆட்சியில் இருந்த கருணாநிதி இலங்கைத் தமிழர்களுக்காக எத்தவொரு பணிகளையும் மேற்கொள்ள வில்லை.

இந்த நிலையில் தமிழீழ ஆதரவு மாநாடு எனும் டெசோவை அவர் கையி லெடுப்பதில் எந்தவிதப் பய னும் தமிழர்களுக்கு ஏற்படப் போவதில்லை. இது கருணா நிதியின் அரசியல் லாபம் தேடும் செயற்பாடு மட்டுமே என்றார்-அவர். (3)



அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. இதன்போது அம்மன், பிள்ளையார், சுப்பிரமணியர் தேரில் பவனி வரும் காட்சி. (3-253)

## சமய சந்நிதிகளில்

அளவெட்டி, ஒக.1

சண்டிலிப்பாய் வயற்கரை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (3-36)

* * *

அளவெட்டி குருக்கள் கிணற்றடி பிள்ளையார் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ளது. (3-36)

* * *

அளவெட்டி தெற்கு வெளி வயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. நாளை பூங்காவனத் திருவிழா நடைபெறும். (3-36)

* * *

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் 'துர்க்காபுரம்' ஞான துர்க்கை அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (3)

## முன்பள்ளி டிப்ளோமா கற்கை; புலோலியில் இன்று பதிவுகள்

வடமராட்சி, ஒக.1

வடமராட்சி வலயத்தில் ஆறுதல் நிறுவனம் நடத்தும் முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறிக்கு பதிவு செய்யும் மாணவர்களும் புதிதாக இணைய விரும்பும் மாண வர்களும் இன்று காலை 9 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலையில் உள்ள ஆசிரிய வள நிலையத்திற்கு சமூக மளிக்குமாறு வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உத விக் கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் அறிவித்துள் ளார்.

அத்துடன் முன்னைய வருடங்களில் இந்தக் கற்கை நெறியை மேற்கொண்டு சித்தி அடையாதவர்களும் இந்தக் கற்கை நெறியைத் தொடரச் சந்தர்ப்பம் வழங் கப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (3-8)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஒன்பதாம் நாள் நிகழ்வு மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் எம்.ஸ்ரீரங்கநாதன், எஸ். ராகவன், எஸ்.திவாகரன், கே.கஜன் பிரம்மஸ்ரீ என்.சிவசுந்தரசர்மா ஆகியோர் இணைந்து நடத்தும் கச்சேரி நடைபெறும். (3-14-86)

* * *

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் ''நல்லரு ளைத் தருவான் நல்லைக் கந்தன்'' என்னும் தலைப்பில் சைவப் புலவர் பொன். சுகந்தனின் சிறப்பு சொற்பொழிவு நடைபெறும். அத்துடன் புத்தூர் கன்னி வைரவர் அறநெறிப் பாடசாலை, அனலைதீவு மனோன்மணி அம்மன் அறநெறி பாடசாலைகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக புஸ்பமலர் யோகநாதனின் மாணவர்கள் இன்னிசைக் கச்சேரி நடத்துவர். (3-7-86)

# ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி

திதி : பூரணை 01.08.2012

தோற்றம் 10★08★1928

மறைவு 21★07★2005

## அமரர் முருகேசு மீனாட்சி [சரஸ்]

[கரம்பொன் மேற்கு]



ஏழு ஆண்டுகள் கடந்ததுவோ அம்மா - உங்கள்
எளிமையான முகம் கண்டு
ஏழு ஜென்மம் கடப்பினும் - உங்கள்
எதிரொலிக்கும் குரல் இங்கு

பாரினில் நாம் செய்த பாவம் எதுவோ ?
பாதகன் உன் உயிர் கவர்ந்தது தான் தண்டனையோ ?
பார்வையாலே பலரை பணிய வைத்தீர் - உம்
பார்வையின்றி ஆறறிவும் அடங்குதம்மா உன் நினைவில்

மீனாட்சி அம்மனாய் உன் புன்சிரிப்பு
மீளவே முடியாது உன் இழப்பு
மீண்டும் வாழத் துடிக்கிறேன் அந்நாள்களை
மிதமாய் உணர்கிறேன் தாயவள் உனது பெருமையை

எம் கண்முன்னே நீர் சுமந்த சுமைகளும்
எமக்காக நீர் சிந்திய வியர்வைத் துளிகளும்
எங்கள் உயிரோடு கலந்த உன் சுவாசமும்
என் கவியினாலே வரையறுக்க முடியாதம்மா


தொல்லை தனக்கென்றும் சுகமெல்லாம் எமக்கென்றும்
தோழமையோடு வாழ்ந்தாய் அம்மா
தொடுதூரம் நீ இன்றி - உன் பிள்ளை நான்
தொலைந்து போகிறேன் விதியின் சதியில்
மாறா உன் நினைவுகளுடன்
ஓம் சாந்தி!

அம்பிகாதேவி பற்குணராஜா [மகள்]
134, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

[ஈ/1769][6-7-8]

# 86 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்




இன்று (01.08.2012) தனது 86 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் எமது குடும்பத்தை வழிநடத்தும் எமது அன்புத் தந்தையும் மாமனும், பேரனும், பூட்டனுமாகிய

**திரு.வேலுப்பிள்ளை ஆரியதுரை**

அவர்களை நீடூழிகாலம் நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
வேலப்பர்லேன், அரியாலை.

(21183) (2-6-7)

# மரண அறிவித்தல்

## கந்தையா சந்திரசேகரம் (சின்னண்ணை)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரந்தன், நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரசேகரம்(சின்னண்ணை) (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கிருபானந்தன் (ரூபன்-சுவிஸ்), தயானந்தன்(தயா-சுவிஸ்), ஜீவானந்தன் (ஜீவா- லண்டன்), யமுனாமலர்(யமுனா-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகாதேவி(சுவிஸ்), தாரணி(வாசுகி-சுவிஸ்), பவானி (லண்டன்), இந்திரகுமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூர் (சுவிஸ்), கஜானா(சுவிஸ்), ரிதுஷன்(சுவிஸ்), ரிவிஷான் (சுவிஸ்), கஜனி(லண்டன்), வர்ணிஷா(லண்டன்), நிவேஷ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், சரஸ்வதி,கோமதி, காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, சிவபாக்கியம் மற்றும் தேவசிகாமணி, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.08.2012) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனத்திற்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரந்தன், நீர்வேலி மேற்கு. (21187)(5-6-7)

## கூட்டுறவு தினவிழா

ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம் நடத்தும் 90ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவும் பாராட்டு விழாவும் நாளை வியாழக் கிழமை ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு க.மகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், வலி தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் வலி தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ், வலி வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(3-86)


## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226944
நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே : 077 6225944
கூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே : 077 8996085

(18965)

## வீடு வாடகைக்கு

யாழ்நகர் நாலாம் குறுக்குத்தெரு OLR தேவாலயத்திற்கு முன்பாக 4 அறைகளுடன் AC,வாகனம் நிறுத்தும் வசதியுடன் வீடு வாடகைக்குண்டு
நிறுவனங்கள் விரும்பத்தக்கது

தொடர்பு: 021 222 8587, 077 0769 688.

(21091) (45.6.7)

## பணி நிலை வேண்டுகை

யாழ். நகரில் இயங்கும் A தர உல்லாசப் பயணிகள் தங்குமிடத்திற்கு பின்வரும் பதவிக்கு உடனடியாக ஆள்கள் தேவை.

1) Night Manager - (ஆண்)
2) வரவேற்பாளர் - (பெண்)

உங்கள் சுயவிபரக் கோவையுடன் உறவினர் அல்லாத இருவரின் சிபாரிசுக் கடிதத்துடன் இன்று (01.08.2012) புதன்கிழமை காலை 9.00 மணி முதல் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

Pillaiyar inn
31, Manipay Road, Jaffna
Tel : 021 222 2829, 021 222 4449
E - Mail : Pillaiyar inn @gmail.com
Web : www Pillaiyar inn.com

(21178)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

உடையார் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு
கொக்குவிலில் மூன்று பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 2545 337

(18131) (45.6.9)

## கடை விற்பனைக்கு

மன்னார் நகரில் பொலிஸ் நிலைய வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கடை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 077 8421359, 023 3231216

(சி/1780)(6-7-8)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் அரசடி ஒழுங்கையில் A -9 வீதிக்கு அருகில் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 0400 381

(18131) (45.6.9)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மிகவும் சிறந்த நிலையிலுள்ள யமகா பீல்ட் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு

தொடர்பு: 077 6179 134

(21051) (45.6.9)

## உபாகர்மம்

இணுவில் தர்ம சாஸ்தா குருகுலத்தில்
02.08.2012 வியாழக்கிழமை
காலை 7 மணிக்கு உபாகர்மம் நடைபெறும்.
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
அதிபர்- தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

(21186) (45.6.9)

## ஜேர்மன், சுவிஸ் மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது. இம்முறை பரீட்சையில் 15 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள் முதல் தடவையில். அடுத்த புதிய வகுப்புக்கள் (06.08.2012) திங்கட்கிழமை ஆரம்பம்

German Institute Miss Kajenthini
10, Palaly Road Jaffna
T.P : 077 1604823

(21178)(6-7-8)

## காணிவிற்பனைக்கு

இல. 12, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 2½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 968 4168, 004 747371392


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

*(01.08.2012)*



தோற்றம்
16.09.1936

மறைவு
02.07.2012

## திருமதி தங்கராசா அன்னம்மா

இன்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கானை மேற்கு, நிற்சாமம். - குடும்பத்தினர் - (21175) (2-6-7)

# மரண அறிவித்தல்

## ஸ்ரீமதி வேதநாயகி அம்மா நகுலேஸ்வரக்குருக்கள்



கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி வேதநாயகிஅம்மா நகுலேஸ்வரக் குருக்கள் நேற்றைய தினம் (31.07.2012) செவ்வாய்க்கிழமை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரஸ்வாமிபாதம் தாள் சேர்ந்தார்.

அன்னார் ராஜராஜஸ்ரீ - நகுலேஸ்வரக்குருக்கள் (கீரிமலை ஆதீனம்) அவர்களின் பாசமிகு பாரியாரும், காலஞ்சென்ற கீரிமலை ஆதீனகுரு குமாரசாமிக்குருக்கள்-அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மாவை ஆதீன குரு துரைச்சாமிக் குருக்கள்- நாராயணியம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான மாவை சு.துஷண்முகநாதக்குருக்கள், விசாலாட்சி, சுந்தரமூர்த்திக்குருக்கள் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கெங்காதேவி, கலாவதி, குமாரசாமிக்குருக்கள், ரங்கநாதக்குருக்கள், கெங்காதரக்குருக்கள், நாராயணி, றமணி, காலஞ்சென்ற சிவகாமசுந்தரி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2012) புதன்கிழமை இளவாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜராஜஸ்ரீ
கு.நகுலேஸ்வரக்குருக்கள்
(ஆதீனகர்த்தா - கீரிமலை, சிவன் கோயில், பிள்ளைகள்.

இளவாலை வடக்கு, இளவாலை.

(c/2037)(6-7-8)


# TOSHIBA & DELL LAPTOPS

மிகக் குறைந்த விலைகளில் சர்வதேச உத்தரவாதத்துடன்
அனுமதிபெற்ற முகவர்கள் மூலம்
DUAL CORE/ I3/I5 Strart From 58,000 only

STP® Your Partner in IT Solution — Dealer of Dell/ Toshiba

149, Kasthuriar Road, Jaffna. T.P: 0212222674 (சி/2040)


# பெயர் மாற்றம்

ஞானசேகரம் வினோபா ஆகிய நான் இன்று 01.08.2012 முதல் ஞானசேகரம் டென்சி எனப் பெயர் மாற்றம் செய்து கொள்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

ஞானசேகரம் - டென்சி

(21099) (2,6,7)




# மகளிருக்கான ஓகஸ்ட்

## விடுமுறைகால 20 நாள் வகுப்புகள்



பாடசாலை ஆசிரியைகள், வெளிநாடு செல்ல விரும்புபவர்கள், வெளிநாடுகளிலிருந்து வந்து நிற்பவர்கள், உள்ளூரிலேயே தொழில் புரிய விரும்புபவர்கள், மற்றும் ஆர்வமுள்ள அனைவருக்கும் உகந்த பயன்மிகு பயிற்சிகள்!

- முக அழகுக் கலை (Facial):-(B)பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற், Jovees தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட பலவகை.
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 6 முறைகளில் சேலை அணிதல், அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

**முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)**

- 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 விதமான முடி வெட்டுதல்கள். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், தைக்கும் பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 06-08-2012 திங்கள் காலை 9.30 மணி**

யாழ் கலாலயா பயிற்சியகம் 1985-2012
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்
Yaarl Kalaalayah Academy, Jaffna.

மேலும் விபரங்களை பி.ப 4.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(சி/2042)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் ஸ்ரீமதி வேதநாயகிஅம்மா
நகுலேஸ்வரக்குருக்கள்
சிவத் தோன்றல் வழிகாட்டியாக,
வணங்கும் தலமாக விளங்கும்
நகுலேஸ்வரர் புகழ் பரப்பும்
நகுலைக்குருவின் அன்புத் துணைவியார்
ஸ்ரீமதி வேதநாயகி அம்மா அவர்களின்

ஆத்மா சாந்தியடைய ஈழத்துப் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப்பெருமான் கழல்களை 'ஓம் நமசிவாய' சொல்லிப் பிரார்த்திப்போமாக.

சு.மனோகரன் (Manoj)

(சி/2039) (2-6-7)

# தேவை

01. க.பொ.த.(சாதாரணதரம்) சித்தியடைந்த, விடுதியில் தங்கி இருந்து பணியாற்றக்கூடிய பெண் ஆய்வுகூட உதவியாளர்

02. 40 வயதுக்கு மேற்பட்ட, விடுதியில் தங்கியிருந்து சமைக்கக் கூடிய அனுபவமிக்க பெண்.

தகுந்த சம்பளம் வழங்கப்படும். 04.08.2012 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி/2032) (2,6,7)

# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டம், சுண்டுக்குளி கோயில்பற்று, அரியாலை இறை இல.337, கண்டி வீதி, "பிரப்பங்குளம்புலம்" நிலப்பரப்பு (01) ஒன்று விஸ்தீரணம் உள்ள ஆதனம் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதால் இக் காணியை எவராவது கொள்வனவு செய்யும் பட்சத்தில் அதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அவர்களே பாத்திரமாவார்கள் என்பதை இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

- ந.குகதாசன்,
337, கண்டி வீதி, அரியாலை.

(21096) (2,6,7)

# வேலை வாய்ப்பு

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பத்திரிகை நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தல் பிரதிநிதி (Marketing Representive), பக்கவடிவமைப்பாளர் (Graphic designer) தேவை.

விண்ணப்பிக்கவும்-
முகாமையாளர், 220
1ஆம் குறுக்குத் தெரு, வேம்படிச்சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212221500/0776164901

(21233) 15-14

# விற்பனைக்கு

226 XXXX தொடரிலக்கமுடைய
06 wheel லொறி EQ......
தொடரிலக்கமுடைய Magindra Jeep
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 5890 730

(சி/2036) (45.6.7)

# சாரதி தேவை

முன் அனுபவமுள்ள
06 wheel, 10 wheel லொறிச்
சாரதி தேவை.
தொடர்பு: 077 5890 730

(சி/2035) (45.6.7)

# பணிப் பெண் தேவை

அல்வாயில் இரவில் தங்கி நின்று
வேலை செய்யக்கூடிய
பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 7574 319

(21098) (45.6.7)




RS. 125 000/=

ஓட்டோ லிப்டுகள் (Hydraulic)
பூட்டி தரப்படும்

4,8,12,16 Ton வாகன தூக்கிகள் (Hydraulic Hoist)ம் உள்ளன.

CARTEC TRADING (PVT) LTD
94, 4ஆம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்
தொடர்பு 077 6872656, 072 1260760

(21197)


# கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்றத்தின் அபிமானியான திரு. E.S.P நாகரத்தினம் அவர்களது அன்புத்தாயார்

*திருமதி. மாணிக்கம் பேரம்பலம்*

அவர்களது மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகள் சேரப்பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கிழவன்காடு கலாமன்றம்,*
*காரைநகர்.*

*நிர்வாகசபையினர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள்*

(21202) (15 14)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதன மீள் மதிப்பீடு

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கான மீள் மதிப்பீடு விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் (02.08.2012) ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள் தங்கள் பகுதிக்கு வருகை தரும் போது வேண்டிய ஒத்துழைப்பினை வழங்குமாறு தங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி நா. ஐங்கரன்
தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.

(சி/7033) (45.6.7)

# கண்ணீர்க் காணிக்கை



கீரிமலை நகுலேஸ்வர
தேவஸ்தான ஆதீன கர்த்தா
பிரம்மஸ்ரீ நகுலேஸ்வரக்
குருக்கள் அவர்களின்
பாரியாரின்
கண்ணீர்க்காணிக்கை
அமரர் வேதநாயகி
நகுலேஸ்வரக்குருக்கள்

ஆதவன் உதித்த போது
அதிகாலை வந்த செய்தி
அம்மா உம் மறைவு கேட்டு
அதிர்ந்து போனோம் எம் மனதில்

ஐயாவின் வாழ்வு தன்னில்
அழகான துணையாய் வாழ்ந்து
மெய்யான புகழும் பெற காரணமாய் இருந்தாய் நீயே

உம் பிரிவால் ஏங்கி நிற்கும்
இதயங்கள் வலி உணர்ந்து
ஆறுதல் தான் சொல்லி
ஆண்டவனை வேண்டுகின்றோம்

கலாசாரப்பேரவை
பிரதேசசெயலகம்,
தெல்லிப்பழை

(21199)(6-7-8)

# பொதுக்கூட்டம்

நாரந்தனை தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய சைவ மகா சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 05.08.2012 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் சபைத் தலைவர் திரு.வே.துரைராசா அவர்களின் தலைமையின் கீழ் ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம். எனவே அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**- சைவ மகாசபையினர்.**

(20195) (2,6,7)

# ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப் பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படு கின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(கச்சேரி வீதியும் கச்சேரி – நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(21040) (45-6-7)

## தவறவிடப்பட்டுள்ளது

சந்திரமோகன் அச்சுதன் என்பவருடைய 952172123V எனும் இலக்கமுடைய தே.அ.அ. கடந்த ஞாயிற்றுக்கிழமை 22.07.2012 அன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வளாகத்தினுள் தவறவிடப்பட்டுவிட்டது.

தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 0778430027 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(21193)(6-7-8)

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா ? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம்.

அழையுங்கள்

T.P : 077 9086737 GUNAA BEST PC

(21097)(6-7-8)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்யப்பட்டு விற்பனையா கின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்

#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்

(சி/2027)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

கரணவாய் தெற்கு, கருப்பையடி அம்மன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடும், 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 021 7200157**

(18704)(6-7-8)






# சிரமதானம்

அளவெட்டி, ஓக.01

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள வைத்தியர்கள் தங்கும் விடுதிகளைச் சுற்றிக் காணப்பட்ட பெரும் பற்றைகளையும் புதர்களையும் துப்புரவு செய்யும் வேலை கடந்த வாரம் வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எஸ்.உமாசங்கர் தலைமையில் சிரமதானப் பணி மூலம் செய்து முடிக்கப் பட்டது.

இந்தச் சிரமதானப் பணியில் வைத்திய சாலைப் பணியாளர்கள் மற்றும் பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த படையதிகாரிகளும் படையினரும் இணைந்து செயற் பட்டனர். இந்தச் சிரமதானப் பணிமூலம் விடுதிகளைச் சூழவுள்ள பெரும்பகுதி சுத்தம் செய்யப்பட்டதால், பெரும் செலவில் செய்ய வேண்டிய வேலை இந்தப் பணி மூலம் இலவசமாகச் செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதத்தில் இந்த வைத்தியசாலையில் இரண்டு பெரிய சிரமதானப் பணிகள் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது என வைத்தியசாலை வட்டாரமூலம் அறிந்துகொள்ள முடிந்தது.

(3-36)

## குழவி கொட்டியதால் வைத்தியசாலையில்

அளவெட்டி,ஓக. 1

மல்லாகம் நரிவிட்டான் இந்து மயானத்தில் இறந்த உறவினர் ஒருவரின் உடலைத் தகனம் செய்வதற்காக தீ மூட்டி விட்டு நின்றவேளை தீயின் வெப்பம் காரணமாக அருகில் நின்ற மரத்தின் கிளையில் கூடுகட்டியிருந்த குளவிகள் வெப்பம் தாங்காது கலைந்தன. கூட்டை விட்டுக் கலைந்த குளவிகள் அங்கு நின்றவர்களை விரட்டி விரட்டித் தாக்கியதனால் பலர் குளவியின் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இவர்களில் இருவரின் தலையில் குளவிபலமாகக் கொட்டியதில் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை பி.ப 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் குளவியின் தாக்குதலுக்கு இலக்கானவர்களில் ஒருவர் காந்தி வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கனகரட்ணம் ராசு 37 என்பவரும் மல்லாகம் குடியேற்றத்திட்டத்தில் வசித்துவரும் இராசதுரை சந்திரகுமார் 38 என்பவரும் ஆவர். மேலும் ஐந்துபேர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார்கள். (3-36)

## மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, ஓக.1

புலோலி கந்த முருகேசனார் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(3-8)

## காணி விற்பனைக்கு

நெல்லியடி நகரிலிருந்து 300 கிலோ மீற்றருக்குள் 6 ½ பரப்பு நல்ல நீரும், செம்மண் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0773593445, 021 226 3755

(சி/2031) (2,6,7)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.03.1921



மறைவு 05.08.2009

**அமரர் கணபதிப்பிள்ளை தம்பையா**

(கனிஷ்ட பரிசோதகர் யாழ். தபால் அலுவலகம்)

அன்பின் பண்பிடமாக குடும்பத்தின் குலவிளக்காக
பாசத்தின் பிறப்பிடமாக விருந்தோம்பும் சிகரமாக
அறிவிளக்கின் வழிகாட்டியாக -வாழ்ந்து
நல்லூர்க் கந்தனின் பக்தனாகப் பரிணமித்து
மஞ்சத் தினத்தன்று இறைவனடி சேர்ந்து
மூன்றாண்டு ஆனாலும் - உங்களை மறக்க
முடியவில்லை- ஐயாவே.

122/15, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

(21194)(5,6,7)

## ஓர் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 10 ★ 09 ★ 1924

விண்ணில் 13 ★ 08 ★ 2011

**திருமதி இராசம்மா கந்தையா**

முழுமதி நிறை நாளில் வாழ்வில்
நிறைவு கண்ட எங்கள் அம்மாவே !
நீங்கள் மறைந்து ஓர் ஆண்டு
சென்றாலும் இன்றும் எங்கள்
உள்ளங்களில் நீங்காத நினைவாக
உள்ளீர்கள் ஆண்டு ஒன்றல்ல
பல ஆண்டுகள் சென்றாலும்
உங்களை நாங்கள் மறவோம்

296/4, ஏ.வி. றோட், அரியாலை

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்

(21190)(6-7-8)

## மரண அறிவித்தல்

**திருமதி மரியம்மா ஸ்ரனிஸ்லாஸ்**

(இளைப்பாறிய ஆசிரியை)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா ஸ்ரனிஸ்லாஸ் (இளைப்பாறிய ஆசிரியை) நேற்றுமுன்தினம் (30.07.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை அவர்களின் மகளும், ஸ்ரனிஸ்லாஸ் (இளைப் பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி திரேசம்மா சொலமன் அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி யோசெப்பின் இமாக்குலேற் ஞானசேகரம் (பிரதி அதிபர் புத்தளம் செ்ன். மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம்), சாள்ஸ் ஜெயராசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற மத்தியூஸ் ஜெயரஞ்சன், டனிசியஸ் ஜெயநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஞானசேகரம் (ஒய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்), மரியற் ராஜிவி, பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியும், றெறன்ஸ், றெபேக்கா, டெனிஸ், டிலான், டானியல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் (93/2, குருநாகல் வீதி, புத்தளம்) இன்று (01.08.2012) புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு இரங்கல் திருப்பலியுடன். நல்லடக்கத்துக்காகத் தில்லையடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி.ஞானசேகரம்
032 4921948

தொடர்புகளுக்கு:-
0094323295560 இஸ்ரனிஸ்லாஸ்
0094770156703 சாள்ஸ்,
0094770171970 ஜெயநாதன்.

(21196) (2-6-7)

மன்னார் நீதிமன்ற தாக்குதல் சம்பவம்

# 13 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட 13 பேரையும் எதிர் வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் நீதிமன்ற வீதியில் மன்னார் உப்புக்குளம் கிராம மக்கள் கடந்த 18 ஆம் திகதி மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது மன்னார் நீதிமன்றத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரினால் கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன் போது நீதிமன்றத்திற்குச் சேதம் ஏற்பட்டது. இந்த நிலையில் சம்பவ தினமன்றே குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மன்னாரைச் சேர்ந்த 13 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்து நீதிவானிடம் முன்னிலைப் படுத்தினர். குறித்த 13 பேரையும் கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் குறித்த 13 பேரும் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ங-க-12)

## டைனமைற் பாவித்த மீனவர் இருவருக்கு ரூ. 40 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1

சட்டவிரோத டைனமைற் வெடிபொருளைப் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றத்துக்காக யாழ். குருநகரைச் சேர்ந்த இருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

மண்டைதீவுக் கடலில் டைனமைற் வெடிபொருள் பயன்படுத்தி கடந்த வெள்ளிக் கிழமை மீன்பிடித்த இருவரையும் கடற் படையினர் பிடித்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்ப டைத்திருந்தனர்.

இருவரும் சனிக்கிழமை நீதிவான் முன் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். இருவருக்கும் எதிராக திணைக்களத்தினர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந் தனர். நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா நேற்று வழக்கை விசாரித்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 20 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். படகைப் பதிவு செய்த பின்னர் அவர்களிடம் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-4)

## சுஜீவா வைத்தியசாலை

சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஆன்மீக அழைப்பு

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் 341 ஆவது வருட ம்ருத்திகா பிருந்தாவன பிரதேச ஆராதனை இன்று புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் இடம்பெறும் மாலை 4.15 மணிக்கு எமது வைத்தியசாலையின் உபயமாகிய ஸ்ரீ சத்ய நாராயண பூஜை, திருவிளக்கு பூஜை என்பவற்றுடன் திருக்கதவு திறக்கப்பட்டு விசேட அபிஷேக ஆராதனை இடம்பெறும். ஆன்மீகத்தின் ஊடான வைத்தியம் சிறப்பானது என்பதால் சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் வைத்தி மாணவர்கள் உட்பட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : ஸ்ரீராக வேந்திர ஸ்வாமிகள் ஆலயம்
நல்லூர் கோயில் பின் வீதி, நல்லூர்

வைத்தியர் ஜெ. ஜெயலன்
வைத்தியர் ச. ஜெயலன்
வைத்தியர் க. ஒ. இராஜரட்ணம்
ஆசிரியை திருமதி ப. ஜெயசோதி
(21201)(8-14-6)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் விஜயகுமார்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஜயகுமார் நேற்றுமுன்தினம் (30.07.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்

(21209)(8-14)

தகவல்:
குடும்பத்தினர்

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

"உள்ளத்தில்
உறைந்திருக்கும்
நினைவுகளோடு...
உறவுகள் கூடி
வணங்குகின்றோம்."



அமரர்
### திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

–குடும்பத்தினர்–

## அம்மா உமக்கெம் அஞ்சலிகள்



### ஸ்ரீமதி- வேதநாயகி அம்மா நகுலேஸ்வரக்குருக்கள்

மாவை மண்ணின் வேராகி
மகிழ் நகுலேச்சரத் தொளியாகி
தேவையறிந்து பெருமானின்
திருவடி தொழுத பேறாலே
அவன் பணியொன்றே நினைவாகி
அகமே குளிர அவனாடல்
ஆவலுறவே கண்கண்ட
பேறே பெருமான் திருவடியில்
உம்மைச் சேர்த்த தோவம்மா
உங்கள் பணியால் அருங்கோயில்
செம்மை உற்ற நிலைகண்டோ?
செஞ்சடையோன் நகுலேஸ்வரரும்
வெம்மை தீர்க்கும் விதமாக
இன்சொல் ஆடும் நிலைகண்டும்
உம்மை அழைக்க மறைந்தீரோ?
உம்மடி பணிந்தே அஞ்சலித்தோம்

மாவை ஆதினமும்
மகேஸ்வர பூசைத் தொண்டர்
சபையினரும்

(சி/2046) (15-14)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி கந்தப்பிள்ளை



சிவகாந்தா வீதி, அம்மன் கோயிலடி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், ஈஞ்சடி உடுவில் தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி கந்தப்பிள்ளை நேற்று (31.07.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பெரியபிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற கந்தப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், ராதாகிருஷ்ணன், ராமகிருஷ்ணன், ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத்தாயும், ஜெயக்குமாரி, சுஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், காயத்திரி, தருண், தர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2012) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நிரந்தர முகவரி:
சிவகாந்தா வீதி, அம்மன் கோயிலடி,
தையிட்டி

(21208)(8-14)

தற்காலிக முகவரி:
ஈஞ்சடி
உடுவில், தெற்கு
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்



Special offer 25%

CIMA, சாதனைச்சித்திகள் MCS இல்! F.M(67%), F.O(80%), P.O(70%),E.O(66%)

CIMA-Certificate/Operational/Management/Strategic levels- 1" Wednesday(Poya) August 10.00 A.M

324,Palaly road,Parameswara Junction, Jaffna T.P 772395895

(சி/2024)

Supported by UNDP/JRRP



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தட களப் போட்டியில் வெற்றி பெற்ற கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவ, மாணவிகள் கல்லூரி அதிபர், பிரதி அதிபர் பொறுப்பாசிரியர்களுடன். (த-23)

## பாஷையூர் சென்.அன்ரனிஸ் உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒகஸ்ட் 1

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்திய லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.



இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பாஷையூர் சென் .அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 2012 ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை தன தாக்கிக்கொண்டது . (ங-23)


### மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிளுக்கு

# யாழ்.மண்ணில் முதல் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒகஸ்ட் 1

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் அணிக்கும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணிக்கும் இடையில் இரண்டு 20/20 கிரிக்கெட் போட்டிகள் கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.






சனிக்கிழமை காலை நடைபெற்ற முதலாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ .அணி சார்பாக அதிகபட்ச ஓட்டமாக நிலயனன் 19 பந்துகளில் 41 ஓட்டங்களை அணிக்கு பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக சுழற்பந்து வீச்சாளர் அமல் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குதுத்டுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் 16.4பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஸ்டார் ஈகிள் அணி சார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கபில் ஆட்டமிழக்காமல் 55பந்துகளில் 74ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி சார்பாக நிலயனன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பிற்பகல் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி சார்பாக அதிகபட்ச ஓட்டமாக அனோஜன் 29 பந்துகளில் 50 ஓட்டங்களை அணிக்கு பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக மீண்டும் சுழற்பந்து வீச்சாளர் அமல் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 17ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் 16.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கபில் அதிரடியாக 9பந்துகளில் 26ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி அனோஜன் 2.4பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினார்.

இதன்மூலம் 2:0 எனும் விகிதத்தில் மன்னார் பெரிய கடை ஸ்டார் ஈகிள் அணி தொடரை கைப்பற்றி யாழ். மண்ணில் மன்னார் மாவட்டக் கழகம் சார்பாக முதலாவது வெற்றியை பதிவுசெய்தது. இந்தப் போட்டியில் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் ஸ்டார் ஈகிள் அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். சிறப்பாக ஆடிய ஸ்டார் ஈகிள் அணியின் வீரர் கபில் தொடர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார் (ங-23)

## நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி விஜிதன் கிண்ணத்தை வென்றது

யாழ்ப்பாணம் ஒகஸ்ட் 1

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் பூநகரி நண்பர்கள் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட கழகத்தின் ஸ்தாபகர் விஜிதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 18 அணிகள் பங்கு கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியின்இறுதியாட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

எனினும் இரணைமாநகர் அணியியை சுலபமாக வீழ்த்திய நாச்சிக்குடா சென். மேரிஸ்விளையாட்டுக்கழகம் 3 கோல்களை அடித்து வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

**6 கோல்களை அடித்து வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.**

இந்தச் சுற்றுப்போட்டியில் சிறந்த வீரராக இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கொலின்சும், சிறந்த கோல் காப்பாளராக நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜோன்மேரி மைக்கலும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோய் பியசீலன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், பூநகரி பிரதேச வைத்திய அதிகாரி மதிவண்ணன், பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சிறீஸ் கந்தராசா ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ங-23)

## மகாஜன மாணவிகள் நால்வர் தேசிய கரப்பந்தாட்ட அணியில்



பா.கலாஜினி



ச.தர்சினி



பா.புகழரசி



பா.தமிழரசி

இலங்கையின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய கரப்பந்தாட்டப் பெண்கள் அணியின் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகளான பா.கலாஜினி, ச.தர்சிகா, பா.தமிழரசி, பா.புகழரசி ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் நால்வரும் தேசியக் கரப்பந்தாட்ட அணியின் 30 வீராங்கனைகளுக்குள் அடங்குகின்றனர் இவர்கள் நால்வரும் பாடசாலை, கழக அணிகளில் அங்கம் வகித்து மாகாண மட்டம், தேசிய மட்டப் போட்டிகளில் திறமைகளை வெளிக்காட்டி அவர்களால் புகழரசி 19 வயதுப் பிரிவு தேசிய மட்டக் கரப்பந்தாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற 15 ஆவது ஆசிய யூனியன் கரப்பந்தாட்டப்போட்டியில் இலங்கை அணிசார்பாகபங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பித்தக்கது. (ங-23)

## இலங்கை வீரர் வெற்றி

உலக தரப்படுத்தலில் எட்டாம் இடத்திலுள்ள தாஹோ ஹேன்ஸியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் முதலாவது சுற்றுப் போட்டியில் இலங்கைக் குழுத் தலைவர் நிலுக கருணாரத்ன தோல்வியடைய செய்துள்ளார்.

பட்மின்ரன் போட்டியின் முதற் சுற்றில் 21:16 மற்றும் 21:18 என்ற வித்தியாசத்தில் ஜப்பானிய வீரரை, கருணாரத்ன தோல்வியடையச் செய்துள்ளார். (5)

## 15 வயதில் தங்கம்

லண்டன் ஒலிம்பிக் நீச்சல் போட்டியின் 'பிரெஸ்ட்ஸ்டோர்க்' பிரிவில் 15 வயதான லித்வானிய நாட்டு வீராங்கனை தங்கம் வென்று சாதனை படைத்தார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் நீச்சல் போட்டியின் 100 மீற்றர் 'பிரெஸ்ட்ஸ்டோர்க்' மகளிர் பிரிவு போட்டி நடைபெற்றது.

இதில் லித்வானிய நாட்டு வீராங்கனையான ருட்டா மெலியுட்டி, அமெரிக்க வீராங்கனையான ரிபெக்கா சோனியை விட 0.08 செக்கன் முன்னதாக வந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

இந்த தங்கப்பதக்கமே லித்வானிய நாடு ஒலிம்பிக்கில் வென்ற முதல் தங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக வந்த சோனி வெள்ளிப்பதக்கத்தையும், மூன்றாவதாக வந்த ஜப்பானின் சட்டோமி வெண்கலப்பதக்கத்தை வென்றனர்.

தங்கம் வென்ற மெலியுட்டி பிரிட்டனில் கடந்த 3 ஆண்டுகளாக தங்கியிருந்து பயிற்சி எடுத்து வந்துள்ளார். வெற்றி குறித்து அவர் கூறுகையில், என்னால் இதை நம்பவேமுடியவில்லை எனக்கு கிடைத்த பெரிய விருதாகும் என்றார். (5)



## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

31.07.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 9 | 5 | 3 | 17 |
| அமெரிக்கா | 6 | 7 | 5 | 18 |
| பிரான்ஸ | 3 | 0 | 1 | 4 |
| தென.கொரியா | 3 | [illegible] | 3 | 6 |
| இத்தால | 2 | 4 | 2 | 8 |
| வட.கொரியா | 2 | 2 | 2 | 6 |
| ஜேர்மனி | 2 | 1 | 1 | 4 |
| ரஷயா | 2 | 0 | 3 | 5 |
| கஜகஸ்தான் | 2 | 0 | 1 | 3 |
| யப்பான் | 1 | 4 | 6 | 11 |

## ஒலிம்பிக் சுடர் அணைந்தது



லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான ஆரம்ப விழா கடந்த 27 ஆம் திகதி கோலாகலமாக நடந்தது. வண்ணமயமான கலைநிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள் என்று ஒலிம்பிக் மைதானம் களை கட்டியது.

ஆரம்பவிழா நிகழ்ச்சிகளை பிரபல ஹொலிவுட் இயக்குனர் டேனி பாய்ல் வடிவமைத்திருந்தார். உலக அளவில் ரசிகர்களை பிரமிக்க வைத்த தொடக்க விழாவுக்குப் பின்பு, தடகள போட்டிகளுக்காக மைதானத்தை தயார் செய்யும் பணிகள் நடந்து வருகின்

இதன் ஒரு பகுதியாக ஒலிம்பிக் சுடர் விளக்கு மைதானத்தின் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டது. இதை யொட்டி, சுடர் தற்காலிகமாக அணைக்கப்பட்டு கிரேன்களின் உதவியுடன் தெற்கு முனைக்கு நகர்த்தப்பட்டது.

சுடர்விளக்கின் கொப்பரை, 8.5 மீற்றர் உயரம் கொண்ட உருக்கு குழாய்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், போட்டியில் பங்கேற்கும் நாடுகளை குறிக்கும் வகையில் இதில் 204 குழாய்களும் அவை ஒவ்வொன்றிலும் ஒரு நாட்டின் பெயரும் பொறிக்கப் பட்டுள்ளது. இந்தக் குழாய்களின் முனையில் தாமிரத்தாலான இதழ்களும் இடம் பெற்றுள்ளன.

(5)




## சமனானது சாதனை

லண்டன் ஒலிம்பிக் பளுதூக்கும் பிரிவு போட்டியில் வட கொரிய வீரர் ஒம் யான் ஷோல் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் பளுதூக்கும் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் ஆண்களுக்கான 56 கிலோ எடைப் பிரிவில் வடகொரிய வீரரான ஓம் யான் ஷோல் மொத்தமாக 293 கிலோ எடையைத் தூக்கி ஒலிம்பிக் சாதனை படைத்துள்ளார். இது அவரது உடல் எடையை விட மூன்று மடங்கு அதிகம்.

மிகவும் ஆச்சரியம் அளிக்கும் வகையில் ஒலிம்பிக் சாதனை படைத்தது மட்டுமல்லாமல், இந்தப் பிரிவுக்கான உலக சாதனையையும் அவர் சமன் செய்துள்ளார்.

உலகத் தரவரிசையில் இரண்டாம் நிலையில் 'பி' பிரிவில் இருக்கும் ஒரு வீரர் 'கிளீன் அண்ட் ஜெர்க்கில்' 168 கிலோ எடையும், 'ஸ்னாட்ஸ்' பிரிவில் 125 கிலோ எடையையும் தூக்கினார்.

உலக நடப்பு சாம்பியனான வூ ஜிங் பாவே இந்தப் போட்டியில் வெல்வார் என்றும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் 289 கிலோ மட்டுமே தூக்கிய அவரால் வெள்ளிப் பதக்கமே பெற முடிந்தது.


### ஜூடோவிலும் ஒரு தங்கம்

வடகொரிய அணி மகளிருக்கான ஜூடோப் போட்டியிலும் ஒரு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது. 52 கிலோ எடைப் பிரிவில் அந்த நாட்டின் கும் ஏ அன், க்யூபாவின் யேனர் அகோஸ்டாவை வென்றார்.

நடைபெற்று வரும் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் வடகொரியா பெற்ற முதல் தங்கப் பதக்கமும் இதுவே.

2008 ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் கும் ஏ அன் இதே எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். அதே போல அகோஸ்டாவும் வெள்ளி பதக்கம் பெற்றிருந்தார், ஆனால் அப்போது அவர் 48 கிலோ எடைப் பிரிவில் பங்கு பெற்றார். (5)

## ஒலிம்பிக் பதிவுகள் சில...












## அகரம்
கல்வி நிலையம்

**மூன்றாந் தவணைக்கான கற்றல் கற்பித்தற் செயலொழுங்குகள் ஆரம்பம்**

**மல்லாகம்**
தரம் 09, 10, 11 க்கான வகுப்புக்கள் இன்று மாலை 3.00க்கும்
தரம் 06, 07, 08க்கான வகுப்புக்கள் சனிக்கிழமை (04.08.2012) காலை 7.00க்கும்

**கொக்குவில்**
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் யாவும் சனிக்கிழமை (04.08.2012) அன்று

ஆரம்பமாகின்றன.

"அகரம் குணதிசையின் ஒளிக்கீற்று"



## அதிக வருமானத்தை பெற்றுதரும் ஆரம்ப கற்கை நெறிகள்

Certificate in Travel Management
Certificate in Ticketing & Travels and Tourism
Certificate in Media & Tourism

யாழ் நகரில் தமிழ் மொழியில்

கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

60 மணித்தியால கற்கை நெறிகள்.

மேலதிக கற்கை நெறிகளை கற்க விரும்புவோர் இந்தியா, ... போன்ற நாடுகளில் கற்கையை தொடர முடியும், வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தகைமை: O/L 6 பாடசித்தியடைந்தவர்கள்.

உங்களுடைய சுயவிபரக்கோவையும் புகைப்படப் பிரதியையும் கீழ் வரும் முகவரிக்கு 10.08.2012க்கு முன் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல 4384
மே.பா உதயன்
361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதினால் பதிவுகளுக்கு முந்துங்கள்

(சி/2041)




# தொடர் இந்தியா வசம்

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்திய அணி விளையாடி வருகின்றது. 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 2 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ள நிலையில் நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் ஆர்.பிரேமதாசா மைதானத்தில் இலங்கை அணி களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. டில்ஷான், தரங்க ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கிய போதும் பின்வரிசை வீரர்கள் உரிய முறையில் சிறப்பாக ஆடாமையால் 50 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 251 ஓட்டங்களை மாத்திரம் இலங்கை அணி பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கையின் முன்வரிசை வீரர்களான தரங்க 51, டில்ஷான் 42, திரிமன்னே 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பின்வரிசையில் மலிங்க, ஹேரத் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்துக் கொடுக்கவே இலங்கை அணி 250 ஓட்டங்களை தாண்டியது. இந்திய அணியின் பந்து வீச்சில் பகுதி நேரப் பந்து வீச்சளராகக் களமிறங்கிய மனோஜ் திவாரி 61 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், அஸ்வின் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே மலிங்க அதிர்ச்சி கொடுத்தார். கம்பீர் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். தொடர்ந்து சேவாக் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். ஹோக்லி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார். சேவாக் 29 பந்துகளில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ரோகித் சர்மா 4, திவாரி 21 ஓட்டங்களுடன் வெளியேறினர். அதன் பின்னர் ஹோக்லி, ரெய்னா இணைந்து சிறப்பாக ஓட்டங்களைக் குவித்தனர். இறுதியில் விராட்ஹோக்லி சதம் கடந்து 128 ஓட்டங்களையும், ரெய்னா அரைச் சதம் கடந்து 58 ஓட்டங்களையும் விளாசி இந்திய அணியை 42.2 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடையச் செய்தனர். பந்து வீச்சில் மலிங்க, மத்தியூஸ், மெண்டிஸ், பிரதீப் தலா ஒரு இலக்குகளை வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் தொடர் இந்திய வசமானது. (16-5)

ஆட்டநாயகனாக சதம் கடந்த விராட்ஹோக்லி தெரிவு செய்யப்பட்டார்.


**9 Diploma Course fee Free**
(ஏதாவது ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு)
Multimedia, Hardware, Networking
Ms office, Web Design, DTP
English, Singalam, Accounting
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
ஆரம்பத்தில் இருந்து கற்கலாம் பூரண அறிவிற்கான உத்தரவாதம்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
Duration 2 Month only
243, Adiyapatham Road, Kalviyankadu



## பணிநிலை வெற்றிடம்

**1) கணக்குப் பதிவாளர்- பெண்கள்**
(கணினி அறிவு இருத்தல் வேண்டும், முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

**2) விற்பனையாளர் - ஆண்கள்**
(மின்சாரப் பொருள்கள் தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

30.07.2012 - 02.08.2012 வரை முற்பகல் 10.00 -12.00 மணிக்குள் நேரில் சமுகம் தரவும்.

**செல்வா எலக்ரிக்கல்ஸ்**
இல.21, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
தொ.பே.இல: 0777642771
(21104) (6,7,10)



**கருத்தரங்கு**
இந்து நாகரிகம்
By: S.ஜெயக்குமார்
காலம்
03, 04/08/2012
வெள்ளி, சனி 9 am
வெளி மாணவரும் பங்குபற்றலாம்.
(22085)(5-6-7)
நுனிவேர்சல் கந்தர்மடம்




**ஸ்ரீ[illegible] படித்த மகளிர் திட்டம் 'துர்க்காபுரம்'**
**ஸ்ரீஞான துர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம்**

அலங்கார உற்சவம் ஆனது ஆடிமாதம் 9ஆம் நாள் (24.07.2012) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இன்று (01.08.2012) புதன்கிழமை 9ஆம் நாள் திருவிழாவாகிய தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற இருக்கிறது. விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட் கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறிநின்று துர்க்கா தேவியுடன் சேர்ந்து வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். எனவே அம்பிகையின் பக்த அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு எல்லாம் வல்ல ஞான துர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினை தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

'இறைபணியே இன்பப் பணி'

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு.சி. நவரத்தினம் ஐயா.

**அநுசரணை**

றூபா பன்முக வர்த்தகர்
(சகோதரர்கள்)
104ஏ, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீவிக்கினேஸ்வரா களஞ்சியம்
(சகோதரர்கள்)
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/2009)(5-6-7)


**A/L 2013**
கணித, விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு
முழு இரசாயனவியல் அலகுகளை ஒரே வேளையில் கற்பதற்கான
**விசேட பிரிவு**
By: அன்பு
★ 25 கருத்தரங்கு
★ கடந்த கால வினாக்கள்
★ பாடக்குறிப்புகள்
★ மாதிரி வினாக்கள்
★ ஆங்கில மொழிமூல மாணவர்க்கு தனிப்பிரிவு
★ 2 இடத்தெரிவு

**CHEMISTRY CENTRE**
1) 33 அரசடி வீதி, (ஓட்டுமடம் சந்தி அருகில்) தொடர்பு: 077 903 7351
2) கொக்குவில், மஞ்சவனப்பதி வடக்கு வீதியில்.

A/L 2014 மாணவர்கள் பொருத்தமான அலகுகளில் இணையலாம்

இவ்வார ஆரம்பம்
1) ORGANIC
2) INORGANIC
3) GENERAL
4) BASIC
(21166)(5-6-7)
இவ்வாரத்துடன் அனுமதி நிறுத்தப்படும்



திருமணம் முடித்து நிரந்தர விசாவில் London செல்பவர்களுக்கு பிரித்தானிய தூதரகத்தினால் கோரப்படும் A-1 exam தற்பொழுது எமது கல்வி நிறுவனத்திலேயே நடத்தப்படவிருக்கின்றது.

City and Guilds இனால் வழங்கப்படும் A-1 பரீட்சைக்கான புதிய வகுப்புகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. தூதரகப் பரீட்சைகளுக்கான German (டொச்) Netherland (டச்), பிரஞ்ச், இத்தாலியன் வகுப்புகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

**Vivekananda Academy**
221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel- 0212220393, 0213216928, 0774842464
(சி/2028) (2,6,7)



தகவல் தொழினுட்பமாணி பட்டக்கற்கை
BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT
**O/L தகைமையுடனும் நீங்கள் கணினிப் பட்டதாரியாகுங்கள்**
Registration now open....
Call Us: 0718474239 , 0776577359
10 வருடங்களாக நாம் உங்களுடன் .....
MIS Open source college
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m



## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மன உளைச்சலா ?
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)



## ஆஸ்திரேலியாவுக்கு குடும்பமாக (சட்டரீதியாக) செல்ல அரைவாசிப்பணம் போதுமானது

சர்வதேச விசா ஆலோசனைக் கூட்டாளிகளுடன் நாம் இணைந்தமையால் இது சாத்தியமாயிற்று.
இன்னும் என்ன தாமதம்! 54 வயதுக்குட்பட்டவரா நீங்கள்! விரைந்து வாருங்கள்! பிரகுதியை நேரில் விலாவாரியாகப் பேசிக்கொள்வோமா.
**திசைகாட்டி பிறைவேற் லிமிடெட்**
முன்மாதிரியான விசா ஆலோசனை விற்பனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 2219016


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மாறிய
எதிரியையும்
விசுவாசமுள்ள
வனாகக்
கருதக்கூடாது.
-பஞ்ச தந்திரம்-

# புதன் பொய்கை A

உதயன் 01 ஓகஸ்ட் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# நல்லூர் முருகனுக்கு ஒரு மடல்



■ துன்னாலைச் செல்வம்

நல்லூர் முருகா! நாங்கள் மூன்று தசாப்த போர் செய்துவிட்டு களைப்படைந்திருக்கிறோம். உழைத்த உழைப்பு வீணாகிப் போய் விடுமோ என்ற அச்சத்தில் ஒவ்வொரு நாளையும் கழித்து வருகின்றோம். இதற்குள் எமது பிரதேசமெல்லாம் படைகளை அகற்ற முடியாமல் இருப்பதால் அச்ச உணர்வுடனேயே நாங்கள் வாழ்கிறோம். எமது உரிமைக்கான பேச்சுக்களில் ஒரு முன்னேற்றமும் ஏற்பட வழியில்லாமல் நாங்கள் நடைப்பிணமாகி நிற்கிறோம். தமிழர்களே தமிழர்களுக்கு எதிரியான மண்ணில்தான் நாங்கள் வாழ்கிறோம். மாற்றான் இனத்துக்கு துணைபோகும் ஈனப் பிறப்புக்களையும் இந்த மண் பெற்றெடுத்த அவலம் நிறைந்துள்ளது.

இன்றும் தமிழர்களுக்கான விடுதலை கேள்விக்குறியாகவே இருக்கிறது. முள்ளிவாய்க்கால் கடைசிப்போரில் எமது தமிழ் வீரம், பண்பாடு, கலாசாரம், அனைத்தையும் இழந்து நிற்கிறோம். எங்கள் மீது ஏறி எவர் எவரெல்லாமோ சவாரி செய்கிறார்கள். கேட்பதற்கு நாதியற்று இருக்கிறோம். உன் வம்சம் அல்லவா! உனது துடிப்பும், வீரமும் எம்மிடம் இருக்குமல்லவா! இப்பொழுது அவை எல்லாம் · எங்கே காணாமற் போய் விட்டது. வீரனாக அவதரித்த உன்னை இன்று கோழையாக அலங்கரிக்கிறார்கள். சிவப்பு உடையும் சிவப்பு தோளும் உனது மார்பில் ஒட்டிக்கொள்ளும் காலங்களில் பழந்தமிழர்கள் விடுதலை கண்டார்கள். இப்பொழுது பச்சை சாத்தி சாந்தப்படுத்துகிறார்கள். .

முருகா! வேலோடு நீ இருப்பதுதான் அழகு. அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வினை விடுவித்த மாவீரன் நீ. உனது வாசலில் வந்து அரோகரா கோஷம் போடும் போதும் வீர உணர்வே எம்மில் பிறக்கவேண்டும். ஆனால் இப்பொழுது அரோகரா சொல்லுபவர்கள் வீரத்தை ஒளித்து வைத்துவிட்டார்கள்.

தமிழர்களிடையே மீண்டும் வீரத்தை ஊட்டு. உனது வேலின் மகிமையை பரப்பு. அடிமையில் இருக்கும் தமிழனை விடுவி. காலம் காலமாகப் பழம்தமிழ் குடித்து வளர்ந்த பரம்பரை நாம்.

சங்ககாலத்தில் தமிழர் போர் மரபுகள் அறப்போர் முறையைச் சார்ந்ததே. அகம், புறம் என வாழ்வை இரண்டாகப் பிரித்து போர் முறைகளுக்கும் இலக்கணம்



வகுத்து வாழ்ந்தனர். அவர்களது போர்முறை நேர்மையாக இருந்தது.

உனது காலம் காலை சூரியன் உதயத்தின்போது முரசறைந்து போர் தொடங்குவர். சூரியன் மறையும் மட்டுமே போர் நடைபெறும். பின் முரசறைந்து போரை நிறுத்துவர். எத்தனை நாள் போராயினும் இதுவே வழக்கானது. பகைவர் ஆயுதத்தை இழந்தபோதும், போரில் தோற்றோடும் போதும் அவர் மேல் படை செலுத்தாத அறநெறி இருந்தது. அவர்களுக்குத் தகுந்த வாய்ப்பளிக்க மறுநாள் போர் செய்தனர். ஓடி ஒளிந்தாரைக் கொல்லாமல் அவர்கள் வரும் வரை காத்திருந்து போர் புரியும் வீரம் இருந்தது. இறந்தோருக்கு இரங்கும் குணம் இருந்தது. இன்று அது இல்லையே.

முள்ளிவாய்க்கால் அகோரம் எந்த புறநானூற்றிலும் இடம்பெறாத தமிழர்கள் மீதான போரை தொடுத்தது சிங்கள அரசு. எத்தனை போராளிகளை இரக்கமின்றி கொன்று குவித்தது. உனது வரலாற்றிலேயே இல்லாத போர் வரைமுறை மீறி முள்ளிவாய்க்கால் இரத்தக்காடானது. நீ எங்கே இருந்தாய்?

நீ இந்து சமயத்தினரின் உருவக் கடவுளுள் ஒருவன். அன்பின் ஐந்திணையில் தலையாயதாகிய குறிஞ்சி நிலத்தின் கடவுள் நீ. சரவணன், கார்த்திகேயன் குமரன், கந்தன், வடிவேலன், சுப்பிரமணியன், சுவாமிநாதன், செந்தில்நாதன், ஆறுமுகன், சண்முகன் போன்ற பல தமிழ் பெயர்கள் உடையவன் நீ. உன்னைத் தமிழ்க் கடவுள் என்றும் சொல்கிறார்கள். நீ குடிகொண்டிருக்கும் நல்லூர் கோயிலின் திருவிழா இன்று. அந்த ஊரே உன் அருள்பெற வேண்டி நிற்கிறது. தமிழர்கள் படும் துன்பங்களை பார்த்துக்கொண்டிருக்கும் முருகா.....! அந்த மக்களின் துயர துன்பங்களை நீக்கிவிடுவாயா. பாட்டன் பாட்டி காலத்து முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் உனது புதுமை எல்லாம் கண்டுவியந்து கொண்டனர். இருந்தும் அதனையே சொல்லி பூரிப்படைகின்றனர். வேலுக்கு பிள்ளை நீ. ஆனால் வேலுப்பிள்ளைக்கு ஒரு பிள்ளையை கொடுத்து உனது புகழை நிலைநாட்டினாயே இப்போது அந்த வீரம் எங்கே? அன்பையும் பண்பையும் வீரத்தையும் அல்லவா உன்னிடம் கண்டனர் தமிழர்கள்.

அன்று நீ பண்டைத் தமிழர்களை அடிமை யுகத்தில் இருந்து மீட்பதற்காக வேல் எடுத்ததாக சரித்திரம் சொல்கிறது. இன்று நீ வேலுப்பிள்ளைக்கு ஒரு பிள்ளையைக் கொடுத்து துப்பாக்கி ஏந்திப் போராடிய சரித்திரம் சொல்கிறது. வீரப் பரம்பரைத் தமிழர்கள் என்ற உனது காலத்தில் இருந்து எமது காலம் வரை கண்டோமே! இன்று அந்த வீரம் எங்கே சென்று விட்டது? நல்லூர் முருகா உன்னை ஆடம்பர கடவுளாக எல்லோ பார்க்கிறார்கள். காளையர்கள் உன்னைத் தமது தோளில் தூக்குவதற்காக அடம்பிடிக்கிறார்கள். பெண்கள் உனது அடி வருடுவதற்காக அடி எடுக்கிறார்கள். தூக்குக்காவடி, கற்பூரச் சட்டி என்றெல்லாம் நேர்த்தி எடுக்கிறார்கள். உனது கண்ணில் படவில்லையா?

இதற்கிடையில் போரின் காரணமாக இடம்பெயர்ந்து வெளிநாடு சென்றவர்கள். எத்தனையோ வருடம் கழித்து உன்னைப் பார்க்க வருகிறார்கள். அவர்களை நீ பார்த்தாயா? வள்ளி, தெய்வானை அழகாகச் சேலை உடுத்தி வரும் கண்கொள்ளாக் காட்சியைத்தான் பார்ப்பதற்கு பெண்கள் ஜீன்சுடன் வருகிறார்கள்.

நல்லூர் வீதி பொழுதுபோக்கு இடமாக மாறியுள்ளது. திருவிழா ஆரம்பிப்தற்கு முன்னர்தான் உனது வீதியை காப்பெற் வீதியாக மாற்றியுள்ளார்கள். உனது இடத்திலேயே களவுகள் போகின்றன. புராணங்களில் உன்னை சிவனின் மகனாக சித்தரிக்கின்றனர். புராணங்களின் படி சிவனிடமிருந்து புறப்பட்ட தீப்பொறி சரவணப்பொய்கையில் ஆறுபகுதிகளாக விழுந்தது. இது ஆறு குழந்தைகளாக உருப்பெற்றது.

கார்த்திகைப்பெண்கள் அறுவர் இந்த ஆறு குழந்தைகளை வளர்த்தனர். பின்னர் ஒரு கார்த்திகைத் திருநாளில் பார்வதி இந்த ஆறு குழந்தைகளையும் இணைத்தார். ஆறுமுகங்களையும் பெற்ற உன்னை ஆறுமுகன் என்று அழைத்தார்கள். சிவனைப் போலவே முகத்துக்கு மூன்று கண்கள் என ஆறுமுகங்களுக்கும் சேர்த்து மொத்தம் பதினெட்டுக் கண்களை உடையவன் நீ. கார்த்திகை மாத கார்த்திகை திருநாள் உனது விசேட தினமாகக் கொண்டாடப்படுகிறது.

நீ வழிகாட்டிச் சென்ற அந்த கார்த்திகை மாதம்தான் தமிழர்களின் வீரம் பறைசாற்றிய வீர மறவர்களின் புனிதநாளும். இன்று அந்த வீரத் தமிழ் மறவர்களின் இருப்பிடங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. புனிதமான அந்த இடம் மாற்றான் கால் பட்டு அசிங்கப்பட்டு நிற்கிறது. நீ பார்த்தாயா? எத்தனை கார்த்திகையில் தீபமேற்றினோம். நீ வழிவிட்டுச் சென்ற கார்த்திகைத் திருநாள் அல்லவா. அந்த தீபஒளி இன்று அணைந்து போயுள்ளது.

கனவுகளோடு வாழ்ந்த காலம் அது. என்னவெல்லாம் எங்கள் மனதில் புதிது புதிதாகத் தோன்றி மறையும் நாள்களில் வேறு என்னத்தை நினைத்தோம். இன்று கனவு கூட வருவது இல்லை. விடியல் தூரச்சென்று விட்டதாகத் தூக்கமின்றி தவிக்கிறோம்.

தமிழர்கள் நாதியற்ற இனமாக வாழ்கிறார்கள் பார்த்தாயா? சொந்த இடத்திலேயே அகதியாக இருக்கும் தமிழர்களின் வாழ்வில் எப்போது மீண்டும் ஒளிவீசும். நீ சூரபத்மனோடு போரிட்டு வென்று வெற்றிக்கொடியான சேவல் கொடியுடனும் பார்வதிதேவி அளித்த வேலுடனும் மயில் வாகனத்தில் அருள்பாலிக்கிறாய். உன்னுடன் போரிட்ட படை வீரர்கள் ஐயனார்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

இந்தப் பகுதியில் வாழ்ந்த அவர்களது வாரிசுகள் தமிழகத்தின் பல பகுதிக்கு குடிபெயர்ந்தனர் என்று கூறப்படுகிறது. அசுர இனத்தைச் சார்ந்தவர்களான தாரகா சூரனும், சூரபத்மனும் இறையருள் பெற்று தேவர்களை அடிமைப்படுத்தினர்.

வடக்கே தாரகா சூரனும், தெற்கே சூரபத்மனும் மக்களைக் கொடுமைப்படுத்தி ஆட்சி செய்தனர். தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க நீ தாரகா சூரனை வீழ்த்திவிட்டாய். தெற்கே சூரபத்மனை வீழ்த்த திருச்செந்தூருக்குப் போனாய். சூரபத்மனோடு ஐந்து நாள்கள் கடும் போர் செய்தாய்.


இந்தப் போரில் சூரபத்மனின் படையினரும் அவனது சகோதரர்களும் அழிந்தனர். போரின் ஆறாம் நாள் சூரபத்மன் மட்டும் தனியாக போருக்கு வந்தான். தனது சக்திகள் முழுவதையும் பயன்படுத்தி போர் செய்தான். ஆனால் உனது சக்திக்கு முன்னால் அவனால் எதுவும் செய்யமுடியவில்லை. அன்று இங்கு நியாயம் வென்றது.

ஆனால் இன்று இங்கு நியாயம் செத்துவிட்டது. முள்ளிவாய்க்காலில் தமிழர்களை சிங்களப்படைகள் கொன்று குவித்தன. தமிழர்கள் காப்பாற்ற எவரும் இன்றி துடியாய்த் துடித்து செத்துமடிந்தனர் தெரியாதா?

# உதவி செய்யும் நாய்

பிரிட்டனில் பெண் ஒருவர் நோயினால் பாதிக்கப்பட்டு எந்த வேலையினையும் செய்ய இயலாமல் காணப்படுகிறார். இந்த நிலையில், இவர் செல்லப் பிராணியாக நாயினை வளர்த்து வருகிறார். இந்த நாய் குறித்த பெண்ணின் நூறுக்கும் மேற்பட்ட கட்டளைகளை நிறைவேற்றுவது மட்டுமின்றி, அவருக்கு மிகுந்த பக்கபலமாகக் காணப்படுகிறது.






# திறமையை வெளிப்படுத்தும் சிறுமி



மூன்று வயதான சிறுமி, வீட்டுக் கதவில் ஏறி பார்ப்பவர்களை அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளார். இந்தச் சிறிய வயதில் தனது அபார திறமையாலும், அசைக்க முடியாத தன்னம்பிக்கையாலும் தனக்கென ஒரு ரசிகர் பட்டாளத்தையே உருவாக்கியுள்ளார்.



# இசைக்கருவிகளை காலினால் இசைக்கும் இளைஞன்



உடலில் குறைபாடு உடையவர்களுக்கு கடவுள் அதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஏதோ ஓர் ஆற்றலை மேலதிகமாகக் கொடுத்திருப்பார். இதனை நிரூபிக்கும் வகையில், இரண்டு கைகளையும் இழந்த இளைஞர் ஒருவர் தனது கால்களால் மிகவும் அற்புதமான முறையில் இசைக்கருவிகளை இசைத்து அசத்துகின்றார்.

# உடற்பயிற்சி செய்யும் பேருந்து




ஒலிம்பிக்போட்டிகளுக்காக பராகுவே நாட்டின் கலைஞர் ஒருவர் விசேட பேருந்து ஒன்றை உருவாக்கியுள்ளார். சிவப்பு நிறத்தில் இரு கைகளுடன் உருவாக்கப்பட்ட பேருந்து பார்வையாளர்களை அசத்துகின்றது. லண்டனின் செக் ஒலிம்பிக் தலைமையகத்துக்கு வெளியே மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள இந்தப் பேருந்து மனிதர்கள் செய்யும் உடற்பயிற்சியை இயந்திர உதவியுடன் செய்கின்றது.

# பாறைகளினால் கட்டப்பட்ட வீடு



போர்த்துக்கல்லில் பாறைகளினால் அமைக்கப்பட்ட விசித்திர வீடு காணப்படுகிறது. 1973 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த வீடு பிரபல்யமாகவும், சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்ததாகவும் காணப்படுகிறது.




# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

25

### செல்வாக்கு ரேகைகள் (தொடர்ச்சி)

2. சுக்கிரமேட்டில் ஆயுள் ரேகையை அடுத்து, அதற்குச் சமமாகச் செல்வது செவ்வாய் ரேகை எனப்படும். இது ஆயுள் ரேகைக்கு ஆதரவு அல்லது துணை ரேகை என்றும் சொல்லப்படும். இதுதான் செல்வாக்கு ரேகை. இது ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதாகும். ஆயுள் ரேகை குறிப்பிடும் நோய்களினின்றும் காப்பாற்றக்கூடியது.

இந்தச் செவ்வாயெனும் செல்வாக்கு ரேகை நண்பர்களின் ஆதரவைக் குறிக்காது. இந்தச் செவ்வாய் ரேகையும்



அபூர்வமாகையால், எல்லோருடைய கையிலும் இதனைக் காணமுடியாது. செவ்வாய் ரேகையினிடத்தில் இரண்டு அல்லது மூன்று துண்டு ரேகைகளும் ஆயுள் ரேகையைக் கலந்திருக்கும். இவை எவ்வளவுக்கு ஆயுள் ரேகையோடு நெருங்கிக் காணப்படுகிறதோ, அவ்வளவுக்கு ஆயுளுக்கு ஆதாரமாகும். இவைகள் மாதா, பிதா, சகோதரர்களைக் குறிக்குமென ஆராய்ச்சியாளர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் இது அனுபவத்துக்கு ஒத்து வரவில்லை. முதல் ரேகை தாயென்றும், இரண்டாவது ரேகை பிதா என்றும், இவையிரண்டும் நன்கு ஆழப்பதிந்திருக்குமென்றும் அவைகளையடுத்த ரேகைகள் சகோதரர்களைக் குறிக்குமென்றும் சொல்லுகின்றனர்.


குறுக்கிடாமல் நேர் நிற்கிற ரேகையாயின் செல்வாக்கு அதிகமாகும். நேர் நிற்கும் ரேகை எத்தனையிருப்பினும் அவ்வளவும் விசேஷ செல்வாக்கைக் குறிக்கும். இது மிகுந்த செல்வாக்கையும் கௌரவத்தையும் குறிப்பதாகும். நினைத்த காரியத்தை உடனே செய்து முடிக்க ஆற்றலுடையவர் என்பதையும் அறிவிக்கும்.




3. செல்வாக்கு ரேகை உற்பத்தியில் அகன்று பதிந்தும் பிறகு மெல்லியதாயுமிருந்தால், ஆரம்பத்தில் செல்வாக்கிருந்து பின் அது படிப்படியாய் குறைந்து போனதைக் குறிக்கும். ரேகை படர்ந்து மங்கிப் போய்விடுமானால், அதற்குப் பலன் இல்லை எனக் கொள்ளவேண்டும்.

4. செல்வாக்கு ரேகை உற்பத்தியிலும் இறுதியிலும் நன்கு பதிந்து மத்தியில் மெலிந்து மங்கலாயுமிருந்தால், ஆரம்பத்தில் நண்பர்கள்ஆதரவு அதிகமாயிருந்து மத்தியில் இல்லாமற்போய் பிறகு அது படிப்படியாய் வளர்ந்து அதிக சக்தியடைவதைக் குறிக்கும்.


5. ஆயுள்ரேகையை அடுத்து ஒரு சிறிய செல்வாக்கு ரேகை நட்சத்திரக் குறியுடன் முடியுமானால், இளமையில் தாய் அல்லது தந்தையை இழப்பதைக் குறிக்கும்.



6. செல்வாக்கு ரேகை ஆரம்பத்தில் மெல்லியதாய், பிறகு நன்கு அமைந்து, இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாய் மூன்று தொடர்ந்துள்ளதைப் படத்தில் காண்க. இது நண்பர்கள் ஒருவர் பின் ஒருவராய் உதவி புரிவதைக் குறிக்கும்.

7. ஆயுள்ரேகை குற்றம் நிறைந்துள்ளதாயிற்று. அதனருகில் செல்வாக்கான செவ்வாய் ரேகை அமைவதால் எவ்வளவு தான் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டாலும் பாதுகாக்கப்பட்டு வருவதைக் குறிக்கும். இதற்கு ஆதரவான அன்பர்கள் உதவி புரிவர். முன் அறிவித்ததுபோல் செல்வாக்குள்ள குணமே இங்கும் பொருந்தும்.

8. புத்தி ரேகை ஆரம்பத்தில் பின்னற்



பட்டு அந்த அளவுக்கு சுக்கிர மேட்டில் செல்வாக்கு ரேகை படத்திலுள்ளது போல் உற்பத்தி முதலில் நன்கு அமையப் பெற்றிருந்தால், இளமையில் பலவீனப்பட்ட மனோதர்மம் ஏற்பட்டிருப்பதால் அந்தக் கால அளவுவரை மிகுந்த செல்வாக்குள்ள ஆதரவளிக்கும் பந்துமித்திரர்கள் கூடியிருந்து தக்க உதவி புரிவார்கள்.

சுக்கிரமேட்டிலுள்ள செல்வாக்கு ரேகை மேல் நோக்கி ஆயுள் புத்தி ரேகைகளில் குறுக்கிட்டுச் சென்றிருந்தால் வாழ்க்கை முன்னேற்றத்துக்குத் தடையிருந்து வருவதைக் குறிக்கும். இரண்டு மூன்று செல்வாக்கு ரேகைகளைக் குறுக்கிட்டு மற்றோர் செல்வாக்கு ரேகை ஆயுள்ரேகையையடுத்து வந்திருக்குமாயின், புதிதாய் ஒருவர் வந்து சேர்ந்து உதவி புரிவதைக் குறிக்கும்.

**(தொடரும்)**

## பண்பாட்டைச் சீரழிக்கலாமா?

போர் காரணமாக எமது சமூகம் பல் வேறுபட்ட இழப்புக்களை சந்தித்தது. உயிருக்கு உத்தரவாதம் இல்லாததன் காரணமாக பலர் புலம்பெயர்ந்து நாட்டை விட்டுத் தப்பியோடியிருந்தனர். வெளிநாடுகளில் நீண்டகாலம் வாழ்ந்த அவர்கள் தற்போது மெல்ல மெல்ல தமது உறவுகளைப் பார்ப்பதற்குத் தாயகம் திரும்புகின்றனர்.

வெளிநாடுகளில் விடுமுறைக் காலம் என்பதால் எமது புலம் பெயர் உறவுகள் இங்கே படையெடுத்து வந்துள்ளனர். இங்குள்ள தமது தாய், தந்தையருடன் உறவாடவும், அவர்களுக்குத் தமது பேரன், பேர்த்திகளை பார்ப்பதற்கும் வாய்ப்பாக உள்ளது.

யாழ். நகரின் முக்கிய இடங்களில் வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்துள்ள எம்மவர்கள் உலாவருகின்றனர். தமது நினைவுகளை அவர்கள் மீட்டிப் பார்க்கின்றனர். இவையெல்லாம் ஒரு புறம் இருப்பினும், சில மனதை உறுத்து கின்ற விடயங்களும் நடக்கத்தான் செய்கின்றன.




தமிழ்ப் பாரம்பரியத்தை தமது அடுத்த சந்ததிக்கு கடத்துவதில் அவர்கள் தோல்வியடைந்து விட்டார்களா? என்பதே அது. வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இங்கேயும் புலம் பெயர் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் உடை அணிவதும், தாய் மொழியான தமிழை விடுத்து ஆங்கிலத்தில் உரையாடுவதையும் காண முடிகின்றது. அவ்வாறானதொரு நிலையில் அந்தப் பிள்ளைகளுக்கு இந்த மண் மீதான பற்றும், மொழி மீதான பற்றும் எதிர்காலத்தில் இல்லாத நிலையே தோன்றும். வெளிநாடுகளில்தான் அது அவசியம் என்ற நிலை இருப்பினும் இங்கேயும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று இல்லைத்தானே!.

நல்லூரான் திருவிழாவில், தமிழனின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் ஓரளவிலேனும் ஆடைகளை அணியாமல், பழனியாண்டவனுக்கே சவால் விடும் வகையில் ஆடைக் குறைப்புக்களுடன் உலாவரும் உறவுகளின் பிள்ளைகளை என்னவென்று சொல்வது?

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் ஈழத் தமிழனுக்காக புலம்பெயர் தேசத்தில் குரல் கொடுக்க இனி எவரும் இருக்க மாட்டார்கள்.

நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

தமிழர்களுடைய உரிமையைப் பேசி நீ பிழைப்பு நடத்துகிறாய் என்று சிலர் சொன்னாலும் பரவாயில்லை. ஏனெனில் சிங்கள அரசுக்கு வால் பிடித்து பிழைப்பவர்களை விட தமிழர் உரிமைகளைப் பேசி பிழைப்பவர்கள் மேல். அந்தப் பணியை உதயன் செய்வது பாராட்டத்தக்கது.

உண்மையில் உனது பணியை நீ ஒழுங்காகச் செய்யவில்லை என்றே நான் நினைக்கிறேன்.

உன்னைத் தூற்றும் சக்திகள் தமிழர் பிரச்சினைக்கு முகம் கொடுக்க திராணி அற்றவை. தமிழர் பிரச்சினைக்கு துணிந்து முகம் கொடுக்கும் உனது பணியை தொடர்ந்து செய்ய வேண்டும் இந்த வீணர்களின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி நீ அதை நிறுத்தினால் வரலாற்றுத் தவறு இழைப்பாய்.

உதயன்
இணுவில்

★ ★ ★

கால மாற்றத்துக்கு ஏற்ப உதயன் வர்ணங்களில் வரவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். பக்க வடிவமைப்புக்களில் மாற்றத்தைக் காட்டிய உதயன் வர்ணத்தில் வெளிவர மறுப்பது ஏன்? உன் வர்ண வரவை எதிர்பார்த்திருக்கின்றோம்.

இராசையா. தர்சன்
செம்மணி வீதி, நல்லூர்.

★ ★ ★

உதயனில் கூட்டமைப்பின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மட்டும் அதிக செய்திகள் வருகின்றன. ஏன் மற்றவர்களுடன் கோபமா?

செந்தில் குமார்,
புதுக்குடியிருப்பு

★ ★ ★

பரந்த வெளிப்பாட்டுடன்
சமூக விடுதலையில்
துடிப்பு ஒவ்வொன்றிலும்
உயிர்பெறும் சுவாசம் போல்
நீ வாழ்கிறாய்
நிகழ்வுகள்
உடல் பரிமாறும் இலக்கணம்
பகுப்பாய்வு
செய்யும் எண்ணங்கள்
தனியனாக நின்று
முதன்மைப்படுத்துகின்றாய்
அறிகின்ற பழமை
மாறுபடாமல் புதுப்பிக்கப்படும்
எண்ணக்கரு
அறிவின் எல்லைவரை
பல வடிவங்களாக
வெளிவருகின்றாய்
பகுதி பகுதியாக பிரிக்கும் தொகுப்பு
தெளிவாக அமைக்கும் கருத்துக்களும்
உனது கனம் அதிகமாகும்.

லோகிதாசன்
கொக்குவில்

# தொழிலிற்கான கல்வியா? கல்விக்கான தொழிலா?



ஆர்.கே.மேனன், ஆசிரியர்
யா/சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்

எமது கல்விக்கொள்கையினை உருவாக்குவதும், க்லைத்திட்ட வரையறைகளை பட்டியல்படுத்துவதும் சாதாரண நபர்களின் முயற்சியல்ல. மிகப் பெரிய கல்விமான்களின் ஒன்றிணைந்த செயற்பாடாகும்.

இதில் தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என பல கட்டமைப்புகளும் பல ஆவணிகளும் ஒன்றிணைந்து செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றன. இவர்களிடம் இன்று மாணவர்கள் சார்பில் விடுவிக்கப்படும் வினா நடைமுறையில் உள்ளது.

தொழிலிற்கான கல்வியா...?

கல்விக்கான தொழிலா..?

சற்று ஆழமாகவும் யதார்த்த பூர்வமாகவும் சிந்திக்க வேண்டிய வினா இது. கோட்பாடு ரீதியாக இதற்கு இலகுவாக விடையளிக்க முடியும். ஆனால் நடைமுறை ரீதியாக 'எது நடைபெறுகின்றது' என சிந்தித்துப் பார்க்கும்போது எமது கல்விக் கொள்கைகளிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் துறைசார் நிபுணத்துவ முக்கியத்திற்கேற்ப வேலைவாய்ப்புகளை வழங்குவதில் பல சிக்கல்கள் இருப்பது புலனாகின்றது.

அன்று தொட்டு இன்றுவரை இலங்கையானது அபிவிருத்தியடைந்து வரும் நாடாகவே இருந்து வருகின்றது. இதுபற்றி சிந்திக்க கல்விமான்கள், அரசியல்வாதிகள், மேலைத்தேய கல்வி முறைகள் பலவற்றை நடைமுறைப்படுத்தி பலதடவை பல சீர்திருத்தங்களையும் கொண்டு வந்தனர். இது வளப்பற்றாக்குறை, யதார்த்த பொருத்தப்பாடு காரணமாக தோல்வியில் முடிந்தது. இந்தத் தோல்விக்கான எதிர்வு கூறல் சிந்தனைகளை ஏன் இவர்கள் மனக்கண்முன் நிறுத்தி முன்வைப்புகளை மேற்கொள்ளவில்லை என்பது ஒரு துருவ வினாவாக இருக்க, மறுதுருவத்தில் பொய்ப்பிக்கப்பட்ட கருதுகோள்களை நிராகரித்து மீள் கருதுகோள்களை முன்வைத்துச் செயற்பட்டார்களா என்பதும் மற்றொரு வினாவாக உள்ளது.

ஒரு நாட்டின் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து முன்னேற்றங்களும் அந்த நாட்டின் கல்விமுறைமைகளிலேதான் தங்கியுள்ளது. வேலைவாய்ப்புக்கள் கல்வியியல் துறைசார் ரீதியாக வழங்கப்படாமை எமது நாட்டின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாகும். பல்கலைக்கழகங்களில் முடிக்கப்படும் கல்வித்துறை வேறு, பெறப்படும் தொழில் வாய்ப்புகள் வேறு என மனித வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. உதாரணமாக வர்த்தகத் துறையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று முகாமைத்துவ விசேட பட்டத்தைப் பெற்றவர்கள் ஆசிரியராக பொருத்தமற்ற பாடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனின் கல்விக்கான தொழில் கிடைக்கின்றதா?

தரம் 11 வரை, 11 வருடங்களை வீணடித்த ஒரு மாணவன் க.பொ.த சா/த சித்தி பெறவில்லை எனின் அவனது எதிர்காலத்தில் வீணடிக்கப்பட்ட அறிவியல் காலங்கள் எத்தனை? எத்தனை? யப்பானிய கல்விமுறையில் தரம் 7 பருவத்தில் கல்வித்துறையில் ஈடுபாடு இல்லாத மாணவர்களைத் தொழில்துறையில் ஈடுபடுத்துகின்ற முறை மேலோங்கி உள்ளது. எமது நாட்டில் இவ்வாறான உயர்கல்வி நிறுவனங்கள் இருந்தும் கூட அதற்கூடான நிரந்தர வேலை வாய்புக்கள் வழங்கும் அதிகாரங்கள் சமூகமயமாக்கப்படவில்லை. மாணவர்கள் பக்கம் நாம் சிந்திப்பது இல்லை. வெறுமனே புத்தகப்படிப்பினை மேற்கொள்ளாத மாணவர்களை பலவாறு நிராகரிக்கின்றோம். அவனிடம் எந்தவித ஆற்றலும் இல்லை எனும் முடிவிற்கு வர முனைகின்றோம். இந்தச் சிந்தனையுடன் அவனை வழிநடத்தும் போது அவனே தன்னிடம் எந்த ஆற்றலும் இல்லை என விகாரப்படும் மனோபாவம் எம்மால் உருப்பெறுகின்றது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் எமது கல்வி முறைமையே. பெற்றோரும் வேலைவாய்ப்பினைக் காரணம் காட்டி ஒருவழிப்பாதையினை மட்டுமே வலியுறுத்தி நிற்கின்றனர். இதனால் துறைசார் அறிவியல் சிந்தனைகள் நிராகரிக்கப்பட்டு ஒரு வழிப்பாதையில் பிள்ளைகளின் வாழ்வியல் வீணடிக்கப்படுகின்றது.

**இந்த நிலை மாற வேண்டும். திறமைக்கேற்ப தொழிற்கல்விகள் வழங்கப்பட வேண்டும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளின் சான்றிதழ்களின் ஊடாக மாத்திரம் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். வேறு அரசியல் சார்ந்த வழிகளால் வழங்கப்படும், தராதரமற்ற நியமனங்கள் நிறுத்தப்பட வேண்டும் பல்கலைக்கழங்களில் மேற்கொள்ளப்படும் துறைசார் ரீதியான நியமனங்கள் உறுதிப்படுத்தப் படவேண்டும். இல்லையேல் அபிவிருத்தி என்பது எந்த வகையிலும் ஏற்படாது. ஜனநாயகம் என்பது அர்த்தமற்றுப் போகும். மனித வளம் வீணடிக்கப்படும்.**

# இசையால் இடையூறு

இப்போது கோயில்களில் கொடியேறும் காலம் இது. குச்சொழுங்கை அம்மன் முதல் நல்லூர் முருகன் வரை எல்லாக் கடவுள்களும் பக்தர்கள் வெள்ளத்துக்குள் திக்குமுக்காடத் தொடங்கி உள்ளனர். இந்தத் திணறலை இன்னும் அதிகரிக்கச் செய்யும் முகமாக, தமது பக்தி வெள்ளத்தை கரைபுரண்டு ஓடச் செய்வதற்காக கோயில்களில் வழிபாட்டையும் தாண்டி மேலதிக நிகழ்வுகள் அமோகமாக இடம்பெறத் தொடங்கி விட்டன. ஆலயங்களில் மக்கள் பூசையைப் பார்க்கிறார்களோ இல்லையோ கோயில் ஓரமாக அமைக்கப்பட்டிருக்கும் மேடை மீது எப்போது நிகழ்ச்சி தொடங்கும் என்பதே அவர்களின் அங்கலாய்ப்பாக மாறிவிட்டது. அதிலும் இளவட்டங்கள் கோயிலுக்கு செல்ல மறந்து மேடைக்கு முன்னால் இடம்பிடிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

வெளிநாடுகளில் இப்போது விடுமுறைக் காலம் என்பதால் புலம்பெயர் தமிழர்கள் பலரும் சொந்த இடங்களுக்கு வந்திருக்கிறார்கள். வந்தவர்களில் சிலர் தம்முடைய செல்வாக்கை வெளிப்படுத்தும் களமாக கோயில்களையே பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அதனால் ஆலயங்களில் பூசை நடக்கிறதோ இல்லையோ கட்டாயம் திருவிழாவில் இசை நிகழ்வுகளையும், நடன நிகழ்வுகளையும் நடத்த வேண்டியது கட்டாயமாகி விட்டது.

அவசரஅவசரமாக பூசைகளை முடித்து, வசந்த மண்டபத்துக்குள் கடவுளின் விக்கிரகத்தை ஓடிச்சென்று வைத்துவிட்டு எல்லோரும் இசைக்குழுக்களின் ஒலிகளுக்குள்ளும், நடனக்குழுக்களின் அசைவுகளுக்குள்ளும் சிறைப்பட்டு விடுகிறார்கள். ஆலய வீதி என்பதால் பக்திப் பாடல்களை மட்டும்தான் இசைக் குழுக்கள் பாடவேண்டும் என்ற எழுதப்படாத நியதி ஒன்று ஒரு காலத்தில் இருந்தது. அதெல்லாம் மலையேறி வருடக் கணக்காகி விட்டது. இப்போது ஆலய வீதிகளில் ''ஆம்பிளைக்கும் பொம்பிளைக்கும் அவசரமும்'',

## கோணல் கோலங்கள்

''அஸ்கு லஸ் காக்கலும்'' நிரம்பி வழிகின்றன. அதைவிட சினிமாப் படங்களை விடவும் மிகவும் அருவருக்கத்தக்க அங்க அசைவுகளுடன் கூடிய நடனங்கள் என்ற பெயரில் அரங்கேற்றும் கூத்துகளுக்கும் குறைவிருப்பதில்லை.

தம்முடைய திருவிழாவுக்கு மற்றவர்களின் திருவிழாவைவிட அதிகமானோர் வரவேண்டும் என்பதற்காக உபயகாரர்கள் இத்தகைய நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதாக ஒரு காரணம் சொல்லப்படுகின்றது. கூட்டத்தை கூட்டுவதற்காகவும் வியாபாரத்தைப் பெருக்குவதற்காகவும் சில வர்த்தக நிலையங்கள் அன்பளிப்புப் பொருள்களை வழங்குவது போல ஆலயங்களில் இப்போது இசை நிகழ்வுகளையும், நடன நிகழ்வுகளையும் காட்டி ஆள் திரட்டும் வேலையே அரங்கேறுகின்றதா என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

இதைவிட குறித்த இசை நிகழ்வுகளுக்காக வழமையை விடவும் அதிகளவான ஒலி பெருக்கிச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பக்கத்துக் கோயில்காரர்களுக்கு ஏட்டிக்குப்போட்டியாக இவ்வாறு வீதியெங்கும் ஒலிபெருக்கி குழல்களை அணிவகுக்கச் செய்து, இசை நிகழ்வை ஊரெங்கும் பரவவிட்டு தமது தோள்களை நிமிர்த்திக்கொள்கின்றனர் உபயகாரர்கள். ஆனால் இதனால் - அளவுக்கு மீறிய ஒலி இடையூறால் - இந்த மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காகத் தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

**ஓடுகாலி**

ஒரு புறம் பாடங்களில் புலனைச் செலுத்தவிடாது இடையூறு செய்யும் ஒலிகள், இன்னொரு புறத்தில் அவர்களை இசை நிகழ்ச்சியை பார்க்கச் செல்லவும் தூண்டுகின்றன. இதனால் நாட்டத்துடன் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல், ஏற்கனவே கற்றதையும் மறந்து போய் பரீட்சைக்கு அவர்களும், "ஆம்பிளைக்கும் பொம்பிளைக்கும் அவரசம்" என்ற பாடலைத்தான் மாறிப்போய் எழுதி விடுகிறார்களோ தெரியவில்லை என்று உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் தந்தை ஒருவர் ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

ஆலயங்களுக்குப் போட்டியாக இப்போது சில வணிக நிலையங்களும் சினிமாப் பாடல்களை ஒரு கிலோ மீற்றருக்கு அப்பாலும் கேட்கக் கூடிய வகையில் அலறவிட்டு விளம்பரம் செய்கிறார்கள். தென்னிந்தியாவில் இருந்து அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு இறக்குமதியான ஒரு வியாபாரத் தந்திரம் "ஆடித் தள்ளுபடி". ஆடிக்கும் தள்ளுபடிக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. தம்மிடம் இருக்கும் விலை போகாத பொருள்களை மலிவு விலையில் தட்டிவிட தென்னிந்தியாவில் சில வணிக நிறுவனங்கள் தொடக்கி வைத்த உத்தி இப்போது யாழ்ப்பாணத்துக்கும் வந்து சேர்ந்திருக்கின்றது.

**இந்த ஆடித் தள்ளுபடியில் வீதியால் போவோர் வருவோரை கலந்துகொள்ளச் செய்வதற்காக சில வர்த்தக நிறுவனங்கள் அயலில் உள்ளவர்களைப் பற்றி எந்தவித அக்கறையும் அற்று தம் இஷ்டப்படி பாடல்களை மிதமிஞ்சிய தொனியில் ஒலிக்க விடுகின்றன.** இத்தகைய சில நிறுவனங்களின் ஒலி இடையூறுக்கு அஞ்சி, சில பெற்றோர் தம் பிள்ளைகளை தூரத்தில் உள்ள உறவினர் வீடுகளுக்கு இரவில் கொண்டு சென்று கற்றலில் ஈடுபட வைக்கும் வினோதமும் நிகழ்கிறது. சில பெற்றோர், தமது பிள்ளைகள் பரீட்சைக்குத் தயார் ஆகின்றனர் என்பதை விளக்கிக் கூறி, சத்தத்தை கொஞ்சம் குறையுங்கள் என்று வணிக நிலையங்களிடமும், இசைக் குழுக்களை நடத்தும் கோயில் திருவிழா உபயகாரர்களிடமும் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட போதும் அவர்கள் பெற்றோரின் வார்த்தைகளை கிஞ்சித்தும் மதிக்கவில்லை. தம்பாட்டில் முன்னரைக் காட்டிலும் அதிக ஒலி அதிர்வோடு பாடல்களை காற்றில் கலக்க விடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இப்போது மாணவர்களின் கல்விக்கு இடையூறு செய்து விட்டு பின்னர் யாழ்ப்பாணக் கல்வித் தரம் வீழ்ந்துவிட்டதாக ஒப்பாரி வைப்பதில் என்ன பயன்?